43
1856

செங்குந்த மித்திரன்.

தொகுதி - ௩ மலர்.

புரட்டாசி
Sep 1929

JL
Y592 (ம,N27eH·
N29.
144427

Registered No. M. 1514

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

தொகுதி - ௩] | சுக்கில௵ - புரட்டாசி௴ | [பகுதி - ௯

OF THE REGISTRAR ... 25 SEP 1929 ... MADRAS

உள்ளடக்கம்


பத்திரிகாசிரியர் முன்னுரை ... [illegible]
ஆராய்ச்சிப்பகுதி: வேலும் ம[illegible]ம் ... [illegible]
நமது கடிதங்கள் ... [illegible]
சமயப் பகுதி : இந்து தெய்வ மூர்[illegible]
வார்த்த விளக்கம் ... ௩௪௨
அறிவியல்பகுதி: அலுமினியம் அதன்நிலைமை... ௩௪௪
அறிஞர் அமுதமொழிகள் .... ௩௪௫
பொது விஷயம் : முயற்சி .... ௩௪௬
தொழிற் பகுதி : சாலியர் மகாநாடு ... ௩௪௮
சுகாதாரப் பகுதி: க்ஷயரோகம் .... ௩௫௧
குலதிலகர் பகுதி : அற்புதங்கள் செய்யும் அம்
மையார் .... ௩௫௩
காவல் பகுதி : செங்குந்த யாத்திரைவாசி .... ௩௫௫
செங்குந்தர் கிளர்ச்சி .... ௩௫௯
மதிப்புரை ... ௩௬௯
'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம் ... ௩௭௨


தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

சென்னை.

# மகாநாட்டு மலர்.

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள்,
தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள்
**40**-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.

வழவழப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும்
இருக்கவேண்டியது அவசியம்.

**விலை அணா 8** தபாற் செலவு **அணா 3**

---

### நமது தலைவர்களின் அழகிய போட்டோ படங்கள்

| தபாற்செலவு உள்பட விலை | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஒட்டக்கூத்தர் ... | 1 | 8 | 0 |
| தலைச்சங்க நிர்வாகசபை அங்கத்தினர் (22 பேர் கொண்ட படம்) ... | 2 | 8 | 0 |
| ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., (செங்குந்த மித்திரன் ஆசிரியர்) ... | 1 | 8 | 0 |
| தலைச்சங்கப் பிரசாரகர்கள் .... | 1 | 8 | 0 |

---

### செங்குந்தமித்திரன்
### 2-ம் ஆண்டு பைண்டு புத்தகம்

அநேகர் விரும்பிக் கேட்டதனால் செலவழிந்துவிட்ட முதல் 3 மாதப் பத்திரிகைகளையும் மீண்டும் அச்சிட்டு 12 சஞ்சிகைகளையும் சேர்த்து பைண்டு செய்துள்ளோம்.

இன்னும் சொற்ப காபிகளே உள்ளன.

**தபாற்செலவு உள்பட விலை ரூ. 2.**

---

**மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ்,**
**புவழக்காரத் தெரு, சென்னை.**

# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

[பத்திரிகாசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

| தொகுதி - ௧ | சுக்கில புரட்டாசிமீ | பகுதி - ௬ |
|---|---|---|


முருகன் துணை

உண்ணெகிழ் தொண்ட நளத்திருள் சிந்திட வொளிவிடு முழுமணியே
உயர்மறை நூல்கலை முடிவின் முடிந்திடும் ஒருகோளி மரகதமே
விண்ணொடு மண்ணை விழுங்கி யருட்கதிர் விரியு மிளஞ்சுடரோ
மெய்ப்புலன் மேய்ந்து சமைந்ததோர் வீட்டை விளக்கும் விளக்கொளியே
புண்ணிய நாறுமோர் பெண்கனி கனியும் புனித நறுங்கனியே
புள்ளுறோன வெமதுள்ளத் தடநிறை புத்தமு தக்கடலே
தண்ணொளி போக்கிய கருணைநிதியே தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் தலைமைப் புலவா தாலோ தாலேலோ.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### கல்விநிதிச் சீட்டை ஆதரியுங்கள்.

#### தலைச்சங்கத்தின் நோக்கம்.

மக்கள் தம் அஞ்ஞான இருளைப் போக்கி அவரிதயத்து மெய்யறிவென்னும் ஒளி நிலைதற்குக் காரணமாயுள்ளது கல்வியென்னும் திவ்விய தீபமே என்பது உலகமறிந்ததே. அரசியற் றுறைகளிலேனும், அறிவியற் றுறைகளிலேனும், சீர்திருத்தத் துறைகளிலேனும், சிறப்புற்றிலங்குவதும் உண்மையில் நற்பயனை யளிப்பதும் இக்கல்வியே. அதனாலேயே இதனை 'சிற்றுயிர்க்குற்ற துணை' யாகவும், மம்மரறுக்கும் மருந்தாகவும் ஆன்றோர் கூறினர். ஆதலால் எச்சமூகமேனும் தான் அடைந்திருக்கும் தாழ்ந்த நிலையினின்றும் பெயர்ந்து மேன்மையான நிலையை அடைதற்கு இதுவே ஏணிபோல் உதவுகின்றது. எல்லாத் துறைகளிலும் நமது சமூகம் பிற்போக்கடைந்திருப்பதின் காரணம் ஆறு லக்ஷம் ஜனத்தொகையுள்ள நங்குலத்தில் மொத்தம் [illegible] பட்ட தாரி[illegible] [illegible]த்தவர்கள் நூற்றுக்கிருவரேயிருப்பதேயாகும். ஆகையால் நங்குலத்தவருள் அறிவு பரவி வளரவும், நம்மவர் முன்னேற்றமடையவும் கல்வி இன்றியமையாததென்பது தேற்றம். இத்தகைய கல்வியை நம்மக்கட்குப் புகட்டுதலும் அவரிடை அறிவுச்சுடர் கொளுத்துதலுமே நமது தலைச் சங்கத்தின் முதன்மையான நோக்கமாகும்.

#### கல்விநிதியின் அவசியமும் கல்விநிதிச் சீட்டும்.

ஆனால் சுவரின்றி எங்ஙனம் சித்திரம் வரைதல் இயலும்? செல்வப் பொருளென்னும் ஆதாரமின்றி நாம் எடுத்துக்கொண்ட அரிய சமூகத் தொண்டாகிய உடல் எங்ஙனம் வளரும்? அது 'துஞ்சுமன் கண்ட கனா' வேயாகும். மேலும் வருடா வருடம் அன்பர்களிடமிருந்து நன்கொடை மூலமாகவும் சஞ்சிகையின் சந்தா மூலமாகவும் பணம் தண்டி அதைக்கொண்டு கல்வியை பரவவும் மாணவர்க்குதவி புரிதலென்றால் அது ஒரு நிலையான உதவியாக இராது. பின்னும் அடிக்கடி பணம் கேட்டுக்கொண்டிருப்பது பணம் தருபவருக்குத் தொந்தரவாக இருக்கும். இவற்றையெல்

K4427



லாம் உன்னியே கல்விநிதியொன்று ஏற்பட நிர்மானிக்க இக்கல்விநிதிச் சீட்டை ஆரம்பித்துள்ளோம். அதற்கேற்ப இந்நிதிக்கும் தொகையும் சீட்டொன்றுக்குச் சொற்பத் தொகையாகிய ஒரு ரூபாயே. இவ்வாறு ஒரு ரூபாய் கொடுத்துச் சீட்டு வாங்குவோருக்கு அதிர்ஷ்டமிருப்பின் 5,000 முதல் 3 ரூபாய் வரையுள்ள 2570 பிரைஸ்களில் ஒன்று வரலாம். அப்படி வராவிடினும் அவர்களது பணம் வீணாவதில்லை. அதனால் அளவிலா நன்மையே உண்டாகிறது. எவ்வெனில், இவ்வாறு கிட்டப்படும் பணத்தைக் கொண்டு கலைச்சங்கத்தார் நங்குல ஏழை மாணவர்க்குச் சம்பளம், சாப்பாடு முதலிய உதவிகள் செய்வதன்றி, பல ஊர்களுக்கும் சிறந்த பிரசாரகர்களை யனுப்பி நமது ஜனங்களிடை அறிவொளியைப் பரப்புகின்றார்கள். இத்தகைய சிறிய முறைகளால் நங்குலத்தில் பல அறிஞர்கள் தோன்றி அதனைச் சீர்கேடான நிலையினின்றும் மீட்டு மேனிலையில் வைப்பார்கள்.

செங்குந்தர் கடமை.

ஆகையால் இச்சீட்டுக்குப் பணமளித்து இதனை ஆதரிப்பது ஒவ்வொரு செங்குந்தருக்கும் கடமையாகும். சிலர் இந்தச் சொற்பத் தொகையைக் கொடுத்தால் தம் கடனை நிறைவேற்றுவது கட்டுமடியிலும், சூதுச் சண்டைகளிலும், மற்றத் தீய வழிகளிலும் எண்ணிறந்த ரூபாய்களைக் கொட்டியழிக்கின்றார்கள். இது பசித்து இரப்பவனுக்கு அன்னமிடாது, விலாப் புடைக்கத் தின்றவனுக்கு அபரிமிதமாய் அன்னமிட்டு அஜீரணமுண்டாக்குதலை யொக்கும். இந்தச் சீட்டுக்களை விற்பனை செய்வதற்காகப் பிரசாரகர்கள் பல ஊர்களுக்கும் செல்வார்களானால் பண நஷ்டமும் தேக கஷ்டமும் அதிகமாக ஏற்படுகிறது. வசூல் செய்யும் ரூபாய்க்கும் செலவாகும் ரூபாய்க்கும் சரியாகி விடுகிறது. சில ஊர்களில் செலவாகும் ரூபாயே அதிகமாகி நஷ்டமேற்படுகிறது. கல்வி முதலியவற்றிற்காகச் செல்வமில்லாது கஷ்டப்படும் இச்சமயத்தில் இந்த வீண்செலவைப்பற்றி அன்பர்கள் யோசிப்பார்களாக. இப்பொழுது நமது சங்கத்தின் பொருளாதாரம் மிகச் சுருங்கிக் கஷ்டமான நிலையிலிருக்கிறது. இவ்வாறே இன்னும் சிலநாட்களிருப்பின் நமது மேலான நோக்கங்களெல்லாம் அழிந்து தான் பட வேண்டும். ஆனால் சில குலதிலகர்களின் பேரூக்கத்தைக் கண்ணுறுகையில் அத்தகைய கேடான நிலை நமது சங்கத்துக்கு என்றும் வாராதென்றே எண்ணுகிறோம். நமது சங்கம் மேன்மேலும் ஓங்கி மிகச் சி[...] நடைபெற வேண்டுமென்றே நாம் பன்முறையும் நமது பன்னிருகைப் பெருமானைப் போற்றுகின்றோம்.

நிற்க, நமது குலப் பெரியோர்களனைவரும் இச்சீட்டுகளை ஆதரிக்க முன்வந்து அதன் விற்பனையைத் துரிதமாக நடத்திப் பணத்தையும் சரியாக சீட்டு நிதிக்கு அனுப்பி வருவார்களானால் நமது கஷ்டங்கள் மிகவும் குறையுமன்றோ? நாமும் அறிவுச் சுடர் கொளுத்துதற்குரிய மற்ற வேலைக்கு நோக்கைச் செலுத்தவே செலவிட வசதியும் ஏற்படும். இத்துறையில் நாம் இன்னும் செய்ய வேண்டிய வேலை பெருமிதமாக இருக்கின்றது. கல்வியைப் பெருக்க வேண்டும்; வயது முதிர்ந்தவர்களுக்குக் கல்வி போதிக்க வேண்டும்; அறிவை வளர்க்கவேண்டும்; கைத்தொழில்களில் பயிற்சியையும், கலைஞானத்தையும், நிறைந்த வியாபாரக் கூடிய முறைகளைப் பெருக்க வேண்டும்; நம் மக்களுக்கு வைத்தியம் போதிக்கவேண்டும்; நம் மக்களின் ஆசாரங்களையும் ஒழுக்கத்தையும் திருத்தவேண்டும். இந்த வேலைகளை யெல்லாம் திட்டமாகவும் முட்டின்றியும் செய்தல் நங்குலப் பெரியோர்களது உதவியும் தனவந்தர்களது உதவியும் இருந்தாலே இயலும். ஆகையால் நங்குலச் செல்வர்களை இவ்வரிய தொண்டில் ஈடுபட்டுச் சீட்டு விற்பனை முதலியவைகளில் தம்மாலான உதவிகளைச் செய்யுமாறு பன்முறையும் வேண்டுகிறோம்.

சீட்டுக்குலுக்கல் தேதி தள்ளிவைக்கப் பட்டிருக்கிறது.

கல்விநிதிச் சீட்டு நடத்துவதற்காகப் போலீஸாரது உத்தரவு பெறுவதற்கு நாளானதாலும், பல்லாயிரக் கணக்கான அன்பர்கள் ஒருங்கே குழுமுகின்ற நமது இரண்டாவது மகாநாட்டில் அனைவரது முன்னிலையிலும் சீட்டு குலுக்குவது அனைவர்க்கும் திருப்தி தருமென பல அன்பர்கள் விரும்பி எமக்குத் தெரிவித்திருப்பதனாலும் சீட்டு விற்பனை சரிவர நடவாததாலும் சீட்டுக் குலுக்குவதற்காக முன் நிர்ணயித்திருந்த செப்டம்பர் மாதம் 20-ந்தேதியை மாற்றித் தை மாதம் (1930வரு ஜனவரி ௴த்தில்) காஞ்சியில் நடைபெறும் நமது இரண்டாவது மகாநாட்டில் நங்குலப்பிரமுகர்களது முன்னிலையில் குலுக்கி பிரைஸ் எடுப்பதாகத் தீர்மானித்துள்ளோம். ஆகையால் சீட்டு வாங்கும் அன்பர்கள் அதுவரை பொறுமையுடன் காத்திருப்பதுடன் அதற்குள் இன்னும் அதிகமான சீட்டுக்களை விற்று இச்சீட்டைச் சரிவர நடத்துவதற்குதவி புரிந்து பு[...]



## ஆராய்ச்சிப் பகுதி

### வேலும் மயிலும்

இக்கட்டுரையின் மகுட நாமமாகிய "வேலு மயிலும்" என்னுந் தொடர்மொழியானது, இவ்விந்திய நாடெங்கணுமுள்ள தமிழ் நன்மக்களாஞ் சைவர்கள் பலராலும், அறுமுகப்பரனாங் குகப்பெருமானை, ஆத்மார்த்த வழிபடு கடவுளாகக்கொண்டுள்ள கௌமார சமயத்தினரெல்லோராலும், நம் செங்குந்த குலமக்கள் பல்லோராலும், கடவுள் தன்மை மிக்க மகா மந்திரமாகக் கொள்ளப்பட்டு, நாத்தழும்பேற வுச்சரிக்கப்பட்டு வருகின்றது. இவ்வரிய மொழியானது அநாதிமல முத்த சத்துச் சித்துருவாய் அழிவிலானந்த வடிவினராய் விளங்கும் அறுமுகக் குமரனின் வலது அல்கத்திலே ஞானசத்தி சொரூபமாய் விளங்கும் அழகிய வேற்படையையும், சுரர்களுக் கிடுக்கண்புரிந்து வருத்திய சூர் முதல், நம்பெருமானுடன் வந்தெதிர்த்துச் சமர்செய்து உற்றுழி வன்மையற்றுத் தளர்வெய்தி வள்ளல் உணரா வண்ணம் ஆங்கொரு மாவிருக்ஷமாகி கடல் வாய்த்தோன்ற அதனை நம்பிறைவன் வேல் விடுத்து இருகூறுபட, சேவலு மயிலுமாய்த் தோன்றி ஞான மேனீட்டினால் முருகனை யிறைஞ்ச, அவற்றுள் சேவற் பகையைத் திறல்சேர் பதாகை யெனவுஞ், சிறமரவைப் பொருதுஞ் சித்ரமயிலை வாகனமாகவும் குமரனாற் கொள்ளப்பட்ட பெருமையினை வாய்ந்த மயிற் பரியையுமே யிவண் குறிக்கும்.

வேல் என்பது சிவகுருப் பெருமானுடன் அபேதமாய் விளங்குந் தடைபடாத அறிவாகிய ஞானசத்தி சொரூபமே ஓர்வடிவாயமையப்பெற்றது. முதற் பெருங்கடவுளாஞ் சிவபெருமானே யறுமுகக் கடவுளாயவதரித்தனன். சிவன் வேறு, முருகன் வேறு அல்ல. அங்ஙனம் பேதமாய்க் கொளல் மடைமையோர் கூற்றே. முக்கணிறையே முருகனாயவதரித்தானென்பதை

"மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடு நிமலமூர்த்தி
அறுமுக வுருவாய்த்தோன்றி யருளொடுசரவணத்தில்
வெறிகமழ் கமலப்போதில் வீற்றிருந்தருளினனே."

என்னுஞ் செய்யுளாலும்,

"ஆறுபொறை கங்கைசெய் வானவள்ளியாள்முருகன்
கோவிவிடம் மயில்கொன்றை மாலைகுளிர் கடப்பந்
தோகிமுகமைந்து மாறுமுகம்முச்சூல் கதிர்வேல்
ஒளியவைந்தொழுக் தாறெழுக் தாஞ்சடருற்பனமே"

எனவருஞ் செய்யுளாலுமுய்த்துணர்க. வேலாவது சத்தியின் கூட்டம். அது மூன்று சதுஷ்கோணங்களாற் குறிக்கப்படும். இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்னு மூன்றன்பர சொரூபம் முக்கோணமாகவும், அவற்றின் பர சொரூபம் அந்த முக்கோணத்தின் பாதகோணமிரண்டையும் ஆதாரமாகக் கொண்டு முக்கோணமாகவும் விரிந்து இரண்டுங்கூடி நாற்கோணமாகும். அந்த அதோ முகக்கோணத்தின் நுனியினின்றும் பின்னுமந்த சத்திகள் தம்முள்மாறி இச்சையில் கிரியை கிரியையில் ஞானம் ஞானத்தில் இச்சை யெனக்கூடித் திரிகோணமாகும். அந்தத் திரிகோணத்திலிருந்து அபர சொரூபமாகிய முக்கோணமுதிக்கும். அவையிரண்டுங்கூடி மத்திய சதுஷ்கோணமாகும். அதன் அதோ முகக்கோணத்தினின்று மீளவும் அந்த சத்திகள் தம்முள்மாறிக்கூடி முக்கோணமாகும் அதினின்று பின்னு முக்கோணமாகக் கூடிச் சதுஷ்கோணமாகும். இந்த மூன்று நாற்கோணங்களுமே வேலாயுதமாகும். முதற் சதுஷ்கோணத்திலிச்சா சத்தியும், மத்திய சதுஷ்கோணத்தில் ஞானசத்தியும், பாத சதுஷ்கோணத்தில் கிரியா சத்தியுமுதித்து நிற்கும். இச்சத்திகளெல்லாம் ஒருங்குகூடி ஒருருவாய்க் கொண்டதே வேலாயுதமெனப்படும். மூச்சத்திகளின் சொரூபமாதலால் மூவிலை வேலெனவும் படும் இதனை

"இச்சாஞானக் கிரியையெனுமிவை
மூன்றிலையாய்க் கிளைத்தெழுந்திட்
டச்சாணுழியறச் சுவற்றுமயில் வேலொருகை
வலத்தமைத்து."

என வருங்கணிகைப் புராணத்தாலுமுணர்க. இச்சை, ஞானம், கிரியை யென்று புகலப்பட்ட வள்ளி முருகன் தெய்வயானை என்னுமிம்மூவர் வடிவங்களும் ஒருங்கமையப் பெற்றதே

வேலென்றுங் கூறுவர். ஞான சக்தியைவிட்டு இச்சை கிரியை என்னுமுப சக்திகள் பிரியாவாகலின், ஞானசக்தி வடிவமாயுள்ள சுப்பிரமண்ணியக் கடவுளுக்கு இச்சா சக்தியும், கிரியா சக்தியும் வள்ளி தெய்வயானை என்னுந்தேவிகளாகப் பாவிக்கப்படுகின்றன.

இனி மயில் என்பதற்கு மகாபதி மகளும் வள்ளியந் திருவுஞ் சுகமணஞ் சூட்டுஞ் சுந்தர முருகனை ஒலகயால் வாகைக்கலாபம் விரித்து உன்னுதற்கரிய தன் வென்னிமிற் சுமந்து அன்பாகத்துறுமாரிருளோட்டி இன்புறக் காட்சியீந்து அவருய்வான், வாகனமாய் விளங்கும் மகிமை மிக்க மயூரமென்பதே பொருள். மஞ்ஞை, மயூரம், சிகி, கேகயம் தோகை, பீலி கலாபம் எனப்பல நாமங்களும் மயிலுக்கே கூறுவதுண்டு. சூரபதுமனுடன் பெருமான், ககனமிசைப் போர் செய்யுங்கால் இந்திரன் மயிலாய்த்தோன்றி முருகனைச் சுமந்து தொண்டியற்றினனென்றும். ஆகலின் முடிவில் சூரபதுமன் வலிமிழந்து குகனை வெல்வதரிதெனமனத்துட்கொண்டு மாவிருக்ஷமாய்த் தோன்றிநிற்க அதை அறுமுகத்திறைவன் வேலினலிருகூறாக்க பின்னர் சேவலு மயிலுமாய்த் தோன்றி, சேவலைக் கொடியாகவும் மயிலை வாகனமாகவுங்கொண்டு ஊர்ந்தருளவேண்டு மென்றிரந்தானென்றும், வேண்டிய வேண்டியவாறீயும் வேற்படை விமலன் அவ்வாறே அவனுக்கருள் செய்தானென்றுங் கந்தபுராணங் கூறுதல் காண்க.

இதுகாறுங் கூறியவாற்றான் வேலு மயிலுமென்பதன் பொருளையும், அவை நம் முருகனுக்குரித்தான தன்மையைப் பற்றியும் ஒருசிறிதுணர்ந்தவர்களானேம். நம் முருகப்பெருமானுக்குத் தோமரம்,துவசம், குலிசம், அங்குசம், அம்பு. பங்கயம், மணி, மழு, தண்டு, வாள், வில், என்னும் பதினெரு ஆயுதங்களிருக்கவும், ரதம், கஜம், துரகம், மேடம், இடபம், முதலிய வாகனங்களிருக்கவும் வேலு மயிலுமென்னுமிவ்விரண்டனையுமே மிகச்சிறப்பாக நம் பண்டையோர் கொண்ட கொள்கையைப் பற்றியும், சடாக்கரம், பஞ்சாக்கரம். அட்டாக்கரம் முதலிய மகா மந்திரங்கள் போலவே, இதனையுருவேற்றி ஜெபித்தலின் நன்மையைப் பற்றியும், இவ்விரண்டனைய மிகச் சிறப்பாகக்கொண்டாடி ஆன்மலாப மடைந்த பெரியார்களின் சரித்திரங்களைப்பற்றியும், அத்தகைய பெரியார்களின் மாட்டு குகப்பெருமான் திருவருட்டிறங் காட்டிய பெருமைகளைப் பற்றியும் எண்டெடுத்தாராய்தலே நம் வியாசத்தின் முக்கிய நோக்கமாகும் எனவே அவ்விடயங்களைப் பற்றியாராய்ச்சி செய்யப்புகுவாம்

I. வேல் எவ்வகையில் சிறந்ததென நோக்குமிடத்து முன்னரே சிவகுக பெருமானினின்றும் வேறுபடாத அறிவுமயமாகிய ஞான சக்தி சொரூபமே வேலென்று கூறினேம். இதனை

"எத்திறத்தரு நங்களை வெல்கில ரெமது
சத்தி வென்றிடு மென்றனன் கண்ணுதற் றலைவன்"

என்ற கந்தபுராணச் செய்யுளா லறிக. தவிர, மற்றைய வாயுதங்கள்போலச் சடத்துவ மின்றிச் சித்த்துவ முடைமையானும், வேறெவ்விதபடையானுந் தானழிக்கப் படாமல் நாயகம் பெற்று நிற்றலானும். காலென்றே பலப்பல வருவன்கொண்டு வென்று மேம்பாடுறலானும் அறிவுமயமாய் விளங்கிக் கம்மை யடைந்த ஆன்ம கோடிகளின் பந்தங்களை யறுத்து இறைவன் றிருவடிப்பேற்றை நல்கலானும், ஞான சக்திதர மூர்த்தியாகிய அறுமுகப் பெருமானின் வடிவமே தானு யமைதலானும், நம்முன்னோர்கள் வேலினை விழுமிதாய்க் கொண்டனர் இவ்வேல் தன்னை யடைந்த வான்மகோடிகளின் சன்மப் பகையை யகற்றி, மும்மலக் காட்டை யழித்து. ஆகாமிய சஞ்சித பிராரத்துவ கரும வினைகளைப் போக்கவல்ல தென்பதனை,

"பல்கோடி சன்மப் பகையு மவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்—பல்கோடி
பாதகமும் செய்வினையும்"

என்னும் கந்தர் கலிவெண்பா வானும், "வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்" என்றருணகிரியார் கூறியதானு முணர்க. "சூர் முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்" எனவும், மாமுதல் தடிந்த மறுவில்கொற்றத் தெய்யா நல்லிசைச் செல்வேற் சேய்" எனவும் புகழ்ந்தோதுவான் விளங்கி, ஆணவம். மாயை, கன்மம், என்னும் மும்மல மென்றெண்ணப்பட்ட சூரபதுமன், சிங்கமுகன், தாருகன் என்னும் மூன்று அசுரர்களை அழித்தமையானும், சமர் பொருதுங் காலை பாநுகோபன் சிங்கமுகன் இவர்கள் விடுத்த மாயா பாசங்களாற் பிணிக்கப்பட்டு வீரவாகு தேவர் முதலிய வொண்டின்மர் மயங்கியவழி, அறுமுகத் திறைவனுல் விடுக்கப்பட்ட இவ்வேல் அம்மாயா பாசங்களைச் சிதைத்து எளிதில் அவர்களை மீட்டமையானும், வேலானது மும்மலங்களை யொருங்கே அறுத்து மாயாபாசங்களை விலக்கி மெய்யுணர்வூட்டி யளிக்க வல்லதென்பது பெறப்படுகின்றது. இதன் விரிவை யெல்லாம் கந்த புராணமென்னு மகா காவியத்திற் காண்க. தவிர இவ்வேலானது, ஞானமே வடிவாய பராசத்தியம்மையாரால் நிருமிக்கப் பட்டு ஞானபண்டித சாமியாகிய நம் அறுமுகனின் கரத் தமர்தலானும்,

"சூரர்க்கு முனிவரர்க்கு மகபதிக்கு விதிதனக்கு
மரிதனக்கு நரர்தமக்கு முறு—மிடுக்கண்வினை சாடும்"

என்ற அருணகிரியாரின் அமுத மொழிப்படி மகவானுதி சுரர்க ளிடுக்கண்களையும், அரியயனுதி கர்த்தாக்களின் துயர்களையும் முனிவோர் முதலிய தவ சிரேட்டர்களி னின்னல்களையும் நரர், விலங்கு, புள், முதலிய ஜீவராசிகளின் துன்பங்களையும் ஒருங்கே யகற்றி யிடுக்கண் களைதலானும்

"துதிக்கு மடியவர்க் கொருவர் கெடுக்க
யிடர்நினைக்கினவர்,
குலத்தைமுதல றக்களையும்—எனக்கோர்
துணையாகும்"

என்றபடி தன்னை வழிபடுந்தொண்டர் குழாங்கட்குத் துணையா யிருந்து அவர்கட் கின்னல் புரியநேர்வாரையுங் குலமுதல் வேரறக் களைந்து அவ்வன்பர்கட் கெந்நலமும் பாலித்துத் திருவருட் புரிதலானும்

"தனித்து வழிநடக்குமவ ரிடத்துமொருவலத்து மிரு
புறத்து மருகடுத்திரவு—பகற்றுணையதாகும்"

என்ற பெரியார் வாக்குப்படி தனித்து வழி நடக்கும் அன்புள்ள பிரயாணிகட்குத் தக்க துணையாகி அவர்கட் கச்ச மகற்றலானும், தன்னைப் பக்தியுடன் சிந்தித்து தரிசித்தோர்கட் கழிவி லின்ப முத்தியளித்தலானும், நம் வழிபடு கடவுளாங் குமரன் கை வேலாயுதம் அறிவு மிக்க நம் முன்னோர்களால் மிகுந்த சிறப்பினையுடையதாகக் கொள்ளப்பட்டு, போற்றி வழிபடற்குரித்தாயிற்று. இதன் சீரிய சிறப்பினை நோக்கி யன்றோ "உம்பரைக் காத்த வொண் வேலிலையோ" என்று ஆன்றோருங் கூறுவாராயினர். வேலாயுதமானது அச்ச மகற்றி யருள் செய்யுமென்பதனை

"பச்சை மயில்வாகனமும் பன்னிரண்டு திண்டோ
அச்சமகற்று மயில்வேலும்" (ளும்





என்னுங் குமரகுருபர சுவாமிகள் திருவாக்கானுணர்க.

II. இனி மயில் எவ்வகையி லேற்றமுடைத் தெனக் கொண்ட தென்னையோவெனிற் கூறுதும் :—மயில் குறிஞ்சி நிலப்பறவை யாதல்பற்றி நங் குறிஞ்சி நிலத் தெய்வமாகிய குமாரமூர்த்தியார்க் கப்பறவையின்மீது மிக்க விருப்பம். அதனாலதனை யூர்தியாகக்கொண்டு மூர்ந்தனன். புள்ளினங்களில் மயில் வெகு அழகியது. முருக னிம் மயிலினழகின் காரணமாய் வாகனமாய்க் கொண்டூர்ந்தன னென்பது நோக்கியே, தேவேந்திரன் செருமுகத்துற்ற செவ்வேற் பரமனை சிகியுருவேற்றுச் சுமந்து சூர்ப்பகை கடிந்து தன திடுக்கண் நீங்கப்பெற்றுச் சுகமெய்தினன். ஆயிரத் தெட்டண்டங்கட் கதிபதியா யாட்சிசெய்த சூரபதுமனு மிச்சூட்சியையோர்ந்தே யீற்றில் தோகையுருவேற்று வாகைகொள் வேலனை யென்றுஞ் சுமக்கும் பொன்றுவாழ் வெய்தினன். தேவேந்திரன் சூரபதும னிவர்கள் இவ்வரிய வாழ்வடைந்ததற் கெல்லாங் காரண மிம் மயிலுருவேற்றதனு லன்றே. ஆதலின் நம் பண்டைக் காலத்து முன்னோர்களா மன்பர்கள் முருகக் கடவுளி னன்பிற்குரித்தாய் நின்ற மயிலை வேலுடன் சேர்த்துப் பெருமையாய்ப் போற்றி வணங்கி வழிபடுவாராயினர். தவிர அறுமுகக் குமரன் அன்பர்கள் தவத்திற் கிரங்கி தரிசனந் தருவான் எண்ணுழி யவ்வன்பர்களிட மப் பெருமானைக் கொண்டுசேர்த்துக் காட்சி யளித்த விம்மயிலின் செய்கை யன்றோ. ஆதலின் மயிலின் தயையையு முடையார்க்கன்றோ அறுமுகன் தரிசன மெளிதிற் கிடைக்கும். இதனை விளக்க அருணையில் நடந்த வோர் சரித்திரத்தை இங்கு உங்களுக்கு ஞாபகமூட்டி மேற் செல்லுவோம். அம்பிகையின் உபாசனை மிக்க சம்பந்தாண்டானுக்கும், முருகக்கடவுளுபாசனையிற் சிறந்த திருப்புகழ்பாடிய நம் அருணகிரியார்க்கும் ஓர் சமயம் விவாதம் நேர்ந்து தத்தமுபாசனமூர்த்திகளை, ஆண்டு அரசு செலுத்தி வந்த ப்ரபுடதேவ மகாராஜன், கண்டு தரிசிக்குமாறு வரவழைக்கிறதென்றும், இதில் தோல்வியுற்றவர்கள் ஊரைவிட்டுத் துரத்தப்படுகிறதென்றும் முடிவு செய்துகொண்டு அதற்கென நியமிக்கப்பட்ட தினத்தில் முதலில் சம்பந்தாண்டான் ஆகம விதிப்படி அம்பிகையினது அருள் உருவத்தினை மனதிலிருத்தி ஹோமாதி சகல கிரியைகளும் நடத்தி "இந்த வேளையிலாசனும்

அறியும் வண்ணம் தரிசனந்தந்தருள்" என அம்பிகையை வேண்டி நின்றனன். தேவியோ சம்பந்தாண்டானுக்கு மட்டில் தரிசனம் தந்து சம்பந்தாண்டான் அரசனுக்கும் தரிசனந்தருமாறு வேண்டவுஞ் செவிகொடாளாய் மறைந்தனள். அதனால் நாணுற்ற சம்பந்தாண்டான் அரசனை நோக்கி நீர் அம்பிகையை நோக்கி வருந்தித் தொழுதிறைஞ்சியடிமைபூண்டு உபாசனை செய்தாலல்லது தேவியின் தரிசனம் உமக்குச் சித்திப்பதரிதெனப் புகன்றான். அரசன் சிற்றங் கொண்டானாயினும் அருணகிரியாரால் அறுமுகன் காட்சிகிடைக்கும் என்னும் அவாமேலீட்டால் சிற்றந்தணிந்து அவரை வணங்கி முருகனை வரவழைக்குமாறு பிரார்த்தித்தான். அருணகிரியாரும் குறிப்பிட்டவிடத்தில் தமது நியமப்படி ஸ்நானம்செய்து விபூதி ருத்திராக்கமணிந்து பூஜா மண்டபம் புகுந்து எழுவகை திரை யிடுவித்து "குமாரதந்திர விதிப்படி" கிரியைகளியற்றி வழிபாடு செய்வாராயினர். தோல்வியுற்ற வஞ்சகனும் அம்பிகையை நோக்கி துதிசெய்து குமாரக்கடவுளை அரசனுக்கும் அருணகிரியார்க்குந் தரிசனந்தராவண்ணம் தமது மடிமீதிருத்தி வெளிவிடா வண்ணம் இறுகத் தழுவிப் பிடித்துக்கொண்டு முருகன் வாராமல் தடைசெய்திருக்குமாறு வேண்டி துதி செய்துகொண்டிருந்தான், அம்பிகையு மவ்வாறே குமரனை விடாமல் மடிமீதிருத்தி வைத்துக் கொண்டிருந்தனள். இஃதிவ்வாறாக அருணகிரியாரும் தமதுஉபாசனாமூர்த்தியாகிய முருகனை மிகவும் துதித்துக் கொண்டாடியும் விரும்பியவாறு வேலன் தரிசனந் தந்தானில்லை. காரணம் யாதாயிருக்கலாமென்று ஞானநேத்திரங் கொண்டு சம்பந்தாண்டான் செய்த சூட்சியோர்ந்த நம் அருணகிரியார் அம்பிகை குமரனை வரவொட்டாமல் தடை செய்திருப்பதோர்ந்து முருகன் மனமுவக்குமாறு

"பவுரிவருமொரு மாகத தாகத—மிசையேறி
பழைய வடியவருடனிமை யவர்மண
மிருபுடையுமிகு தமிழ்கொடு மறைகொடு
பரவவருமதி லருணையிலொருவிசை—வரவேணும்
(திருச்செங்கோடு—151) எனவும்

"கருணைபொழி கமலமும் மாறுமிக் துளக்
தொடை மகுட முடியுமொளிர் நூற்புரஞ்சாண்
கலகலென மயிலின்மிசை யேறிவந் துகந்—தெனை
யாள்வாய்
(சுவாமிமலை 14) எனவும்

பரிவொடந்த கோடி முனிவர்கள் புகழ்ந்து பாடு
படுமயிலுடன் குலாவி—வரவேணும்
(சுவாமிமலை 12) எனவும்

"பருந்தமயின்மிசை நினைத்தபொழுதென
பதந்தமலரினை யருள்வாயே (திருத்தணிகை 542)

எனவும் சில திருப்புகழ்களை யுருக்கமுடன் பாடித் துதிக்கவும் முருகன் தரிசனங்கிடைத்திலது. இந்த சந்தர்ப்பத்தில் மயிற் பரியினுடைய சகாயமிருந்தாற்றான் குமரன்றரிசனங் கிடைக்குமென்று கருதிய அருணகிரியார், மயிலை வேண்டித் துதித்து "மயில் விருத்த" எனப் பெயரிய பிரபந்தமொன்றை அம்மயிலின் மீது பாடித் துதித்தனர். அன்பருளக்கருத்துணர்ந்த மயிலும் அம்பிகை முன்தோன்றி நீலகண்டமும் சர்ப்பாபரணமும் காட்டி நடனம் புரிந்தது. அதனழகிலும் நடனத்திலும் கவனஞ் செலுத்திய அம்மையார் கரங்கள் சிறிது தளர, தருணம் பார்த்திருந்த முருகனுந் தாய் மடியினின்றும் நீங்கி மயின்மீதேறி, அருணகிரியார் பூஜா மண்டபச் சபையினிடமாக,

"சம்பைக் கொடியிடை விபுதையினழகுமு
னந்தத் திருநடமிடுசா னழகுற
சந்தச் சபைதனி லெனதுள முருகவும் வருவாயே
(சுவாமிமலை 13)

என்று பாடித்துதித்துக் கொண்டிருக்கும், அருணகிரியார் முன் அரசனுக்கும் தரிசனந்தந்தருளினார். சம்மந்தாண்டானும் அரசன் ஆக்கினையின் பிரகாரம் ஊரைவிட்டகன்றனன். இச்சம்பவத்தை நம்மருணகிரியார்

"அதல சேடனாட அகிலமேரு மீதாட***
***மயிலுமாடி நீயாடி வரவேணும்
* * * *
"உதயதாம மார்பான ப்ரபுடதேவமாராஜ
னுளமுமாட வாழ்தேவர் பெருமாளே."
(திருச்செந்தூர் 38)

என்ற பாசுரத்தில் மிகச் செம்மையாகக் கூறியுள்ளார். ஆகையால் வேலன் றரிசனம் விரைவில் வேண்டுகர் மேன்மை மிக்க அவர் வாகனமாய் விளங்கும் மயிலையும் போற்றித் துதித்தல் வேண்டும், ஏனென்றால் சகலான்மகோடிகளின் பிறவித் துன்பமகற்றி அழிவின்பமுத்தியாகிய சுகாதீதப் பெருவாழ்வாம் மோக்ஷ வீட்டினையளிக்க வல்லது நம் முருகன் திருவடியேயாதலால்

"தாவடியோட்டு மயிலிலுந்தேவர் தலையிலுமென்
பாவடியேட்டிலும் பட்டதன்றோபடி மாவலிபால்
மூவடிகேட்டன்று மூதண்டகூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும்பெருமான் மருகன்சிற்றடியே"

என்றபடி தேவர்களாலுங் காணுதற்கரியதும், வேதங்களாலு முணர்தற்கெட்டா மகிமை வாய்ந்ததுமான அத்தகைய திருவடியை இம்மயில் தனது முதுகிற் சுமந்து திரியும் அரும்பெரும் பாக்கியத்தையுறலானும், அத்திருவடிப் பேற்றை விரும்பினோர் அடையும் வண்ணம் முருகனைக் கொண்டு காட்சியளித்துத் தரிசனம் செய்விக்கவல்ல தொழிலை மேற்கொண்டிருத்தலினாலுமென்க. இது நோக்கியன்றோ அருணகிரியாரும்

"கார்மாமிசை காலன்வரிற் கலபத்
தேர்மாமிசை வந்தெதிரப் படுவாய்" என்றும்

"மாகத்தைமுட்டி வருசெங்கூற்றம் வந்தாலென்
தோகைப் புரவியிற்றோன்றி நிற்பாய்" (முன்னே என்றும் கூறுவாராயினர். இதனாலுங் கூறியவாற்றான் அறுமுகக்குமரன் தரிசனத்தையும், முத்திப்பேற்றையு மெளிதிலளிக்க வல்லது இம்மயிலாதல்பற்றி நம் முன்னோர்களிதனை மிகச் சிறப்பாகக் கொண்டனரென்பது வெளித்தறியக் கிடக்கின்றது.

(தொடரும்)

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர்,
சைவசித்தாந்த செங்குந்த சமாஜம், கண்டாச்சிபுரம்.



## நமது கடிதங்கள்

### நமது ராமேஸ்வர மடம்

பத்திரிகாசிரியர் அவர்கட்கு

ஆவணிமித்திரனில் இம்மடத்துச் சம்பந்தமாக வெளிவந்துள்ள மெய்யம் புளி சகோதரர்கள் நிருபத்தைக்கண்டு யான் மிகவும் வருந்துகிறேன். இவ்விஷயத்தைக் குறித்துக் கவனிக்கவேண்டியது இராமநாதபுரம் ஜில்லாச் செங்குந்தர்களின் கடமையேயாகும். தூரத்திலுள்ள எனையோர் முயல்வார்களென்று எதிர்பார்க்கலாகாது. முன்னோர் தேடிவைத்தவற்றையும் காப்பாற்றத் திறமையற்ற நிலைமைக்கு நம்மவர்கள் வந்துவிட்டனர் என்பதற்கு வேறு சாக்ஷியும் வேண்டுமோ? அந்தோ அதை நினைக்குந்தோறும் என்மனம் பதைக்கிறது. ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை ஓட்டுகிறதே. எத்தனை மடங்களை நாம் இவ்வாறே இழந்து வருகிறோம். இழந்திருக்கிறோம். இதற்குக் காரணம் என்ன? தற்காலத்தில் நம்மவர்களுக்குப் பெரும்பாலும் கல்வியறிவென்பதே கிடையாது. பொதுநல வுழியத்தை அடியோடு மறந்துவிட்டார்கள். குலாபிமானம் இல்லை. சுயநலமே நமது நாட்டாண்மைக்காரர்கள் மனதில் குடிகொண்டிருக்கிறது. இத்தகையோர் பார்வையிலிருக்கும் மடங்கள் முதலியவைகளே பிறரால் எளிதில் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் பொதுநல உழைப்பும், குலாபிமானமும், பெருந்தன்மையுமுள்ள பெரியோர்கள் பார்வையிலிருக்கும் மடங்களும் தர்மங்களும் மிகவும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன என்பதை நான் மறந்துவிட்டதாகக் கருதலாகாது.

சில பண்டாரங்களை யோக்கியர்களென நம்பிக் குமாஸ்தாக்களாக மடங்களில் வைத்துச் சோம்பலால் அவர்களிடமிருந்து வரவுப் பத்திரம் முதலியவை அப்போதைக்கப்போது எழுதிவாங்காது விட்டுவிடுகிறார்கள். சில சமயங்களில் அறியாமையால் அப்பண்டாரங்களை குமாஸ்தாக்களென எண்ணாது எஜமான் ஸ்தானத்தில் வைத்து அவர்களுக்கு அடிமைகளைப் போல் அடங்கி நடந்துவருகிறார்கள். சில சுயநல நாட்டாண்மைக்காரர்கள் அற்பத்திற்கு ஆசைப்பட்டுப் பொதுஜனங்களின் விருப்பத்திற்கு மாறுகப் பண்டாரங்களுக்கு அனுகூலமாகவு மிருந்துவருகிறார்கள். அதிகாரத்திலுள்ளவர்களை இவ்வாறிருக்கவிட்டுப் பொதுஜனங்கள் என்னதான் செய்வார்கள் தெரியவில்லை! ஒவ்வொரு வூரிலும் சில வீடுகளில் தெருக்களிலும் கஞ்சிபோட்டுக்கொண்டு கோர்டிறகும் வக்கீல்களுக்கும் இராப்பகலாகக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தை அறிவீனத்தால் வாரியிறைப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கும் இவர்களுக்கு இத்தகைய பொதுக்காரியங்களைக் கவனிக்க பணமும், நேரமும், எண்ணமும் எங்கே இருக்கும். இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள மற்றெருமடத்தை நாட்டாண்மைக்காரர்கள், பொதுஜனங்கள் விருப்பத்தை

வந்தோம். வந்தும் அதற்குரிய வசதிகளைத் தும் நாம் இன்னும் தேடிக்கொள்ள முடியாம லிருப்பதற்கு வருந்த வேண்டிய நிலையிலேயே இருக்கின்றோம்.

மேல்நாடுகளில் கல்வி யபிவிருத்திக்காகத் துரைத்தனத்தாரே யன்றிச் செல்வம் நிறைந்த சீமான்கள் செய்யும் தருமம் அளவு கடந்ததே. உலகப் பிரசித்திபெற்ற சர்வகலாசழகங்களும் அவைகளைச் சார்ந்த கல்லூரிகளும் பணக்கா ரர்களின் தர்ம ஸ்தாபனங்களேயாம். மாணாக் கர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உயர் தரக் கல்வி பயின்று, ஆராய்ச்சித் துறைகளில் பழகி,நிபுணர்களாவதற்கு ஏராளமான உபகார நிதிகள் ஏற்படுத்தியிருப்பவர்கள் மேல் நாடு களில் ஆயிரக்கணக்காக உள. இத்தகைய உப கார நிதிகளே அந்நாடுகளின் கல்வி மேம்பாட் டிற்கு அநுகூலமாயிருக்கின்றன. செங்குந்த சமூகத்திடையே அத்தகைய செல்வச் சீமான் கள் இல்லை யென்று சொல்ல முடியாது. இச் சீமான்கள் ஒன்று சேர்ந்து நமது “செங்குந்தர் கல்விநிதியை” விருத்தி செய்ய முற்படுவார்க ளானால் நமது சமூக முன்னேற்றம் அதிவிரை வில் கைகூடும். இந்நெறியே நமது சமூக முன் னேற்றத்திற்கு அறிவாளிகள் கண்ட குறுக்கு வழி என்று சொல்லலாம். இதைக் கவனியாது நாம் ஆசார சீர்திருத்தம் தொழில் சீர்திருத்தம் முதலியன செய்யப்புகுவோமானால் நம்முயற்சி யெல்லாம் விழலுக்கிறைத்த நீராகுமே யொழிய யாதொரு நற்பயனையுந் தராது. இவ்வுண் மையை நமது வாசகர்கள், தம் மனதில் பதிந்து கொள்ள வேண்டுமென யாம் பன்முறையும் வற்புறுத்துகின்றோம்.

சமூகத் தொண்டாற்றும்போது நாம் அப் போதைக்கப்போது ஒரு இலக்கை வைத்துக் கொண்டே உழைக்கவேண்டும். பல இலக்கு களை வைத்துக்கொண்டு உழைக்க முற்படுவோ மானால் எந்தத் துறையிலும் நாம் ஒழுங்காக வும் தீர்மையாகவும் வேலை செய்ய இயலாமல் அரைகுறையாக வைத்துவிட்டு எந்நோக்கமும் கைகூடப் பெறோம் என்பதை அறிஞர்கள் உணருவார்கள். ஆகவே இப்போது நமது நோக்கம் நமது சமூகத்தவரின் கல்வியபிவிருத் திக்கான அனுகூலங்களைத் தேடிவைத்தலான ஒரே நோக்கமாக இருக்கட்டும். இந்நோக்கம் சிறிது நிறைவேறியதும் மற்ற துறைகளில் உழைக்க இறங்குவோம்.

ம. ச

# செங்குந்தர் கல்வி நிதி

இக் கல்விநிதி நமது முதலாவது மகாநாட்டின்கண்
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவில்
நம்மவர் கல்வி அபிவிருத்திக்காக ஏற்படுத்தப்பட்டது.

இதற்கு அன்பர்கள் மகாநாட்டின்கண் நிறைவேறிய தீர்மானத்தின்படி

1. மகமை ஏற்பாடு செய்யவும்,
2. உண்டி வசூலித்து அனுப்பவும்,
3. சடங்குகளில் கட்டணம் செலுத்தவும்,
4. ஊர்ப்பொதுப் பணங்களிலிருந்து பங்கு தரவும்,
5. நன்கொடை அளிக்கவும்

வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
பி. சே. மாணிக்கவாசக முதலியார்,
தலைச்சங்க அமைச்சர்கள்.

# ஒட்டக்கூத்தர் திருநாள்

ஆவணி௴ 30உ சனிக்கிழமை (14-9-29)

வருஷா வருஷம் இத்திருநாளைக் கொண்டாடுவது செங்குந்த குல மக்கள் குழுமி வசிக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் அவசியமாகு மெனச் சென்ற இரண்டு வருஷங்களாக நமது மித்திரனில் எழுதி யிருந்தோம். அவ்வண்ணமே பற்பல விடங்களிலும் அத்தினம் விழாக் கொண்டாடப் பெற்றுக் குந்தத்தின் பெருமையை நிலைநாட் டிய இக்குலதிலகருக்கு நாம் இயற்றவல்ல சிறந்த கைம்மாறாக இது வரை நூற்றுக்கணக்கான செங்குந்தர் சங்கங்கள் தோன்றி நம்மவ ரிடையே ஒரு பெருங் கிளர்ச்சியை யுண்டாக்கி யிருக்கின்றன. இச் சங்கங்களெல்லாம் இவ்விழாவினை இவ்வருடமும் கொண்டாடிப் புதுச் சங்கங்களையும் புத்துணர்ச்சியையும் நம்மவரிடை உண்டாக்கிப் புது உற்சாகத்துடன் முன்னிலும் பன்மடங்கு தீவிரமாகக் குலத் தொண்டில் ஈடுபடுமென எதிர்ப்பார்க்கின்றோம்.

இத்திருநாளன்று நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகள்—கூத்தர் பெருமான் திருவுருவப் படத்தை அலங்கரித்துப் பூசித்தல், அபிடேக ஆராதனைகள் செய்தல், அவ்வவ்வூரிலுள்ள ஏழைகளு க்கு அன்ன மளித்தல், கவிச் சக்ரவர்த்தியாரது சரித்திரத்தை பல ருங் கேட்டின்புறுமாறு உபந்யசித்தல், குலமுன்னேற்றத்துக்கான ஏற்பாடுகள் முதலியன.

பத்திரிகாசிரியர்.

☞ கூத்தர் படம் தேவையானவர்கள் நமது தலைச்சங்கத்திற்கு ரூபாய்1-8-0 அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். தயாரித்த படங் கள் பெரும்பாலும் செலவாய் விட்டபடியால் இன்னும் சில காப்பிகளே இருக்கின்றன.

ஆதரித்துப் பல சந்தாதாரர்களாய்ச் சேர்ந்தும் சேர்ப்பிக்குமாறும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நிற்க சென்ற சில மாதங்களாக "நம்மித்திரனுக்கு" சந்தாதார்கள் சேர்க்க முயற்சித்ததின் பயனாய், சென்ற ஞாயிற்றுகிழமை (14-7-29) யன்று யாமும் அடியில் கண்ட அன்பர்களும் வெளியபோந்து நம சமூகத்தினர்கள் வதியும் இடங்களுக்குச் சென்று நம் சமூகத்தின் தற்கால நிலைமையைப்பற்றியும் மித்திரனின் இடைவிடா உழைப்பைப்பற்றியும் இவ்வொருவருக்கும் ஊக்கமூட்டிப் புதியதோர் உணர்ச்சியை எழுப்பி அதே நிமிஷத்தில் (25) இருபத்தைந்து சந்தாதார்களைச் சேர்ப்பித்து சந்தாத் தொகையாகிய ரூபாய் (50) ஐம்பதையும் இத்துடன் அனுப்பியிருக்கின்றோம்.

செங்குந்த மித்திரன் செழித்தோங்க விரும்பும்

ஆ. அருணாசல முதலியார்,
நத்தமங்கலம், (மாயவரம் ஜில்லா.)
சா. திருவேங்கட முதலியார், நாங்கூர்.
வை. பக்கிரி முதலியார், நாங்கூர்.
கோ. ரத்தினசபாபதியார், இலுப்பூர், மாயவரம் தாலுக்கா.

## சமயப் பகுதி

### இந்து தெய்வ மூர்த்த தத்துவார்த்த விளக்கம்

(மித்திரன் தொகுதி 3, 302-ம் பக்கத் தொடர்ச்சி)

**விநாயகமூர்த்தம்—(தொடர்ச்சி)**

விநாயகர் என்னும் திருநாமத்திற்கு அறிவுடைய பெருமக்கள் பலவேறு விதமாகப் பொருள் கொள்ளுகின்றனர். அவை வருமாறு:—

1. வி - மேலான, நாயகர் - தலைவர் எனப் பொருள் கொண்டு தனக்கொரு தலைவரை வேண்டாத, அதீதப்பட்டு ஒப்பற்ற மாபெருந் தலைவராய்த் தாமே விளங்குபவர் எனவும்,

2. வி - கல்வி, நாயகர் - தலைவர், சகலவிதமான கலைகளுக்கும் காரணபூதராய் எல்லா முணர்ந்தவராய், கல்வியி னுயர்தலைமை தலைமை பூண்டவராய், தன்னை யடைந்தார்க்கு எளிதில் கல்வியைத் தருபவர் எனவும்;

3. வி - திசை, நாயகர் - தலைவர், எனக் கொண்டு எத்திசைக்கும் (சர்வ லோகங்களுக்கும்) தாமே தலைவர் எனவும்;

4. வி - கண்போன்ற, நாயகர் தலைவர் கண்ணிற் சிறந்த உறுப்பின்மைபோல தம்மிற் சிறந்த தலைவர் இல்லாதவ ரெனவும்;

5. வி - அறிவு, நாயகர் - தலைவர்—மேலானவர் எனக்கொண்டு ஞான சொரூபி எனவும், பொருள் கொள்ளலாம்.

துஷ்டர்களையும் இடையூறுகளையும் கண்டிப்போர் எனவும் பொருள் கூறுதலுமுண்டு. விக்னவிநாயகர், விக்னராசர் எனுந் திருநாமங்களே இக்கூற்றை வலியுறுத்தும். "சர்வ விக்னோபசாந்தயே" என்னும் மந்திரமும் இங்கு நோக்கத் தக்கது.

இனி இவ்விநாயக மூர்த்தத்தின் தத்துவார்த்தத்தை யாராயுமிடத்து, இக்கடவுள் பிரணவ மகா மந்திரத்தி னின்றும் சகளீகரித்துச் சிவன் சத்தி யம்சமாய்த் தோன்றினமையின் பிரணவ சொரூபர் என்று கூறப்பட்டார். நாம் வசிக்கும் இவ்வுலகமோ உருண்டை வடிவு (அண்ட வடிவு) அதாவது பிரணவ வடிவு. பிரணவமோ யானை வடிவு. அவ்வடிவோ விநாயக வடிவு எனவே இவ்வுலகமெல்லாந் தாமேயென்பதும் தாமே உலகமென்பதும் பெறப்படுகின்றது. தாமே உலக வடிவாயும் பிரணவசொரூபராயும் விளங்குகின்றா ரென்பதை யுணர்த்தவே பெருமான் யானைவடிவை ஏற்றனரென்ப. திரிநேத்திரங்களைக்கொண்டதினால் ஆதித்தன் சந்திரன் வன்னி என்னும் முச்சுடர்களையுங் கண்களாகக்கொண்டு அவைகளுக்கு ஒளி கொடுத்து நிற்பவர் என்பது புலனாகின்றது. காயத்ரி மகாமந்திரத்தின் மூன்று பாதங்களின் பொருளாயிருப்பவர் தாமே என்பதும் இதனால் வெளியாகின்றது. விசாலம்பொருந்திய செவியை (முறம்போன்ற காது) உடையவராயிருத்தலால் யாவற்றையும் சாவகத்துக் கேட்குந் தன்மை முடையவர் என்பதை உணர்த்தா நிற்கும். ஐந்து கரங்

கொண்டமையானது சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்திய பதி தாமே யென்பதையும் வரம்பிலாற்றலுடையவ ரென்பதையுங் காட்டா நிற்கும். ஒற்றைக்கொம்பன் பரஞானபதி தாமொருவரே யென்பதையும், ஒடித்த கொம்பு அபயப் பிரதானமுடையவ ரென்பதையும் தெரிவிக்கின்றது. கயமுகா சுரனை சம்மரித்துத் தேவர்களை இரக்ஷித்தமையே இதற்கோர் சான்றுமென்க. தவிர விநாயகர் திருமுகத்தை நோக்குங்கால் ஒருபக்கம் தந்தமாகிய கொம்பு காணப்படுதலின் ஆண்வடிவென்றும் மற்றொருபக்கம் அத்தந்தங் காணப்படாமையின் பெண்வடி வென்றுங் காட்டி ஆண்பாலா பெண்பாலா வென்றையுறுவார்க்கு எப்பாலுங் கடந்த அப்பாலுக்கப்பாலாய் நிற்கும் ஒரு தனிப்பெருந் தலைவன் தாமே யென்பதை யுணர்த்தும். கன்னமதம், கபோலமதம், பீஜமதம் என்னு மும்மதங்களையுடையவராதலால் இச்சா, ஞானக் கிரியைகளையும் (சத்து + சித்து + ஆநந்தம்) சச்சிதாநந்தத்தையும் உடையவரென்பது தெளிவாகின்றது. சடை முடி தரித்திருத்தலினால் வேதாந்தப் பொருள் தாமே என்பதும், யோகிகளால் நித்தியமும் தியானிக்கப்படுபவர் தாமேயென்றுந் தெரியக்கிடக்கின்றது. பால சந்திரனை வேணியில் தரித்திருப்பது உண்மை யடியாரை உயர்நிலைக் குய்ப்பவரென்பதையும், சர்வஞ்ஞத்துவர் என்பதையும் குறிப்பிடுகின்றது. உபவீதந் தரித்தமையானது பரப்பிரம்மமாகிய எங்கும் நிறைந்த வன்னி தானே யென்பதும் பிராமணர் தானே யென்பதும் புலப்படுத்துகின்றது. சர்ப்பாபரணமோ பாம்பு வடிவமாகிய குண்டலி சக்தியை யுணர்த்தி அவற்றின் விரிவு சுருக்கங்களே பிரபஞ்ச ஒடுக்கத்தோற்றத்தைக் காட்டுங் குறியாய், ஜகத் காரணபூதரிவரென்பதை யுணர்த்துகின்றது. துதிக்கையானது அணுவுக் கணுவாயும் மகத்துக்கு மகத்தாயும் விளங்கத் தக்கவரென்பதைக் காட்டுகின்றது. லம்போதரமுடைமையானது சர்வ ஜீவோர்ப்பத்திக்கும் கர்ப்பதானமா யுள்ளவர் தாமே யென்பதையுங் குறிப்பிக்கின்றது. அறுகு சூடியது சர்வாந்தர்யாமி தானே யென்பதையும் மலப்பிணியின் உஷ்ணத்தைக் குறைப்பவர் தாமே யென்பதையும் விளக்குகின்றது. மோதகமேந்தியது உலகமும் அதிலுள்ள சேதன சேதனங்களும் தன்னிடத் தடங்கியதே என்பதைத் தெரிவிக்கின்றது. மூஷிகவாகனங் கொண்டமையானது, வண்ணமும் வடிவமுங் காட்டாப் பேரிருளாகிய ஆணவமலமே சண்டு வண்ணமும் வடிவமுங் காட்டி மூஷிகமாய் பிரணவ மூர்த்தியின் அடிக்கீழ் முழுந்தி வாகனமாய் வலிகெட்டு நின்றது என்பதை உணர்த்துகின்றது. தவிர ஒடிந்த கொம்பைத் தமது கையிலேந்தி யிருக்கும் தோற்றம் துஷ்டநிக்கிரஹ பரிபாலன கர்த்தா தாமென்பதையும், பாரதக் கதையை மேரு பர்வதத்தின்மீது வரைந்தருளிய சரித்திரத்தையும் ஞாபகப்படுத்துகின்றது. விநாயகமூர்த்தியின் திருவருளின்றி எக்காரியமும் நிர்விக்கினமாக முற்றுப்பெறுதென்பதே வேதாகம புராணங்களின் றுணிபு. அவரை மெய்யன்போடு வழிபடுபவர் கல்விச் செல்வம், சற்புத்திரப்பேறு, தீர்க்காயுசு, சத்துரு ஜயம், இராஜவசியம் முதலிய சர்வாபீஷ்டங்களும் பெறுவாரென்பது திண்ணம். அம்மூர்த்தியின் மகிமையாதியனவும், பூஜாக்கிரம, விரதானுஷ்டானங்களும், பிறவும் பார்க்கவ புராணமென்னும் விநாயக புராணத்திற் காண்க.

(தொடரும்.)

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர், சைவசித்தாந்த செங்குந்த சமாஜம்,
கண்டாச்சிபுரம், 17—8—29.


**விளம்பரத்திற் குகந்தது செங்குந்த மித்திரனே.**

**என்?** இது வெளிநாடுகளில் ஏராளமான சந்தாதார்களைப் பெற்றுள்ளது. மொத்தத்தில் ஆறாயிரத்திற்கு மேற்பட்ட சந்தாதார்கள் உடையது. இதன் சந்தாதார்கள் 100க்கு 80 பேர்கள் வர்த்தகர்களே. மற்றெந்த பத்திரிகையும் செல்லாத சிறுகிராமங்களிலும், மூலைமுடுக்குகளிலும் உலவிவருகின்றது, நிறைந்த பயன் தருமென்பதில் ஐயமில்லை.

ஒருமுறை உங்கள் விளம்பரத்தைக் கொடுத்துப் பரீக்ஷிக்கலாம்.

ஒரு மாதத்திற்கு ஒரு பக்கம் விளம்பரஞ் செய்ய பத்தே ரூபாய்.

நீடித்த விளம்பரத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ், சென்னை.

க்கம் நம்நாட்டில் முறையல்லவெனக் கருதப்படுகிறது. இவை காலத்தாலும் தேசத்தாலும் ஏற்படும் வித்தியாசங்களாம். ஆகையால் பண்டைக்காலத்திய வழக்க ஒழுக்கங்கள் இப்போது நம் சூழலுக்கும் கொள்கைகளுக்கும் ஏற்பப் பொருந்தாதனவாயின் அவற்றை நீக்க முயலுவது பொருந்துமேயன்றி அவை அநாகரிகமானவையென்று கூறுதல் பொருந்தாது. தற்காலத்தில் நாம் அனுசரித்துவரும் வழக்க ஒழுக்கங்களைப் பிற்காலத்தவர் தங்கள் சூழலுக்கும், கொள்கைக்கும் பொருந்தாவிடின் அநாகரிகமானவை என்று கூறவும் கூடுமல்லவா ? ஆகையால் ஒட்டக்கூத்த முதலியாருக்குச் சிரச்சிம்மாசனமிட்டது அநாகரிகமெனல் பொருந்தாது.

இதனால் செங்குந்தர்கள் சிரச்சிம்மாசனமிட்டுப் பிரபந்தம் கேட்டது உண்மையென்றும், அது அரசனால் அனுமதிக்கப் பெற்றதென்றும், அது அநாகரிகச் செயல் அல்லவென்றும் கொள்ளவேண்டி யிருக்கிறது.

வீரவாததாசன்.

---

## பேரூர் செங்குந்த முதலிமார் மடம்

நொய்யலாறு என வழங்கும் காஞ்சிமா நதி தீரத்தில் நீர்வளம் நிலவளம் அமையப்பெற்றதும், தென் கைலாயமெனவும் மேலைச்சிதம்பரமெனவும், கொண்டாடப் பெறுவதும், சாந்தலிங்க ஸ்வாமிகள் என்னும் மஹான் எழுந்தருளியிருந்து சமாதியடைந்ததுமாகிய பேரூர் எனும் புராதன க்ஷேத்திரம் கோயம்புத்தூருக்கு 3½ மைல் தூரத்திலிருக்கிறது. இந்த க்ஷேத்திரத்தில் செங்குந்தர்கள் பண்டைக்காலத்தில் ஆகமநெறி தவறாத உத்தம உயர்சைவச் சீலர்களாய் வாழ்ந்து வருநாளில் ஒருநாள் இத்தலத்திற்குத் தரிசனார்த்தம் வந்த சோழ அரசன் செங்குந்தர் வீதி வழியாகச் செல்லுங்கால் வீடுகள்தோறுமிருந்த தறிகளில் கட்டிய மணிகளின் ஓசையைக் கேட்டு ஒவ்வொரு வீடும் சிவாலயமென்றும், தறிமணியோசை இறைவன் ஆராதனை காலத்தில் செய்யும் மணியோசை என்றும் கருதிச் சாளரங்கள்தோறும் நின்று எட்டிப் பார்த்து வணங்கி ஸ்தோத்திரம் செய்து கொண்டே சென்றான். இதைக்கண்ட சில செங்குந்த இளைஞர்கள் சிவனடியாராகிய ‘குணமெனனும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்தலரிது’ என்பதை உணராது நகைத்துப் பரிகசித்தனர். இதையறிந்த சோழராஜன் உண்மையைக் கூறாது என்னைப் பரிகசித்து என் பக்திக்கு இடையூறு விளைத்த இவ்வூர்ச் செங்குந்தர்கள் நசிக்கக் கடவது. எனச் சபித்தான். இந்நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட செங்குந்தர்கள் சாபமிட்டவர் யாவர் எனத் தேடலுற்றனர். கடைசியில் அரசன் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்தபோது சாபமிட்டவர் அவனெனத் தெரிந்து அரசனை நோக்கி ‘தவசிரேஷ்டரே! நீவிர் யார் ? எந்நாட்டவர்? இவ்வூர்ச் செங்குந்தர்களுக்குச் சாபமிட்டது நீர்தானோ?’ என வினவினார்கள். சோழன் ‘நான் சோழமகாராஜனுடைய சகோதரன். இறைவன் தரிசனார்த்தம்இங்குற்றேன் என்னைப் பரிகசித்து என் பக்திக் கிடையூறியற்றிய செங்குந்தர்களுக்குச் சாபங்கொடுத்தது யானே.’ எனப் பதிலிறுத்தார். செங்குந்தரும் ‘எங்குலத்தலைவரே! உமது குடும்பத்திற்கும் செங்குந்தர்களுக்கும் வெகுகாலமாக இருந்து வரும் நெருங்கிய சம்பந்தத்தை நீர் உணரமாட்டீரோ ? சைவ சமயப்பரிபாலகர்களாகிய செங்குந்தர்கள் சிவனடியார்களுக்கு அபசாரஞ் செய்வதுண்டோ? ஏதோ சில இளைஞர்கள் அறியாமையால் செய்த குற்றத்திற்காகத் தாங்கள் குற்றஞ் செய்யாத செங்குந்தரனைவரையும் சபித்தல் நீதியோ ? நீதி செலுத்தி உலகத்தைக் காக்கும் எம்மிறையே ! அறிவீனர்களுக்குப் புத்தி புகட்டித் திருத்துவது தங்கள் கடமையன்றோ?’ என்று கூறிச் சாபத்திற்கு விமோசனம் கூறும்படி வேண்டிக்கொண்டனர். சோழன் சிறிதும் இரக்கங்கொள்ளாது ‘சிவாபராதத்திற்கும் விமோசனமுண்டோ? துல்லிய வெள்ளைத் துணியில் பட்ட சிறு கறையும் எவர்க்கும் எளிதிற் புலனாமன்றோ?’ என்றான். அப்போது செங்குந்தர்கள் மனம் நொந்து நீர் மூழ்கிய இம்மடுவிலேயே மூழ்கிப் போகக் கடவது என எதிர் சாபமிட்டனர். சோழன் சாபத்தைக்கேட்டுச் சிறிதும் மனங் கலங்காது யான் மூழ்கிப்போயினும் இந்நதி இது முதல் என் பெயரால் வழங்குவதன்றி இதில் ஸ்நானம் செய்தோர்களுக்குப் பலன் மோக்ஷமே யாகுக வென்று கூறி நதியில் மூழ்கிப்போய் விட்டான். அன்று முதல் இன்று வரையில் அம்மடுவுக்குச் சோழமடுவென்றே பெயர் வழங்கி வருகிறது. அப்போதே செங்குந்தர்களும் அத்தலத்தை விட்டகன்றனர். இனனும் அங்குச் செங்குந்தர்கள் குடியேறினும் க்ஷீணித்துப் போகின்றனர்.



இது நிற்க, இத்தலத்தில் ஆலயத்திற்கு வடபுறம் தேரோடும் வீதிக்கு வடக்கு, கோமுட்டிச் செட்டிமார் மடத்திற்கு மேற்கு, நாடார்மடத்திற்குக் கிழக்கு, வடகைலாயம் கோபுரத்திற்கும் பட்டி விநாயகர் ஆலயத்திற்கும் தெற்கு, இந்த எல்லைக்குட்பட்ட இடமே நமது மடத்திற்குரியது. இங்கிருந்த கட்டடம் கிலனாய் வெகு காலம் வெறுஞ் சுவரா யிருந்துவந்தபடியால் தேவஸ்தான கமிட்டியார் அவ்வூரை அடுத்துள்ள வடவழிச் செங்குந்த நாட்டாண்மைக்காரருக்கு மடத்தைக் கூடிய சீக்கிரம் கட்டாவிட்டால் ஏலம் போட்டு விடுவதாகப் பல நோட்டீஸ் கொடுத்தார்கள். சமீபத்தில் வடவழியில் மடம் கட்டிக் கும்பாபிஷேகம் செய்தபோது கூடியிருந்த கொளத்துப்பாளையம், முத்திபாளையம், பூதூர், வடவழி, சுல்தானிபுரம், மருதாபுரம், கணபதி முதலிய கிராமத்தார்கள் பேரூர் மடத்தைப் புதுப்பிக்க வேண்டுமெனத் தீர்மானித்தார்கள். அதன் பிரகாரம் புதூர் திரு. வடிவேலு முதலியார் அவர்கள்முன்னின்று மடத்துத் திருப்பணியை நடத்தி வருகிறார்கள். இது வரையில் சுமார் 2000 ரூபாய்க்குமேல் செலவா யிருக்கிறது.

இத்தலத்தில் பலவேறு சாதியார் மடங்கள் நல்ல நிலைமையில் இருந்து வருகின்றன. அவற்றுள் தெப்பக்குளக் கீற்கு வடகிழக்கில் மேற்கு பார்த்தாற்போ லிருக்கும் மௌத்தியா மடம் என்பதும் ஒன்று.

கணபதி வா. ப. நஞ்சையப்ப முதலியார்.

## குலதிலகர் பகுதி

## அற்புதங்கள் செய்யும் அம்மையார்.

(‘நவ சக்தி’யில் கண்டது.)

திருச்சி ஜில்லா உடையார் பாளையம் தாலுக்கா கீழமாளிகைக் கிராமத்துக்கு ஒரு மைல் தூரத்துள்ள மருதூர் என்னும் கிராமத்தில் திருவருள் வலியால் வியக்கத்தக்க அற்புதங்கள் செய்யும் அம்மையார் ஒருவர் வாழ்ந்து வருகிறார். இவ்வம்மையார் செங்குந்த மரபிற் றோன்றியவர். இவர் பெயர் தெய்வயானை. இவருக்கு இப்போது வயது முப்பத்தேழு. இவர் கணவருடன் இல்லறத்திலிருந்து வருகிறார். இவருக்கு ஓர் ஆண்பிள்ளையும் மூன்று பெண்களும் உண்டு. வழிவழியாக முருகனை வணங்கிவரும் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் கல்வி கற்கவில்லை. இவரது கணவனார்க்கு நெசவுத்தொழில்.

இவ்வம்மையார் தமது உ௨-வது வயதில் ௫ வயதுடைய தம் ஆண் குழந்தையை யிழந்தார். அதுமுதல் சிலநாள் வரையில் அக்குழந்தை புதைக்கப்பட்ட இடத்திற்குப்போய் வருந்தியழுது வந்தார். ஒரு நாளிரவு தாம் பழநிக்குச் சென்று முருகனை வணங்கியதாகவும், காவடிகளைக் கண்டதாகவும் கனாக்கண்டு விழித்தார். இக்கனாக் கண்ட சின்னாளுள் சில பெண்களோடு ஏரிக்குக் குளிக்கச் சென்றார். தலைக்குத் தேய்த்துக் கொள்ளதக்க துணிஞ்சித்தழை ஒடிப்பதற்கு, அங்குள்ள அம்மரத்தில் ஒரு துறட்டை மாட்டி யிழுத்தார். அத்துறடு தன் கையினின்றும் நீங்கி வானோக்கிச் சென்றது. அது கண்டு அஞ்சி உற்று நோக்குங்கால் கருநிறமுடைய ஒரு மனிதன் தன் மீது கரிய கம்பளம் ஒன்றைத் தலையிலிருந்து முதுகுபுறமாகத் தொங்க விட்டுக்கொண்டு அத்துறட்டைப் பிடித்துப் போவதாகப் புலப்பட்டது. பிறகு, அவ்வம்மையார் தமது தலையின்மேல் பெருஞ் சுமை இருப்பதுபோலத் தோன்ற, இஃதென்ன புதுமையா யிருக்கிறதே யென்று கீழே குனிய, தமது தோளிலிருந்து ஒரு மனிதன் கரிய மேனியும் கச்சும் கோவணமும் உடையனாய், கலீரென்ற ஒலியுடன், குதித்துத் தம் முன்னே போனதைப்பார்த்து, மிக அஞ்சி வந்து தம்முடன் குளிக்க வந்த பெண்களிடம் நடந்த வரலாற்றைச் சொல்லிக் குளித்து வீடு சேர்ந்தார்.

சேர்ந்தவுடன் அப்பெண்கள் நடந்த வரலாறுகளை அவ்வம்மையாரின் கணவன், மாமன், மாமி முதலியவர்களிடம் சொல்ல, அவர்கள் மிகவும் கவலைகொண்டு அவ்வம்மையாருக்குப் பேயோ பிசாசோ பிடித்துவிட்டது என்று கொண்டு, பூசாரிகளை யழைத்துப் பேயோட்டத் தொடங்கினார்கள் ஏரியின் அருகே நடந்த செயலிலிருந்து, அம்மையார் தமதுணர்வின்றிப் பித்தர்போல முருகன் கோவிலுக்கு அடிக்கடி போய்வரும் வழக்கமுடையவரானார்; அது

# பொது விஷயங்கள்

## முயற்சி

முயற்சி என்பதற்குப் பிரயாசை எனப் பொருள்படும். எல்லாக் கருமங்களிலும் சித்திபெற முயற்சியே இன்றியமையாதது. முயற்சி இன்றேல் ஒரு காரியமுமுடியாது. சில அறிவிலிகள் தாங்கள் செய்யப்புகுங் காரியங்களில் ஒரு சிறிதும் பிரயாசைப்படாது 'தெய்வத்திற்குக் கண்ணிலேயே, என வாய் சித்தாந்தம் பேசிக்கொண்டு, காலத்தை வீணே கடத்துகின்றனர். என்னே இப்பேதைமை: இத்தகையோர்க்கன்றே

> "தெய்வத்தாலாகா தெனினும் முயற்சிதன்
> மெய்வருந்தக் கூலிதரும்."

என்று நறுமணங்கமழும் நந்தமிழ் நாட்டின் திலகம்போல் விளங்கிய தெய்வப் புலமைத் திருவள்ளுவர் கூறுகின்றனர்.

முயற்சியே ஒருவன் வாழ்நாளைக் கண்ணியமாக்குகின்றது. முயற்சியே மனிதனின் ஜீவியத்தை மிளிரச் செய்கின்றது. முயற்சியே சகல ஐஸ்வரியங்களையுந் தருகின்றது. முயற்சியே ரீக்குமிழி போன்ற பூதவுடலை நீத்துப் பொன்னெழிலென்னப் புகழுடம்பை யிடுகின்றது.

முதலில் நம்மையே சிறிது ஆராய்வோம். நாம் எண்ணுவது, அசைவது, ஓடுவது, சிரிப்பது முதலிய காரியங்களனைத்தும் யாக்கையிலுள்ள பற்பல கருவிகளின் முயற்சியினாலேயே உண்டாகின்றன.

உதாரணமாக முயற்சி என்னும் வார்த்தையைச் செப்புதற்கும், அல்லது அவ்வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தை உச்சரிப்பதற்கும், முயற்சியே ஆதாரம், அது எவ்வாறெனின்: மனமெனும் முயற்சியால், நமது உடலினுள்ளிருக்கும் செவிப்புலனும் அணுத்திரள்களை எழுப்ப அவை மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகிய நான்கிடங்களிலும் பொருந்துகின்றன. பின்னரே, உதடு, நாக்கு, பல், வாய் ஆகிய நான்குறுப்புகளின் முயற்சியினால் வெவ்வேறு எழுத்துக்களாக ஒலிக்கப்படுகின்றன.

> "நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப
> எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி
> மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்
> வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே."

முயற்சியின் பயனாற்றானே ஒலி பிறக்கின்றன வெனக் கூறினர் நன்னூலார்.

ஆகையான், சண்டி நாமறிவது யாதெனின், பேசுவதற்கு முன்னரேயே ஒவ்வொரு எழுத்தை உச்சரிக்கவும் முயற்சியே இன்றியமையாதது.

இன்னும், மாணவராய்ப் பள்ளியிற் பயிலுங்கால் அப்பொருளே அவசியம் வேண்டற்பாலது. இடையில் என்ன கவலைகள் ஏற்படினும் அவற்றைப் பொருட்படுத்தாது முயற்சி எடுத்தல் வேண்டும். சாதாரணமாக மாணவனொருவன், பரீக்ஷையில் தேறானாயின், அதனால் மனம் மிகவும் நொந்து வருந்தி, காலத்தைக் கவலையிற்றானே கடத்துகின்றனன். அந்தோ! இப்பேதைமையை என்னென்றெடுத்துரைப்பது எவ்விதத்தும் முயற்சி உடையோர் இகழ்ச்சியுடையார் என்பதற்கேற்ப, மென்மேலுங் கருதிப் பிரயாசைப்பட்டு முயலுவானாயின், கருதிய எண்ணங் கைகூடாமற்போமோ?

தங்களுக்கு என்ன இடையூறு நேரிடினும் பொருட்படுத்தாது, தங்கள் பணியே பெரிதெனப் படிப்ப முயல்வர் அறிவுடையோர் என்பதற்கு

> "மெய்வருத்தம்பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
> எவ்வெவர்தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
> அருமையும்பாரார் அவமதிப்புங் கொள்ளார்
> கருமமே கண்ணாயினர்."

என்பது போதிய சான்றும்.

பண்டைக்காலத்தில் பெரிய யோகிகளும் ஞானிகளும் தவசிகளும் தங்கள் பிரயத்தினத்தினாலேயே சகல சித்திகளுமுற்றனர் என்பது வெளிப்படை.

மற்றும் தவவலிமையான் மூவாயிர வருடம் திருமூலர் ஜீவித்திருந்ததுவும். ஏகலைவனெனும் எயினன், துரோணர் தனக்கு வில்வித்தையைக் கற்பிக்கச் சாவகாசமில்லை யெனக்கூறிய போதிலே, தண்டம் புரிந்து அவ்விடம் விட்டகன்று துரோணரைப்போல் ஒருருத்தாபித்து அவர் கற்றுக்கொடுப்பனபோல் கற்றுவந்து, அவ்வித்தையில் பல்லோர் இன்னும் பரவும் வல்லவனாயினதும் தளரா முயற்சியின் காரணமெனக் கழறுவது மிகையாமோ?



முயற்சியின் வகையாற்றானே ஆகாய கங்கையை பூமிக்குக் கொண்டுவந்தனன் பகீரதன். அக்கருத்தை உன்னியே இன்னும் "பகீரதப் பிரயத்தனம்" எனப் பலருங் கூறக்கேட்கின்றோம்.

ஆரியத்தினுந் தண்டமிழினும் வல்ல மகாகவி கம்பரும், வால்மீகி செய்த 24000 சுலோகங்களடங்கிய இராமகாதையை 12000 செய்யுளாகச் சின்னாளில் பன்னயங்களும் பொலியுமாறு வரைந்தது நன்முயற்சியினாலன்றி வேறெதனாற்றானே?

பிராஞ்சு தேசத்தில், நெப்போலியனென்னும் ஒரு சாதாரண போர்வீரன் (solat) இறுதியில் ஏறக்குறைய ஐரோப்பாக்கண்டம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளும் சக்கரவர்த்தியெனப்பட்டம் புனைந்தது மனத்தளர்வுறாத முயற்சியானன்றோ?

உண்ணீருங் கிடைக்காத பாலைவனத்தைக் கடந்தும், மலையினூட் புகுந்தும், சில இடங்களுக்குள் பல மைல் கடக்கும் ரயில்வண்டியும் அளவிடற்கரிய ஆழியின்வழியாய் சின்னாட்களுள் பன்னாட்டைக்கடந்து செல்லும் கப்பலும் பல்லாயிர மைலுக்கப்பாலுள்ள செய்திகளைச் சில மணிநேரங்களுக்குள் அறிவிக்கும் "டெலிபோன்" என்னும் கருவியும், ஒருவன் பாடுபட்டுப்பேசும் பேச்சு முதலியவைகளை ஒரு தட்டின் மூலியமாய்ச் சேமித்து பாட்டைப் பாடியும், பேச்சைப் பேசியும் நம்மை மகிழ்விக்கச் செய்கிற "போனோகிராப்" என்னுங் கருவியும் பல கண்டங்களின், பல ஊர்களின் நன்மையையும் அமைப்பையும் சிறிது நேரத்திற்குள் தெரியவைக்கும் "சினிமா" என்னுங் கண்காட்சி முதலிய இன்னோரன்ன பிறவும் பெருமுயற்சியினால் கண்டுபிடிக்கப் பட்டனவென்பதை உலகம் மறுக்குமோ?

முயற்சியின் பயனாலேயே நாம் இவ்வுலகில் முற்றிலும் இவ்விருபதாம் நூற்றாண்டில் நல்வாழ்வை அடைகின்றோம். முயற்சியே செல்வத்தை வளர்க்கு மருமபெரு மௌடதம். முயற்சியின்றோர் வறுமை யெனனும் நோய் வாய்ப்பட்டலவோ மென்பது எட்டுணையுஞ் சந்தேகமிலது.

நம் நாட்டினர் பண்டை நாட்களில் பலவிதத் துறைகளிலும் மேன்மையடைய முயற்சி செய்து, மற்றேனைய தேயத்தினரைக் காட்டினும் சிறப்புற்றோங்கி வந்தனர். இன்றோ நம்மிடத்து முயற்சியொன்று மில்லாது, க்ஷீணதசை யடைந்து முயற்சி உடையோரைப் பார்த்து விழிக்கின்றோமேயொழிய வேறென்னை?

இதனாற்றானே தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்

> "முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
> இன்மை புகுத்து விடும்.'(

என்றருளினார்.

நிற்க, நங்குலமித்திரன் எங்கும் புகழ்ப்பரவி மங்காப்புகழை மேன்மேலுந் தந்து ஏழையறிவைப் பிரகாசிக்கச்செய்வது முயற்சியின் வகையானென மொழிவது மிகையாமோ? மற்றும் மித்திரன் குலமுன்னேற்றத்தைக் கருதிக்கூறும் பொன்மொழியைக் கேட்டு பெருமகிழ்வடைந்து, ஆங்காங்குச் சங்கத்தை நிறுவியும், நிறுவிக்கொண்டும் வருவது குலாபிமானிகள் கொண்ட முயற்சியே யன்றி மற்றெதனாலேயோ?

இனியும் ஒருவிதத்தானுந் தளர்வுறாது நங்குல முன்னேற்றங்கருதி நலமிகுந்தொண்டாற்றி வருவது முயற்சியானல்லது மற்றெதனாற்றானோ?

அருங்குழவியன்ன புற்றுயிர் பெற்றுவளரும் மித்திரன் வாயிலாக செங்குந்த குலாபிமானிகளின் அறியாமை யெனுங்குணத்தை வீழ்த்தி, அறிவெனும் அமுதை யூட்டி வளரச்செயவது சென்னை உயர்திருவாளர் சண்முகசுந்தர முதலியார் M.A., L.T., முதலியோர்கள் நன்முயற்சியினாலேயே யெனக் கழறுவது முற்றுமுண்மை யன்றோ?

ஆகையான் நமக்கு முயற்சியின் பெருமை தெற்றென விளங்குகின்றது. நாம் பற்றுறையிலும முன்னேற்றமடைய முயற்சியே அரும் பெரு மௌடதமாகும். "நினைப்பது முடியும நெறி சுருக்கிடேல" என்றருளிய பாரதியார் பாரத கருத்தை ஈண்டுக் கருதுதல் சாலச் சிறப்புடைத்தாம்.

செய்யும் பணியை நோக்கி முயற்சி எடுத்து இனிது முடித்து முட்டின்றிவாழ எழில் மயிலேறு நகைகந்தனைப் போற்றுவம்.

சுபம் பொலிக!

புதுவை சொக்கநாதம்கேட்டை – த. வேலாயுதம்.

# தொழிற் பகுதி

## சாலியர் மகாஜன சங்க 2-வது மகாநாடு

### திரு. சேதுரத்தினமையரவர்களின் திறப்புவிழாப் பேருரை.

1929௵ ஜூலை௴ 8-ந் தேதி அருப்புக் கோட்டையில் கூடிய சாலியர் மகாஜன சங்க இரண்டாவது மகாநாட்டைத் திறந்து வைக்கையில் கனம் மந்திரி எம். ஆர். சேதுரத்தினம் ஐயர் அவர்கள் ஆற்றிய பேருரையின் சுருக்கம் வருமாறு :—

சாலிய குலத்தைச் சார்ந்த எனது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! தங்கள் இரண்டாவது வருட மகோற்சவத்தைத் திறந்து வைக்குமாறு வேண்டித் தாங்கள் என்னை வரவேற்று எனக்களித்துள்ள கௌரவத்தைப் பாராட்டி வந்தனமளிக்க எழும்போது என் மனம் பூரித்தெழுகின்றது. இங்கு கூடியிருக்கும் பிரதிநிதிகளுக்கும் சகோதரிகளுக்கும் எனது மனமார்ந்த வந்தனம் உரித்தாகுக. நான் தங்கள் வகுப்பைச் சார்ந்தவனல்லனாயினும் தங்கள் குலம் தழைத்தோங்கி முன்னேற்ற மடைய வேண்டுமென்னும் சத்தியமான அபிமானமும் ஆவலும் எனக்குண்டு. இந்தியாவின் கைத்தொழி லபிவிருத்தியில் தங்களுக்கு இருந்துவரும் பாத்யதை கொஞ்சமல்ல. கணக்கிட்டுக் கூறமுடியாத வெகு பழங்காலத்திலிருந்தே இந்தியாவின் கைத்தொழிற் பொருள்களும் கைராட்டினத்தால் நூற்று நெய்யப் பெற்ற துகிலாடைகளும் பிறவும் உலகத்திலுள்ள சகலராலும் வெகுவாய்ப் புகழப்பெற்று வந்திருக்கின்றன. துரதிர்ஷ்டவசமாய் இயந்திரங்களின் படையெழுச்சியால் அத்தகைய அபூர்வமான கைத்தொழில்கள் யாவும் இன்று பரிதாபகரமான க்ஷீணதசையை அடைந்துவிட்டன. நமது அரசாங்கத்தார் குடிசைக் கைத்தொழிலைப் புனருத்தாரணஞ்செய்ய இப்பொழுது விசேஷ சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் உங்களிடம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மங்கிப் போன குடிசைக் கைத்தொழில்களைச் சீக்கிரத்தில் மீண்டும் பழைய ஸ்திதிக்குக் கொண்டுவர நான் மனப்பூர்வமாக என்னாலியன்ற உதவிகளைச் செய்ய சித்தமாயிருக்கிறேன். குடிசைக் கைத்தொழிலைப் புதுப்பிக்கும் நோக்கத்துடன் 'குடிசைக் கைத்தொழிலாளர் மகாநாடு' ஒன்று கூட்டப்பெற்று, அம்மகாநாட்டின் சிபார்சின் பேரில் உடனே நடைபெறவேண்டிய காரியங்கள் அமுலுக்குக்கொண்டு வரப்பெற்றிருக்கின்றன. அதற்கிணங்க நெசவுத் தொழிலாளர்கள் வகுப்பினரைக் கலந்து ஆலோசிக்க ஓர் ஆலோசனைக்கமிட்டியும் நியமிக்கப்பெற்றிருக்கின்றது. இக்காரியத்திற்கு அஸ்திவாரம் போட்டாய்விட்டது. இனி கட்டடம் கட்டவேண்டியது உங்கள் பொறுப்பாகும் தாங்கள் ஒருமனப்பட்டு ஒன்று சேர்ந்து தங்கள் ஸ்திதியை உயர்த்தவும் பூர்வகாலத்தில் இந்தியாவின் பெரும் புகழுக்கே ஆஸ்பதமாயிருந்த தங்களுக்குச் சொந்தமான கைத்தொழில்களை மீட்டும் நன்னிலைக்குக் கொண்டுவரவும் ஐக்கிய பாவத்துடன் கங்கணம் பூண்டு முன் வந்திருப்பதைக் கண்டு நான் அடையும் மகிழ்ச்சி இவ்வளவு வவ்வளவல்ல.

உங்களுடைய முன்னேற்றத்தின் முயற்சியில், மற்ற ஜாதியினரின் முன்னேற்றத்திற்குத் தப்பெண்ணங்கொண்டு முட்டுக்கட்டை போடாமல் உங்களுடைய முயற்சியாலேயே அவர்களையும் சீர்திருத்தி ஒற்றுமை நிலவச் செய்து கூடிவாழ்ந்து பலாபலன்களைச் சமமாக அநுபவிக்க முயற்சிக்க வேண்டும். எளியவர்களுக்கு உதவிசெய்ய வேண்டியது வலியாரின் கடமையாகும் தொழில் முறையில் அவரவர்கள் தொழிலை அவரவர்கள் கைநழுவ விடலாகாது. கைத்தொழிலை நாம் அலக்ஷியமாகக் கருதிய குற்றமே நம்மை இன்று இந்த க்ஷீணதசையில் கொண்டு வந்து விட்டிருக்கிறது. ஒரு ஜாதியார் ஒரு கைத்தொழிலை செய்வதால தாழ்ந்தவர்களென்று எண்ணும மனப்பான்மை நம்மை விட்டு இன்றே ஒழியவேண்டும்.

நமது மனோரதம் நிறைவேறவும், பாரத பூமியின் நன்மக்கள் ஓங்கவும், நாம் உடனே முன்வந்து உழைக்கவேண்டிய துறைகள் பலவிருக்கின்றன, நாம் கேவலம் உண்டு உறங்குவ



தில் நம் வாழ்வைப்போக்கி துக்கசாகரத்திலேயே மூழ்கித் தத்தளிக்கவேண்டி இவ்வுலகில் ஜனிக்கவில்லை. ஒவ்வொரு மனிதனும் உண்மையான இன்பங்களை அடையவும், ஆத்மானந்த பரனாய் வாழவுமே ஆசைகொள்ளுகிறான். இவைதான் நாம் இவ்வுலகில் தேடவேண்டிய செல்வங்கள். இன்ப வாழ்விற்குப் பொருள் வேண்டுவது அவசியம். பொருள இல்லாதவர்களுக்கு இவ்வுலகம் பெரும் பாலைவனமாகவே தோன்றும். இதற்குக் கைத்தொழிலும் கல்வியும் வேண்டுவது அதயாவசியம். தொழில்தான் துக்ககரமான நிலையிலிருக்கின்றதே, கல்வியாவது நம்மிடம் குறைந்தபட்ச அளவிலாவது பொருந்தியிருக்கிறதா என்று பார்த்தால் அந்த நிலையைப்பற்றி சொல்லவே வேண்டாம். கல்வியின்மையே எந்தத் துறையிலும் துணிந்து முன்வந்து உழைக்கக்கூடிய பலத்தையும் ஆற்றலையும் நாம் அடையமுடியா திருப்பதற்குக் காரணம். ஆனால் படித்தவர்கள் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வது தாழ்வென்று கருதுகிறார்கள். இந்த மயக்கம் நீங்கி கல்வியும் கைத்தொழிலும நெருங்கிய உறவோடு நமது சமூக வாழ்க்கையைச சீர்படுத்தவேண்டும். இனியாகிலும் நீங்கள் உங்கள் ஜாதிச்சிறுவர் சிறுமிகடகுக் கல்வியறிவூட்ட முன்வாருங்கள்.

முதலில் உங்கள் வகுப்பார் வசிக்குமிடங்களை ஆராய்ந்து அவர்களையெல்லாம ஒன்று கூட்டி ஆங்காங்கே சங்கங்கள் ஏற்படுத்தி, உங்கள் குலத்தினரில் செல்வந்தர்களாயும செல்வாக்குடையவர்களாயு மிருப்பவர்களை அவற்றின் பொறுப்பு வாய்ந்த தலைவர்களாக்கி ஆங்காங்கே அரசாங்கத்தாரின் உதவியால் ஆரம்பக் கலவி போதிக்கும் பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்க நீங்கள் முறபடவேண்டும். பள்ளிக்கூடத்திற்குப் போகிறவர்களை அம்மட்டோடு விட்டுவிடாமல் உடனுக்குடன் கைத்தொழில்களையும் புகட்டி வரவேண்டும. அவசரமான வழிகளில் தலையிட்டுக் கொள்ளாதவாறு அவர்களைக் கண்ணுங்கருத்துமாயக் காத்து சுகஜீவிகளாக ஆக்க வேண்டும. இளமை முதல கைத்தொழிலிலும வியாபாரத்திலும அவர்களைப் பழக்குவித்து அதில் அவர்களுக்கு இயற்கையாகவே சுவை தோன்றும்படி செய்யவேண்டும். உங்களைப் போன்ற நெய்தல் தொழிலாள வகுப்பினரே முற்காலத்தில உலகத்தின மகோன்நத ஸ்தானத்தை வகித்திருந்த ரோமாபுரிக்குப் பட்டாடைகளை அனுப்பி வியாபாரம செய்து வந்தார்கள்.

இன்னும் மங்கிப் போயிருக்கின்ற குடிசைக் கைத்தொழில்களை முன்னுக்குக் கொண்டுவர நீங்கள் உடனே முன்வந் துழையுங்கள். கைத்தொழில் அபிவிருத்திக்கு ஏராளமான பொருள் வேண்டுமே என்று நீங்கள் கவலைகொள்ளவேண்டிய அவசியமே இல்லை. சொற்பமாகச் சிறு கைத் தொழில்களைக் கொஞ்ச முதலுடன் ஆரம்பியுங்கள். சிறுகக் கட்டியே பெருகவாழ வேண்டும். மச்சிலுக்குப் போகவேண்டுமானால் ஒவ்வொரு படியாக ஏறிச்செல்ல வேண்டுமேயொழிய ஒரே பாய்ச்சலாய்த் தாவமுடியாது. ஆகையால், படிப்படியாக உங்கள் கைத்தொழிலை அபிவிருத்தி செய்து விருத்தியடைய நீங்கள் முயலவேண்டும். ஆனால், எதிலும் உண்மையாக உழைத்தாலதான லாபமேற்படும், இன்பம் விளையும, பால் பொங்கும

குடிசைக் கைத்தொழில் செய்யும ஏழைத் தொழிலாளர்களுக்குப் பொருளுதவி செய்து அவர்களைக் கைதூக்கிவிடவே நமது தமிழ் நாட்டில் கூட்டுறவு ஐக்கிய நாணயச் சங்கங்கள் உழைத்து வருகின்றன. இந்த ஐக்கிய நாணயக் கூட்டுறவுச சங்கங்கள் நெசவுத் தொழில் செய்யும் சகோதரர்களுக்குத் தாராளமாய்ச் சொற்ப வட்டிக்கு நல்ல நிபந்தனையுடன் பணம் கொடுக்கல் வாங்கல் செய்கின்றன. உண்மையாகக் கைத்தொழிலை விருத்திசெய்ய வேண்டுமென்னும் ஆவலுள்ள தொழிலாளிகளின் தொகைகளவ்வளவுக் கெவ்வளவு விருத்தியடைந்து பணம கொடுக்கல வாங்கல் ஒழுங்கான முறையில நடைபெறுகின்றதோ அதற்குத்தக்கபடி சங்கத்தின் விருத்தி வலுவடையும். தொழிலாளிகள் நிறைந்த இடங்களில் இச்சங்கங்களை ஸ்தாபிக்க அரசாங்கத்தார் தயாராக இருக்கிறார்கள். இச்சங்கங்களின் வாயிலாக கைத்தொழிலுக்கு வேண்டிய கருவிகளையும் உபகரணங்களையும் நீங்கள் லாபகரமான விலைக்கு வாங்கிக்கொள்ளலாம். நீங்கள் நெய்துமுடிக்கும ஆடைகளை விற்பதிலும அவ்வாயிலாகப் பொருளீட்டுவதிலும வேண்டிய உதவிகளனைத்தையும இச்சங்கங்கள் புரியச் சித்தமாயிருக்கின்றன.

இந்தியாவில் நடைபெறும் கைத்தொழில்கள் யாவும் லாபகரமானவைகளே. இருந்தாலும் தொழிலாளிகள் ஏழைகளாகவே இருந்து கஷ்டப்படுவதை நாம் காணுகிறோம். இதன் காரணமென்ன? ஈட்டுகின்ற பொருளைச் சிக்கனமாகச் செலவு செய்து மிச்சம் பிடிக்கவேண்

டும் என்னும் எண்ணமே அவர்களுக்கிருப்பதில்லை; இதுவே காரணம். ஒரு ரூபாய் லாபம் சம்பாதிப்பவன் இரண்டு ரூபாய் செலவழிக்கின்றான்; ஆடம்பர வாழ்க்கையை மிகவும் விரும்புகின்றான். இந்த துர்வழக்கம் நம்மைவிட்டு நீங்கினாலொழிய நாம் சாமான்யத்தில் முன்னேற முடியாது. செலவுகளில் கூடியவரையில் சிக்கனமாக இருந்து பொருள் சேர்த்து, அங்ஙனம் சேர்க்கும் பொருளைக்கொண்டு கைத்தொழிற்சாலைகளை விருத்தி செய்யவேண்டும். உலகிலுள்ள மற்ற குடிசைக் கைத்தொழில்களைவிட உங்களுடைய கைத்தொழிலே மிக்க உயர்ந்தது. ஆடையின்றி எம்மனிதனும் இருக்க முடியாதல்லவா? ஆகையால் என்றும் உங்கள் கைத்தொழிலே தழைத்து நிற்கக்கூடியது. இதில் நீங்கள் முயன்று முன்வருவதில் எவ்வளவு உதவிகள் வேண்டுமோ அவற்றை நான் செய்யச் சித்தமாயிருக்கிறேன்.

இதுவரையில் கைத்தொழில் அபிவிருத்தியைப் பற்றியும், கல்வியின் அவசியத்தைப் பற்றியும், கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றியும் இயன்றவரை சுருக்கமாகக் கூறினேன். இவற்றை விட முக்கியமான விஷயமொன்றுண்டு. அதுதான் சுகத்திற்கு ஆதாரமான "சுகாதாரம்" மனிதனைப் பொருத்த எவ்வித நன்மைகளுக்கும் தேகசுகம் அத்தியாவசியமானது. கிராமங்களில் சுகாதார வசதிகள் மிகவும் குறைவுதான். இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டார் விசேஷ ஊக்கங்காட்டி வருகிறார்கள். சுகாதாரத்திற்கு இன்றியமையாத ஜலதாரை வசதி, போதிய வெளிச்சம், சுத்த ஜலபானம், நல்ல பானம், உணவு முதலிய இவைகள் அவசியம் வேண்டியவைகள். இவற்றில் பலவற்றைத் தம் தம் வீடுகளைப் பொருத்த வரையில் நீங்களே செய்துகொள்ளலாம். பொதுவாகச் செய்ய வேண்டியவைகளை அரசாங்கத்தார் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இவ்விஷயத்தில் உங்களுக்கு அவசியமான உதவிகளைச் செய்ய நான் சித்தமாயிருக்கிறேன். கிராமவாசிகள் பலர் குழந்தைகளுக்கு அம்மை குத்துவதென்றால் பயப்படுகிறார்கள். இதைப்போன்ற சுகாதார விதிகளைப் பிரசாரம் செய்ய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகஸ்தர்களுடன் கலந்துகொண்டு கூடிய சீக்கிரத்தில் உங்கள் கிராமங்களை லக்ஷ்மீகரப்படுத்த முன்வர வேண்டும்.

சாலியர் வகுப்பைச் சேர்ந்த எனது அன்பிற்குரிய சகோதரர்களே! இவ்வளவுநேரம் பொறுமையோடு எனக்குச் செவி சாய்த்ததற்கு நான் மீண்டும் எனது வந்தனத்தைச் சமர்ப்பிக்கிறேன். நீங்கள் எப்படி முன்வருவது என்று தயங்கிப் பயந்துகொண்டிருப்பதை யொழியுங்கள். உங்களுக்குள் ஏற்பட்டிருந்த சச்சரவும் சண்டைகளும் இன்றோடு ஒழியட்டும். இந்த வருஷ மகோற்சவமே நீங்கள் ஒற்றுமைக்கொடியை உயர்த்தும் நன்னாளாகட்டும். உங்களைப் பிடித்தலைத்துவந்த அறியாமைப் பேய்க்கு இந்த தினமே முடிவுகாலமாகக் கடவது.

நான் கோரியவற்றில் சிலவற்றையேனும் நீங்கள் உடனே கடைப்பிடித்து ஒழுகுவீர்களாயின் அதுவே எனக்குப் போதிய வெகுமதியாகும். உலகத்தில் மக்களுக்குச் சகல இன்பங்களையும் அவரவர்கள் உழைப்புக்குத் தக்கபடி அளிக்கக் காரணம் பூண்டுள்ள இறைவன் பாரத பூமியில் தங்கள் வகுப்பினற்குரிய இடத்தைத்தந்து அருள்புரிவாராக.

## சந்தாதாரர்கட்கு அறிக்கை

நமது செங்குந்தமித்திரன் அநேகருக்குக் கிடைப்பதில்லை என்று ஒவ்வொரு மாதத்திலும் பல கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இங்கு தபாலில் போடுவதற்கு முன்பு எல்லா விலாசங்களையும் பரிசோதித்துப் பார்த்த பின்பே அனுப்புகின்றோம். மாதவின் நமது ஆபீசில் எவ்விதத் தவறுதலும் நேருவதற்கில்லை. தபால்சேவகர்கள் சிலவிடங்களில் ஓர் விலாசதாரரிடம் மொத்தமாக போட்டுவிடுவதாகவும், வேறு சிலவிடங்களில் கண்டவிடத்தில் எல்லாம் கொடுத்துவிடுவதாகவும் இன்னும் பலவிதமாகவும் புகார் செய்தனர். ஆதலின், யாருக்காவது பத்திரிகை கிடைக்கவில்லை என்றால் உடனே தங்களூர் தபாலதிகாரிக்கும் எழுதிவிட்டு நமக்கும் எந்தவிதத் தவறுதலால் கிடைக்கவில்லை என்ற இவ்விவரங்களைத் தெரிவித்தால் அதைக் குறித்து இங்கு மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள சௌகரியமாக இருக்கும் என்பதைச் சந்தாதாரர்கட்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ்.



## சுகாதாரப் பகுதி

### க்ஷய ரோகம்

### (Tuberculosis or Consumption)

விஷக் கிருமிகளின் காரணமாக உண்டாகும் தொத்துவியாதிகள் பலவற்றுள் க்ஷயரோகமும் ஒன்றாகும்.

இந்நோய்க்கு "டியுபர்கல் பாஸில்லஸ்" Tubercle bacillus) என்னும் விஷக்கிருமி மூலகாரணமென்று அணுதரிசனி (microscope) யின் ஆதரவாலும், அநேகவித ஆராய்ச்சிகளினாலும், பலர் தேர்ந்தெடுத்து எழுதியுள்ளார். சென்னை நகரில் சர்வசாதாரணமாயும், இந்திய பிரதேசங்களில் சிலபாகங்களிலும் இது வியாபித்திருக்கின்றது.

இதை முறை ஜுரத்தின் கொடிய தமையன் என்றே சொல்லவேண்டும். அது எவ்வாறெனின் முறைஜுரமோ வெகு நயமாகவும், நிதானமாகவும் நாளடைவில் மானிடர் உடலில் இராகின்ற சர்வசக்தியையும் ஒடுக்கி, தேகத்தைக் கஷ்டத்துக் குள்ளாக்காமல், தன் காரியத்தை முடித்துக்கொள்ளுகின்றது.

இக்கொடியரோகமோ, பன்முறைவாட்டி வருத்தும் இருமலினாலும், சுவாச இழுப்பினாலும், மார்புவலி, பக்கவிலாநோய், தொண்டைபாதை, அடிவயிற்றுப்புண் முதலானவைகளினால் நோயாளியைப் படுத்தும்பாடு வரையறியும்.

மேற்கூறியவை வாசாவில் லேசாகத்தானே இருக்கிறதென்று சிலருக்குத் தோற்றலாம். ஆனால் இதன் கஷ்ட நிஷ்டூரங்களுக் குட்பட்டவர்களுக்கும், படுகிறவர்களுக்குந்தான் அனுபவம்.

தலைநோயும் காய்ச்சலும் தனக்குத் தானே வந்தால்தான் தெரியுமே அல்லாமல் அயலார் அறிவது அரிதேயாகும்.

இன்னும் உலகத்தில் சம்பவிக்கும் மரணங்களில், சற்றேறக்குறைய ஏழில் ஒருபங்கு, இந்நோய் காரணமா யிருக்கிறதென்று எண்ணிக்கையில் ஏற்பட்டிருக்கிறது என்றால் இந்நோயின் வன்மையை என் சொல்வது.

ஆகவே இவ்வியாதி மனிதர் பலரைச் சில திங்கட்களுக்குள்ளாகவோ, அல்லது சில ஆண்டுகளுக்குள்ளாகவோ மிகக் கஷ்டங்களைக் கொடுத்து கஷ்டத்துக்குள்ளாக்கி அவர்களின் வாழ்நாட்களை வீண்நாட்களாகச் செய்து, முடிவில் மறலிக்காளாக்கி மண்ணில் மாண்டுபோகச் செய்வது திண்ணமென்று எண்ணம் பிறந்தவர் நெஞ்சம் அஞ்சாது அஞ்சார்.

ஆகையால் இத்தகைய கொடிய ரோகத்திற்குக் காரணம் என்ன; இதற்கு விர்த்தி ஸ்தானம் எது; எவ்விதம் பரவுகின்றது; எங்ஙனம் மனிதர் உடலில் புகுகின்றது: இந்நோயின் அறிகுறிகள் எவை; இதைத் தடுக்கும் உபாயங்கள் யாது என்னும் பற்பல விசாரணைகள் இயற்கையாகவே ஏற்படாது இராது.

அவ்விதம் ஆராயுங்கால், கீழ்வருமாறு காணலாம்.

இதற்குக் காரணம் விஷக்கிருமிகள் என்று முன்னரே வரைந்துளது. ஆயினும் இன்னும் ஈரமும், அசுத்தமும் உள்ள இடங்கள்; சுத்த காற்றில்லாத அறைகள், ஜன அடர்த்தியான வாசஸ்தானங்கள், அதிக தூசபாவும் தொழிற்சாலைகள் முதலிய இடங்களிலும், அசுத்தமான நடை, உடை பாவனையில் மிகுந்த பிரஜைகள் மதுபானஞ் செய்பவர்கள், மாம்சபக்ஷணிகள், அதிகமாக ஆயாசத்துடன் வேலை செய்பவர்கள் ஆகிய ஆட்தர்களுக்குள்ளும் இந்நோய் வியாபித்து வெகுவாய் லீலா விநோதங்களைச் செய்யா நிற்கின்றது.

அங்ஙனம் இல்லையேல், இந்நோயின் தொல்லையும் இல்லைதான்.

இதற்கு இவ் வியாதியஸ்தன் சுவாசகோசங்க (buegs) ளே தாய் வீடாகும். குழவிகள் தங்கள் அன்னையர்களிடங்களில் அன்பு பாராட்டி விளையாடல்களைப் புரிவது போல் இவ்விஷக்கிருமிகளும் இங்கு வெகு உல்லாசமாகத் தங்களுக்கு வேண்டிய உணவுகளை உண்டு, இக்கருவிகளைக் கெடுத்து உதிரத்திலும் கலந்து, உமிழ்நீரிலும் வியாபித்து, நோயாளியை பங்கப்படுத்தி தங்களுடைய செயல்களைச் செய்யா நிற்கின்றன.

இங்ஙனமாய கிருமிகள் இந்நோயாளி வெளிவிடும் சுவாசங்களின் வழியாகவும், உமிழ்நீர் த்வாரமாகவும், வெளிப்போந்து இவன் தங்கிஇராநின்ற இடங்களிலுள்ள வாயுவில் கலந்து பரவுகின்றன.

இவ்வண்ணம் இவை பரவி யிருக்குங்கால், ஆங்கு தங்கி இராநின்ற பிரஜைகளின் சுவாச உச்சுவாஸங்கள் (Inhaling and exhaling) த்வாரா குரல்வளை (unied pipe) மார்க்கமாக சுவாச கோசங்களில் (lungs) புகுகின்றன. ஆங்கு அவரவர்களின் தேகஸ்திதிக்குத் தக்கவாறு, பல திங்களாகவோ அல்லது ஆண்டுகளாகவோ தங்கள் காரியங்களைச் செய்கின்றன.

இவ்விதம் புகுந்து தங்கி சுவாஸ கோசங்களைக் கெடுப்பதால் இவ்வியாதியின் அறிகுறிகள் புலப்படுகின்றன. அவை வருமாறு காணலாம்.

இவ்வுலகிலுள்ள ஒவ்வோர் வஸ்துக்களையும் ஜீவர்கள் பாலுள்ள ஒவ்வோர் அவயவங்களையும், ஒவ்வோர் வேலை செய்கிறதற்கே சர்வஜீவதயாபரர் ஏற்படுத்தியுள்ளார். ஒன்றையேனும் வீணுக்கு உற்பத்தி செய்தவர் அல்லர்.

இங்கு தற்காலம் ஆராய்ச்சி செய்யவேண்டிய சுவாச கோசங்களின் தொழில் என்னவென எண்ணுவோம். இக்கருவிகளின் வேலை மனிதருடலிலுள்ள இரத்தத்தைச் சுத்தம் செய்வதேயாம். எப்படியெனின் மனிதருட்கொள்ளும் காற்றிலிரா நின்ற சுவாச வாயு (Oxygen) மிகவும் மிருதுவாய் மிகச்சிறிய பல குழாய்களில் ஓடாநின்ற அசுத்த இரத்தத்தில் (Venous blood) கலந்து அதனைச் சிவப்பாகவும், சுத்தமாகவும் செய்து, ஆங்கு ஏற்படும் விஷக்காற்றாகிய கரியமல வாயுவை (Carbondioxde) வெளிப் படுத்துகின்றன. இங்ஙனமாகவே அல்லும் பகலும் சதா இச்செயல்களைச் செய்துகொண்டே இருக்கின்றன. இதற்கு துணைக்கருவி இருதய (heart)மாகும். இவைகளின் செயல்கள் நிற்கின், மண்ணாலாகிய தேகம் மண்ணாவது திண்ணம்.

அதி அருமையாகிய இவ்விதத் தொழிலை நடாத்திவர சுவாச கோஸங்கள், துர்பலமடையாமலிருக்கக் காத்துக்கொள்ள வேண்டியது அத்தியாவசியம்.

சிருஷ்டி கர்த்தாவாகிய தயாநிதியே, இவ்வருமைக் கருவிகளை, எவ்வகை பாதுகாப்புக்குள் வைத்திருக்கிறார் என்பதையும் காணலாம். மார்பின் விலா எலும்புகளைச் சுற்றி சுவர் வைத்துக் கட்டிய சிற்றறையில் சிறுக்கவும் பெருக்கவும் வெகு ஜாக்கிரதையுடன், வெளியிடையூறுகள் வாராவண்ணம் தங்கள் தொழில்களை நடாத்திவரப் படைத்துள்ளார். ஆகவே மார்பின் அருமையின் பெருமை நன்கு விளங்குகின்றதல்லவா.

மார்பின் மேல் குளிர் காற்று தாக்க விடுவதினாலோ அல்லது வேறு எவ்விதத்தினாலோ யாதாமொரு தீங்கு நேரிடின் நுயுமோனியா (Pneumonia) வென்கிற நோயினால் பலர் வருந்தி மாணிடவாழ்வைத் துறந்து வானுலகேகினர் எனக் கண்டும் கேட்டுமுள்ளோம்.

ஆகையால் மார்பை வெகு ஜாக்கிரதையாகவே, காப்பாற்றிக்கொள்ள வேண்டியதாக இருக்கின்றது.

வெளித்தாக்குதலுக்கே இவ்வித கோரமென்றால், கொடிய விஷக்கிருமிகள் இவ்வரிய கருவிகளில் தங்கி கஷ்டப்படுத்தினால் என்னாகுமென்று கவனிக்கத் தக்கதே யன்றோ?

இக்கிருமிகள் வெகு மெல்லிய உதிரக் குழாய்களின்மேல் தாக்கி, விர்த்தியாய், உச்சிவிப்பதால், அங்கு சிறுகொப்புளங்கள் உண்டாகி, அவைகள் வெடித்து புண்களாய் சீழும், கப (phlegm) மும் உண்டாகின்றன. இவை உடலின் உதிரத்தில் கலந்து வியாபித்து இரத்தத்தை அசுத்தப்படுத்துகின்றது. இரத்தத்தைச் சுத்திசெய்யும் சுவாச கோசங்களை இதற்கு முன்னமேயே பாழ்படுத்திவிட்டதால் இதன் பயனுக்கு ஹானி நேரிட்டது. இங்கு உற்பத்தியான கோழை (phlegm) முதலானவைகளை வெளிப்படுத்த இருமல் (Cough) வருகின்றது. கோழை அதிகமாகவே இருமலும் அதிகமாகின்றது. இதனால் சுவாச இழுப்பு முதலிய பலவித கஷ்டநஷ்டங்கள் உண்டாகின்றன. ஆகவே இருமல் இந்நோயின் முக்கிய அறிகுறியாயினும் நாளடைவில் உடல் மெலிதல், ஜீர்ணஹானி, மலச்சிக்கல், சுவாச இழுப்பினால் நித்திரைபங்கம் முதலியவைகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

தேகத்திற்கு முக்கிய ஆகாரமாகிய சுத்த இரத்தங் கெடுவதினால் பல அவயவங்களுக்குங் கெடுதி சம்பவிக்கின்றது.

இக்கொடிய ரோகத்தினால் நேரிடும் தீங்குகள் பலவாக இருப்பதை உய்த்துணர்ந்து நெஞ்சம் அஞ்சி இதைத் தடுக்கும் உபாயங்களைத் தேடலே மதியூகம்.

(தொடரும்.)

M. பரமகுருநாத முதலியார்.



## குலதிலகர் பகுதி

### அற்புதஞ் செய்யும் அம்மையார்

திரு. ம. திருநாவுக்கரசு தான் நேரே கண்டதாகப் பின்வருமாறு எழுதுகிறார்:—

ஆனித் திங்கள் 27-ஆம் நாளாய (10-7-29) புதன்கிழமை வெளிவந்த 'நவசக்தி' புதினத்தாளில் "ஓர் அம்மையாரின் அற்புதம்" என்ற கட்டுரையை அறிஞர்கள் படித்திருப்பார்கள். அக்கட்டுரையிற் கண்ட அம்மையாரைப் பற்றியேதான் நான் நேரே கண்டு தெளிந்த உண்மையான செய்திகளைக் கூறத் தொடங்குகின்றேன்.

#### அம்மையாரைக் காண்டல்.

திருவையாற்று வடமொழிக் கல்லூரியில் கற்றுவரும் நான் என்னுடன் கற்றுவரும் நண்பர் திரு. வை. கனகசபை என்பார் வழியாக அற்புதஞ் செய்யும் அம்மையாராகிய தெய்வயானை அம்மையின் அரிய செயல்களைப்பற்றி அடிக்கடி கேட்டு மகிழ்வதுண்டு. ஆகவே, அவ்வம்மையின் அருஞ் செயல்களை நேரே காணவிரும்பி நண்பர்கள் கனகசபை, டி. பி. இராமையாச் சேதிராயர், சீனிவாசத் தொண்டார் முதலியவர்களோடு நானும் திருச்சி ஜில்லா, உடையார்பாளையந் தாலூக்காவிலுள்ள செந்துறை என்னும் புகைவண்டி நிலயத்திலிருந்து ஏழுகல் தொலைவிலுள்ள மருதூருக்கு 7-7-29 நாளாய ஞாயிற்றுக்கிழமை காலை போய்ச் சேர்ந்தோம். மாலை ஐந்து மணிக்கு அவ்வூரிலுள்ள தெய்வயானை அம்மையை அவர்தம் சிறிய, நுப்புரவில்லாத வீட்டிற் கூடவந்த நண்பர்களுடன் கண்டேன். அப்போது அவ்வம்மை வீட்டு வேலைகளைச் சுறுசுறுப்புடன் செய்துகொண்டிருந்தனர். எங்களைக் கண்டவுடன் "உட்காருங்கள்" என்று இனிய மொழி பல கூறினார். நான்மட்டும் நின்றுகொண்டே அம்மையார் என்ன செய்யப் போகிறாரென உற்று நோக்கிக்கொண் டிருந்தேன். அப்போது அம்மையார் அருகே கரடுமுரடாகவிருந்த மண் சுவற்றிலிருந்து ஒரு மண்ணாங்கட்டியைப் பேர்த்தெடுத்து நான் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அதை ஒரு சிறு கடிதத்தில் வைத்து மடித்து எனக்கு நேராக இரண்டடி அருகேயுள்ள மாடத்தில் வைத்தனர். இரண்டு (நிமிஷம்) கன்னல்களானவுடன் அம் மண்ணாங்கட்டிப் பெட்டகத்தை யெடுத்து என் கையில் கொடுத்தார். நானதை அவிழ்த்தபோது அம் மண்ணாங்கட்டியானது ஒருருண்டையாகவும் சிறிது திருநீறாகவும் சில சோளமணிகளாகவும் இருப்பக்கண்டு வியப்புற்று நண்பர்கட்குக் காட்டினேன். பின் அவ்வுருண்டையை உண்டேன். அது தேனுந் தினைமாவுஞ் சேர்த்துச் செய்யப்பட்டதாக விருந்தது.

இதன்பின், கூடவிருந்த சீனிவாசத் தொண்டார் தாம் ஒரு செயல்கருதி யிருப்பதாகவும் அச்செயல் கைகூடுமா? கூடாதா? என்றம்மையாரைக் கேட்ப அம்மை ஒரு கடிதத்திற் சிறிது திருநீறு, சிறிய மண் கற்கள், சில பூக்கள் முதலியவற்றை மடித்து அவரிடங் கொடுத்தனர். அவரதை அப்போதே திறந்து பார்க்க அம்மையால் கொடுக்கப்பட்ட பொருள்கள் அப்படியே இருந்தன. அதுகண்ட அம்மையார் அவரை நோக்கி "ஐயா, சிறிது நேரங்கழித்துத் திறந்து பாருங்கள். அப்போது அதில் மிளகு இருக்குமானால் நீங்கள் கருதிய செயல் கைகூடும்" என்றனர். அம்மை மொழிப்படியே சிறிது நேரஞ் சென்றபின் திறந்து பார்த்தபோது அப்பெட்டகத்தில் மிளகு இருந்தது.

#### பழநித் திருநீறு.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு டி. பி. இராமையாச் சேதிராயர் பழநித் திருநீறு வேண்டுமென்று அம்மையைக் கேட்க, உடனே அம்மை எங்கட் கெதிராக விருந்த அறையில் எங்கட்கு நேராக நின்றுகொண்டு ஒரு சிறு தட்டை எடுத்து வாசற்படிக்கு மேலே தூக்கினார். அப்போது அம்மையாரின் கையினகணிருந்த தட்டும் முழங்கைகளிரண்டும் வாசற்படியால் மறைக்கப்பட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் தட்டில் திருநீறும், பூவும், வில்வங்களும் விழுந்தன. விழுந்த ஓசை சிறிதாகக் கேட்டது. அம்மையார் அவைகளை எங்களிடங் கொடுத்தனர். நான் அத்திருநீற்றை முகர அது கற்பூர மணம் வீசவிருக்கக் கண்டேன். திருநீறு மங்கலான நிறமுடையதாக விருந்தது. ஆகையால் இது பழநித் திருநீறல்ல வேறேதோ வொரு திருநீறென்று நினைத்தேன். அம்

துணியேன் என்பதைச் சகோதர சகோதரிகள் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். எந்தச் சகோதர இனத்தவரோடும் நாம் விரோதம் கொள்ளுதல் கூடாது. என்றாலும், உண்மையை விளக்காமல் இருக்கவும் முடியாது. அதை ஒரு வியாஜமாக வைத்துக்கொண்டு அவர்களோடு பகைமை பாராட்டுதலும் கூடாது. இது எனது முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும். ஒழுக்கம் முதலியவற்றால் நம்மினும் வேறுபட்டுள்ள சிலர் 'நாங்களே நவவீரர் பரம்பரையில் வந்தவர்கள்' என்றும், நாங்களும் நவவீரர் பரம்பரையில் வந்தவர்கள்தான்' என்றும், இக்காலத்தில் மாத்திரம் சொல்லிக்கொள்ளுகிறார்கள் என்று எண்ணவேண்டாம். இத்தகைய வீண் போட்டிகள் முற்காலத்திலும் வேறினத்தவரால் ஏற்பட்டுப் பின்னர் அவை இருந்த இடந்தெரியாமல் போய்விட்டன இதற்குமேல் இதைப்பற்றி விரிவாய்க் கூற எனக்கு இஷ்டமில்லை. இவ்விஷயத்தில் யான் நுழைந்ததற்குக் காரணம் என்னவென நீங்கள் நினைக்கலாம். அதனை விளக்குகிறேன். எனது யாத்திரையில் 'செங்குந்தர் அனைவரும்' 'எல்லாச் செங்குந்தர்களும்' என்பவைபோன்ற பிரயோகங்கள் ஆங்காங்கு விரவி வருமாகையால் அவ்விடங்களில் சகோதரர்களை மயங்கவைக்கலாகாதென்னும் கருத்துக்கொண்டே என உணர்வீராக. என் வியாசங்களில் வரும் 'செங்குந்தர்' என்னும் பதமானது நமது முதலாவது மகாநாட்டில் யார் செங்குந்தர்கள் எனத் தீர்மானிக்கப் பெற்றிருக்கின்றனரோ அவர்களை மாத்திரம் குறித்தேயன்றி ஏனையோரைக் குறிக்காது என்பதை மறக்கலாகாது.

குலாபிமான மென்பதைக் கனவிலும் கொள்ள எனக்கு நமது மகாநாட்டிற்குப் பிறகு புத்துணர்ச்சி உண்டாயிருப்பதுபோல ஏனைய சகோதரர்களுக்கும் உண்டாயிருக்கிறதென்பதை யாவரும் மறுக்கமுடியாது. செங்குந்தர்கள் உறக்கத்திலிருந்து விழித்து எழுந்துவிட்டார்கள். இறைவன் கடாக்ஷத்தால் நமக்கு நற்காலம் பிறந்துவிட்டது என்ற நன்நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். எனினும் இன்னும் சில முக்கியமான இடங்களிலுள்ளவர்கள் குப்பர்களுக்கு உத்தம சீடர்களாகவே இருந்து வருகிறார்கள் என்பதையும் மறுக்க முடியாது.

இன்னும் யான் எடுத்த விஷயத்தைத் துவக்காது போய்க்கொண்டேயிருப்பேனாயின் ஒரு சமயம் உங்கள் பொறுமையை நீங்கள் இழக்கநேரிடும். அதற்கிடங்கராவண்ணம் யான் விஷயத்தில் நுழைகிறேன். யான் எனது யாத்திரையை முறையாகச் சொல்லுவேன் என்று எதிர்பார்க்கலாகாது.

சென்ற தை மாதம் ஒரு சுபதினத்தன்று எனது யாத்திரை பயணத்தைத்துவக்கினேன். ஆரம்பத்திலேயே நற் சகுனங்கள் தோன்றி என்னைப் பன்மடங்கு உற்சாகப்படுத்தின. எனது உறவினரும் நண்பர்களும் யான் யாத்திரையாகச் செல்லுகிறேன் என்பதை மாத்திரம் உணர்வார்களே யன்றி விபரம் ஒன்றும் அறிந்தாரில்லை உறவினரும், நண்பர்களும் யான் புறப்படவிருக்கும் தினம் மாலை 2 மணியிலிருந்து என் இருப்பிடத்தை நோக்கி வந்தபடியே இருந்தார்கள். அவர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு குதூகலத்தோடு, 'உமது யாத்திரை உமக்கேயன்றி உம்மைச் சேர்ந்தவர்களுக்கும் நற்பயனை அளிக்கும்' என ஆசீர்வதித்தார்கள். அக்கூட்டத்திலிருந்த வயோதிகர் ஒருவர் அங்கிருந்தவர்களை நோக்கி 'ஐயா இப்பிள்ளை ஆழ்ந்த கல்வியும், கூர்ந்த அறிவும், நல்லோரிணக்கமும், நல்லொழுக்கமும், தெய்வபக்தியும் வாய்க்கப்பெற்றவர் என்பதை யாவரும் உணர்வீர்கள். எங்கள் செங்குந்த குலத்தை விளக்க வந்த ஒரு திவ்யதிலகமென்றே சொல்லுவேன். இப்பிள்ளையைப் பார்க்குந்தோறும் அவரது வாய்ச்சொற்களைக் கேட்குந்தோறும் அவரது பரந்த நோக்கங்களையும் அரிய குணங்களையும் உன்னுந்தோறும் எனக்குண்டாகும் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. எனது ஆப்த நண்பரும் நெருங்கிய உறவினரும் பல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்ற புலவர் பெருமானுமாகிய எங்கள் துற்பாக்கியத்தால் சமீபத்தில் விண்குடியேறிய பெரிய முதலியார் அவர்கள் உண்மையிலேயே பெருந்தலையாளர் என்பது அவர்களது மைந்தர் ஆகிய இப்பிள்ளையினாலேயே நன்கு விளங்குகிறது. 'தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற்காணப்படும்' என்ற மறைமொழிக்குத் தக்க எடுத்துக்காட்டு இதனினும் வேறு வேண்டுமோ? துப்பாக்கியினின்று பீரங்கியல்லோ உதித்தது. என் கூற்று முகஸ்துதி என்னும் குற்றத்துள் அடங்காவண்ணம் இதனுடன் நிறுத்திக் கொள்ளுகிறேன். 'தந்தைசொல்மிக்க மந்திரமில்லை' என்னும் ஆன்றோர் மொழியின் கருத்தை நம்மெல்லோரைக்காட்டிலும் இப்பிள்ளையே நன்குணர்வர். பெரிய முதலியார் அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையில் எவ்வித மனக்குறையுங் கிடையாது. எல்லாப் பாக்கியங்களும் நிரம்பப் பெற்றவர்கள் என்பதை இங்கு உணராதார் யார்? இப்பிள்ளை யென்றால் அவர்களுக்கு உயிர். இவருக்கும் அவர்களிடத்து அன்பு, மரியாதை, அடக்கம் முதலியவை இல்லையென்று சொல்லமாட்டேன். என்றாலும் ஒரே ஒரு விஷயத்தில் இவரிடத்தில் அவர்களுக்குத் திருப்தி யுண்டு. இந்த மர்மத்தை உங்களில் அநேகர் உணர்ந்திருக்கமாட்டீர்கள். பெரிய முதலியார் அவர்கள் இயற்கையாகவே மிகுந்த குலாபிமான முடையவர்கள். சீரிய செங்குந்த குலம் தற்காலம் மிகுதியும் சீர்கேடுற்றிருக்கிறது என்பதை உணருந்தோறும், பேசுந்தோறும் கண்ணீர்விட்டுக் கதறுவார்கள். நம் குலதெய்வமாகிய முருகவேளைத் தியானித்துச் சமுகச் சீர்திருத்தம் செய்ய வல்ல பிள்ளைகளைத் தோற்றுவிக்க வேண்டுமெனப் பிரார்த்திப்பார்கள். இப்பிள்ளையின் அறிவாற்றலைக்கண்டு, தாம் பன்னெடுநாள் கொண்டிருந்த எண்ணம் நிறைவேறுமென நம்பியிருந்தார்கள் ஆனால் இப்பிள்ளைக்குக் குலாபிமான மென்பது எள்ளளவுங் கிடையாது. குலத்தொண்டின் அவசியத்தைப் பற்றிப் பலநடவைகளில் இனிய வார்த்தைகளால் சொல்லியும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே முடிந்தது.

'இவர் தேசியக் கொள்கையுடையவராம். அதாவது நமது இந்தியாதேசம் முன்னேற்றமடையவேண்டுமாம். இந்தியர் இதர நாட்டு மேதாவிகளால் சமமாக மதிக்கப்பெற வேண்டுமாம். இக்கொள்கையை நான் ஒருபோதும் மறுக்கமாட்டேன். ஆனால் எத்தனைப் பேர் இதுவரையில் இவ்வுயரிய கொள்கையோடு உழைத்து வந்தார்கள், வருகிறார்கள்? என்ன ஆய்விட்டது? நம்மினத்தவர் வரையில் பார்ப்போம். நம்மவர்கள் எந்த வகையிலாவது கீழ்க்குப்போவதன்றி மேலுக்கு வந்திருக்கிறார்களா? இதற்குக் காரணம் இன்னதென்று அவர்கள் உணர்ந்தாரில்லை. இந்தியர் எனப்படுவோர் யார்? நாமெல்லாருந்தானே. நாமும் நம் குலத்தவரும் என்னிலையில் இருந்துவருகிறோம்? அம்மாளிங்குப் பசித்திருக்க, கும்பகோணத்தில் கோதானம் செய்வதனால் என்ன பயனுண்டாகும்? நமது நாட்டில் நடையுடைபாவனைகளால் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்ட பல மரபினர்கள் இருந்து வருகிறார்கள், அவ்வவ் வினத்தைச் சேர்ந்த அறிவாளிகள் தம் தம் இனத்தவரைச் சீர்திருத்த முயன்று வருவாராயின், மொத்தத்தில் இந்திய சமூகம் வெகு சீக்கிரத்தில் முன்னேற்ற மடையுமல்லவா? பலன் தரும் ஒரு செடியை வைத்து வளர்ப்பவன் அச்செடியின் வேருக்கு எட்டும்படி நீரை அதனடியில் பாய்ச்சாமல் நமக்கு வேண்டியது காயும் பழமுந்தானே என நினைத்துப் பூத்துக் காய்த்துப் பழுக்கும் கிளைகளின் முனையிலும் இலைகளின் மேலும் நீரைத் தெளிப்பதை யல்லவோ இவர்கள் முயற்சி ஒத்திருக்கிறது?

ஆகையால் இவர் தகப்பனார் அவர் காலத்திற்குப் பின்னாவது அவர்கள் விருப்பத்தை நிறைவேற்ற முயலுமாறு இப்பிள்ளையை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அவ்விஷயத்தில் உங்கள் அனைவருடைய உதவியையும் நாடுகிறேன் என மிக ஆத்திரத்தோடு கூறினார்.

இவற்றையெல்லாம் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த யான் வயோதிகர் பேச்சின் ஆரம்பத்தில் அங்கிருந்தோர் முகங்கள் மலர்ந்திருந்ததையும் பின்னர் வாட்ட முற்றதையும் கண்டேன். இனிப் பலர் பலவாறு பேச இடந்தராலாகாதெனக் கருதி யான் உடனே அனைவரையும் நோக்கி 'யான் சொல்லுவதைச் சிறிது கவனித்துக் கேளுங்கள். மாமா நீங்கள் ஆயாசப்படவேண்டாம். என் அறியாமைக்காக என்னை மன்னிக்கவேண்டுகிறேன். யான் புறப்படுகிற சமயத்தில் சொல்ல நினைத்திருந்ததை இப்போதே வெளியாக்கும்படி மாமா எனக்குச் சந்தர்ப்பம் தந்ததைப்பற்றிச் சந்தோஷிக்கிறேன். சாதாரணமாய் யாத்திரை செய்வோருள் சிலர் தீர்த்த யாத்திரையையே பிரதானமாகவும், சிலர் சிவஸ்தல யாத்திரையையே முக்கியமாகவும், மற்றும் சிலர் விஷ்ணுஸ்தல யாத்திரையும் அவசியமெனவும் கருதிச் செல்வதுண்டு. ஆனால் யான் செய்யக்கருதியுள்ள யாத்திரை எத்தகைத்தோவெனில் கூறுகிறேன் கேளுங்கள். எனது யாத்திரை எமது குலப்பெருங் கடவுளாகிய முருகப்பெருமான் சதா நீங்காது எழுந்தருளியுள்ள செங்குந்த கோட்டங்களாகிய தலங்களையே பிரதானமாக நாடிச் செல்லும் செங்குந்த யாத்திரை எனப்பெறும். சமீபத்தில் என் மனதில் உண்டான பெரிய மாறுதலை நீங்கள் அறிந்திருக்கமாட்டீர்கள். எனது தந்தையார் சொல்லை அலக்ஷியம் செய்து அவருக்கு என்னிடத்தில் அதிருப்தி உண்டாக்கிய தைப்பற்றி இப்போது வருந்துகிறேன். செங்குந்தர்களுக்குக் குலாபிமானமே கிடையா

மிகவும் அழகானது. இவ்விடத்திலிருந்து 2 மைல் தான், அங்கு வசிக்கும் செங்குந்தர்கள் பரம்பரையாகச் சைவசீலர்கள். ஏனைய ஊர்ச் செங்குந்தர்களுக்கும் இவர்களுக்கும் மிகுந்த வித்தியாசம் தோன்றும் மதுபானம் செய்தல் முதலிய துராசாரங்கள் இங்கு கிடையாது. இவ்வூரில் பெரும் பகுதியினராயுள்ள இவர்கள் ஆசாரத்தால் வாந்திபேதி முதலிய வியாதிகள் இங்கு வருவதே கிடையாது என்று கேள்விப் பட்டிருக்கிறேன். இவ்வூர் உமக்கு மிகுந்த ஊக்கத்தைத் தருமென்பதில் சந்தேகமில்லை என்று சொல்லி எனக்கு உற்சாக மூட்டினார். இவ்வாறு பேசிக்கொண்டேயிருக்கையில் மணி 5 ஆகிவிட்டது. யான் என் நண்பரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டேன்.

கொஞ்சதூரம் போனதும் பொழுது நன்றாய் விடிந்துவிட்டது. அப்போது என் எதிரில் தோன்றிய காட்சி என் கண்களையும் மனதையும் கவர்ந்துகொண்டது. இக்காட்சியை என்னிஷ்டப்படி வர்ணிப்பதென்றால் மித்திரன் அதற்கு இடமன்று. ஆயினும் சுருக்கமாகச் சொல்லுகிறேன். காலை வேளையில் எதிரே தோன்றிய பரந்த பசிய வயல்களையும் அடுத்தடுத்துள்ள ஆற்றுக்கால்களையும் நோக்கின கண்ட எனக்குண்டான சந்தோஷத்தை ஈண்டு வரைந்து முடியாதென்று விடுத்து மேற்செல்லுகிறேன். மண்ணுலகிற்கும் விண்ணுலகிற்கும் போக்குவரவுக்காக, இடையிடையே பசிய தழைகள் அமைத்த வாடாப் பூமாலை முதலியவற்றால் அலங்கரிக்கப் பெற்றுள்ள பல ஏணிகளோவென்றும், மண்டலத்தை ஓரடியால் அளக்க அன்று ஓங்கி நின்ற நெடுமாலோவென்றும் சந்தேகிக்குமாறு, ஆகாயத்தை அளாவி நின்ற கரும்பு, கமுகு, தென்னை, வாழை, பலா, மா, அசோகு முதலிய பயிர்களும் விருக்ஷங்களும் நெருங்கிய சோலைகளையும் கண்டேன். அழகு பெற அமைந்துள்ள பாதையைக் கடந்து செல்லுங்கால் அநேக வாய்க்கால்களையும், தாமரை, அல்லி, நீலோற்பலம் முதலிய புட்பங்கள் நிறைந்த அழகிய தடாகங்களையும் கண்டேன். மிகுந்த உற்சாகங் கொண்டேன், நீர் நிறைந்த அத்தடாகங்களில் புட்பித்துள்ள வெண்டாமரை மலர்களின் மேலிருந்து உறங்கும் வெண் குருகுகள், தவத்திற்குரிய இமயமலையைத் துறந்து பல தலங்களிலும் இதுவே சிறந்ததெனத் தேர்ந்து வந்து பலவுருக்கொண்டு தவங்கிடக்கும் கலைமகளாகிய சரஸ்வதியை ஒத்திருந்தன. அவ்விய தடாகங்கள் பல்லுருக்கொண்டு விளங்கும் மேகவர்ணனாகிய திருமாலின் திருமேனியையும், மலர்ந்து இனிய தேன் சொரியும் செந்தாமரைப் புட்பங்கள் அவரது வாய், கண், கை உந்தி, திருவடியாதிய அழகிய அவயவங்களையும், அத்தாமரை மலர்களிலுறையும் சங்கங்களும் ரீங்காரம் செய்யும் வண்டுகளும் ரக்ஷகர்த்தாவின் கரதாமரையிலமர்ந்த பாஞ்சசன்யத்தையும் இதய தாமரையிலுறையும் திருமகளையும், உந்திக்கமலத்தில் தோன்றிய சதுர்வேத கர்த்தாவாகிய பிரமனையும் ஒத்திருந்தன. ஜாதி மரங்களுக்குமேல் ஓங்கி வளர்ந்து பூக்கள் நிறைந்து பல செந்நிறக் கொடிகளால் மூடப்பட்டுள்ள கடுக்கை (கொன்றை) மரங்கள் உமாபிராட்டியாரை இடைபிரியாது தமதுடலின் ஓர் பாகத்தை அளித்தருளிய சிவபெருமானைப் போன்றிருந்தன.

இவற்றை எல்லாம் கண்டுகளித்த யான் திரிமூர்த்திகளும் இந்திராதி தேவர்களும் தங்கள் தங்கள் தேவிமாரோடு விரும்பி வாழும் தலம் இதுவே என நினைத்தேன். அந்தக் காலையில் வரிசை வரிசையாக அவ்வணைகளை அணிந்தவராய் நீராடவரும் ஆடவர்களையும் பெண்மணிகளையும் கண்டுவந்தேன். அவர்களுள் பலர் சிவனடியார் வேடந்தரித்த தன்மையைக் கண்டு என்னைக்கண்டு வணங்கி சுவாமிகள் எங்கு செல்கிறீர்கள்? இத்தலத்தில் சிலகாலம் தங்கிச் செல்லலாமே? எனப் பலவாறு உபசரித்தனர். யான் பதில் கூறாது சென்றுகொண்டேயிருந்தேன். கொஞ்சதூரம் சென்றதும் தாமரைமலர்கள் நிறைந்த ஒரு பெரிய தடாகத்தைக் கண்டேன். அதன் நாலு பக்கங்களிலும் அழகிய படித்துறைகள் அமைக்கப்பெற்றிருந்தன. ஒவ்வொரு துறையிலும் ஜனங்கள் நிறைந்து ஸ்நானம் செய்துகொண்டிருந்தார்கள். இதன் வடகரை சமீபத்திலிருக்கும் பெருங்கோயிலைக் கண்டேன். தடாகத்தைச் சுற்றிப் பல கோயில்களும், அவற்றைச் சுற்றி ஆகாயத்தை அளாவிய ஆல், அரசு, இலுப்பை, மா முதலிய பல விருக்ஷங்களும், நந்தவனங்களும் அழகாக அமைந்திருந்தன, பறவைகள் இனிமையாகப் பாடிக்கொண்டிருந்தன. இவற்றையெல்லாம் சுற்றிப் பார்த்துக்கொண்டுவரும் போது குளக்கரையில் மயில்கள் தோகைகளை விரித்து ஆடுவதைக்கண்ட சில சிறுவர்கள் களிப்படைந்து அவற்றின் அருகே சென்று அவற்றை உற்று நோக்குவோரும், முதுகைத் தடவிக் கொடுப்போருமாக இருந்தனர். இத் தோற்றமானது என் மனதைக் கவர்ந்து ஆனந்தம்



செய்தது. ஆனந்தக் கண்ணீர் ஆறாய்ப் பெருகிற்று. பரவசனாய்ப் பலவாறு பாடத் தொடங்கினேன். வாழையடி வாழையென வந்த (செங்குந்த) திருக்கூட்ட மரபினிலே யானும் ஒருவனாகையால் எம்மை வழிவழியாட்கொண்டருளிய எங்கள் குல தெய்வமாகிய இளம்பூரணன் அடியார்களுக்கு மயில்மீதமர்ந்து அருட்காட்சி கொடுத்தருள உத்தேசித்ததையுணர்ந்தும் அவ்வரிய காட்சியானது என்னைப் பேரானந்தக் கடலில் ஆழ்த்தியது ஆச்சரியமாகாது. சூரியன் உதயமாகிற காலை வேளையில் அங்குச் சென்று, இயற்கையழகைத் துய்க்காணவல்ல அறிவுடைய எவர்தான் பேரானந்தமடையாதிருப்பார்?

பாதைக்குக் கீழ்த்திசையிலிருந்த தடாகத்தையும், அதன் வனப்பையும் கண்டு களித்த யான் பின்னர் மேற்குத் திசை திரும்பினேன். அங்கு எவரும் எளிதில் தரிசித்துய்யுமாறு எழுந்தருளியுள்ள கருணை ததும்பும் விநாயக மூர்த்தியைக் கண்ணாரக்கண்டு வணங்கி யான் தொடங்கிய யாத்திரை யாதொரு இடையூறுமின்றி முற்றுப் பெறுமெனவும் முழு நம்பிக்கைகொண்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்தேன். மணி 6-30 ஆயிற்று. அப்போது ஸ்நானம் செய்து நித்தியானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு தமதில்லம் நோக்கிச் செல்லும் வீரசைவர்களும், சுத்த சைவர்களும் என்னைக்கண்டு பலவாறு உபசரித்து அழைத்தார்கள். நான் மௌனம் சாதித்து அவர்களைப் போகும்படி ஜாடை காட்டினேன். என் மௌனம் அவர்கள் என்பால் காட்டிய அன்பை மேன்மேலும் பெருகச்செய்தது. ஒரு பெரிய சிவனடியார் குளக்கரையில் வந்திருக்கிறார் என்ற செய்தி ஊர் முழுதும் காட்டுத்தீப்போல் பரவிற்று. பின்னர் வாய் பொத்தி விபூதி ருத்திராக்ஷதாரியாய் என் அருகே மெய்யன்போடு நின்றுகொண்டிருந்த ஒரு வாலிபனை நோக்கி யான் ஸ்நானம் செய்வதற்குத் தகுதியான துறை யாது என வினவினேன். அவ்வாலிபன் உடனே 'சுவாமி அதோ தெப்பக்கரையிலுள்ள துறை செங்குந்த பெண்மணிகளுக்குரியது. இதோ இவ்வரசமர ஆலயத்தை அடுத்தாற்போலுள்ளது செங்குந்த ஆடவர்களுக்குரியது. அடுத்தபடியாக உள்ளதுதான் தங்களைப் போன்ற வைதீகர்கள் ஸ்நானம்செய்யும் துறை. அக்கரையிலுள்ள துறை பிற ஜனத்தவர்களுக்குரியது. சுவாமிகள் வைதீகத் துறைக்குச் செல்லுவதுதான் உசிதம்' என்று கூறிச் 'சுவாமிகளது பெட்டியை எடுத்துக்கொள்ளலாமோ?' எனப் பணிவுடன் கேட்டுப் பெட்டியையெடுத்துக் கொண்டான். யான் சிறுவனுடன் அத்துறைக்குச் சென்று ஸ்நானம் செய்து சிவபூஜை முடித்துக்கொண்டு ஆங்கு ஓர் ஆலமரத்தடியிலிருந்த மேடையின்மேல் உட்கார்ந்து வழக்கம்போல சைவத் திருமுறை பாராயணம் செய்ய ஆரம்பித்தேன். யான் சங்கீதத்தில் தேர்ந்தவனல்லவாயினும் திருமுறை பாராயணத்தை முன்னிட்டுச் சொற்பஞானம் பெற்றுள்ளேன். அதற்கிசைந்தபடி பக்தசிரோமணிகளால் பாதகாணிக்கையாகவும் இனாமாகவும் கொடுக்கப்பட்ட செல்வப்பெருக்கால் உலகவிசாரமின்றி உண்டு களித்து உலாவிவரும் சில சாமிகளின் திருமேனியைப்போல இளமையிலிருந்து செய்து வந்த தேகப் பயிற்சியால் அழகும் அமைந்து வெண் திருநீற்றினாலும், காயத்ரீமான உருத்திராக்க மாலைகளாலும் பொலிவுற்ற அவயவங்களோடு விளங்குகிற எனது தேகம், ஆசாரிய சுவாமிகளின் அருட்செயல்களைக் காதால் கேட்போர்க்கும் பெரும்பயன் உண்டென்னும் நம்பிக்கையுடைய யான் பாராயணஞ் செய்யுங்கால் எடுத்தே ஓதுவது வழக்கம். திருமுறையைத் 'தோடுடைய செவியன்' எனும் திருப்பாசுரத்தால் துவக்கினேன். எனது அமுதக் குரலும், பொருள் எளிதில் விளங்குமாறு பதச்சேதம் செய்யும் இசை இலக்கணத்திற்கு முரண்படாது பாடிய திறமையும், எவ்வளவு பரிசுத்தமான சடையார் கோலமும், எவரைத்தான் பக்திப் பரவசராக்கி என்னிடத்து அன்புசெலுத்தச் செய்யாதிருக்கும்? பொதுவாக அந்தணர்களையும், சிறப்பாகச் சிவனடியார்களையும், உபசரித்து இம்மையில் இறைவனைக் குறைவுடைய செங்குந்த சைவர்கள் என்னைச் சூழ்ந்து திரளாகக் குழுமினர் என்பது ஆச்சரியமாகாது.

அநேகர் என் எதிரில் வந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துக் கைகூப்பி நின்றனர். அவர்கள் விபூதி கேட்கிறார்கள் என்று உணர்ந்தும், பாராயண காலத்திலும், அனுஷ்டான காலத்திலும் சில போலி அடியார்களைப்போல், மன ஒருமையைக் கெடுக்கக்கூடிய பிறரோடு பேசுதல் முதலிய காரியங்களை நடத்தாதென்ற கொள்கையுடைய யான் ஒன்றையும் கவனியாது பாராயணம் செய்துகொண்டேயிருந்தேன். பாராயணம் செய்கிறவரையில் அவர் கூப்பிய

கையினராயும், சிலர் கட்டிய கையினராயும், வேறு சிலர் அசைத் தலையினராயும், மற்றுஞ் சிலர் மூடிய கண்ணினராயும் அசையாது நின்றுகொண் டிருந்தனர். பன்னிரண்டாந் திருமுறை பூர்த்தியானதும், அங்கிருந்த அன்னவரும் கை நீட்டி நிற்கக்கண்டு திருநீற்றுப் பையை அவிழ்த்து ஆசிர்வதித்து விபூதிப் பிரசாதம் அளித்தேன். அச்சமயத்தில் என்னை ஸ்நானத்திற்கு அழைத்துவந்த வாலிபன் என் அருகே பெட்டியின் பக்கத்தில் நின்றுகொண் டிருப்பதைக் கண்ட சிலர் அவனைத் தனியே அழைத்து என்னைக்குறித்து விசாரிக்கலாயினர். அவனுக்கு யாதொரு விபரமுந் தெரியாமையால் ஒரு வயோதிகர் என்னை யணுகி, 'சுவாமிகள் எவ்விடத்ததோ? யாங்கள் புண்ணியமுடையோ மாகையால் இன்று தரிசனம் பெற்றோம். சுவாமிகளுக்கு என்ன செய்ய வேண்டும். ஆணையை எதிர்பார்த்து நிற்கின்றோம்,' என்று பணிவுடன் கூறிக்கொண்டிருக்கையில் வடபக்கத்திலிருந்து சுமார் பத்தைந்து கனவான்கள் சூழ வேகமாகவந்த ஒருவர் என் எதிரில் வந்து 'இச்சிவத்தைக் காண இன்று என்ன தவம் செய்தேனோ?' என்று சொல்லிக்கொண்டே அடியற்ற மரம்போல் வீழ்ந்தார். யான் அவரை ஆசிர்வதித்து எழுந்திருக்கச் சொன்னேன். அவர் உடனே எழுந்து அருகே வந்து, இனமுகங்காட்டி, இனிய மொழிகளால் உபசரித்து 'யான் எடுத்த பிறவியின் பயனை இன்றே எய்தினேன் வேறு சம்பத்திலதான் இருக்கிறது. சுவாமிகள் எழுந்தருளலாமே' என வினயத்தோடு கேட்டுக்கொண்டனர். யான் மேடையை விட்டுக் கீழே யிறங்கினேன்.

எனக்குச் சீடனாகச் சேர்ந்த வாலிபன் உடனே பெட்டியை எடுத்துக்கொண்டு 'சுவாமி! இவர்கள்தான் நாட்டாண்மைக்காரர்; நன்றாய் வாழ்ந்தவர்; பெரிய தனவந்தர்' என உரைத்தான். யான் தலையை அசைத்தேன். உடனே அனைவரும் வரைநோக்கிப் புறப்பட்டோம். புறப்பட்டது முதல் சிவசின்னங்களை தரித்து என்னைச் சூழ்ந்துவந்த நூற்றுக் கணக்கானவர்கள் அடிக்கடி 'அரோகரா' என்னும் முக்கட் கரும்பின் திருநாமத்தைச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். யான் சுற்றுப்பார்த்துப் போகையில் தங்கொண்டு என் அருகே வந்துகொண்டிருந்த நாட்டாண்மைக்காரரை நோக்கி, "முதலியாரே, இத்தலத்திற்கு ஆளுடைய பிள்ளையார் அருளிச்செயல் உண்டோ?' என வினவினேன். 'சுவாமி மூவர் பாடலுமுண்டு. அருந்தனி என்னும் சிவாலயத்திற்கே முன்னர் செல்லுவோம். சுவாமிகள் குறிப்பை அறிந்துகொண்டேன். சிவக்கொழுந்தாகிய ஆளுடைய பிள்ளையார் ஆயிரக்கணக்கான அடியார்கள் சூழ அன்று இங்கெழுந்தருளிய திருக்கோலத்தைக் கண்டு தரிசிக்கப் புண்ணியஞ்செய்யாத யாங்கள் இன்று சுவாமிகள் திருவருளால் ஒருவாறு திருப்தி யடைந்து மகிழ்கின்றோம்.

(அரோகரா என்ற சப்தம்)

எங்கள் முன்னோர்கள் செய்த தவப் பயனாக எழுந்தருளிய சுவாமிகள் எவ்விடத்ததோ? எங்கிருந்து வருகின்றீர்? எப்போது சாப்பிட்டதோ? காபி சாப்பிடுவதுண்டோ?' என வினவினர், யான் 'ஐய! யாம் ஒரு யாத்திரைவாசி. புண்ணிய தலங்களெல்லாம் சென்று இறைவனைத் தரிசிப்பதே எமது நோக்கம். ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வருகிறவழியில் இத்தடாகத்திலேதான் நித்திய காமங்களை முடித்துக்கொண்டேன். காபி சாப்பிடுகிற வழக்கம் இல்லையாது.' எனப் பதிலுரைத்துக்கொண்டே வருகையில் அருந்தனி அணுகிறது. உள்ளே சென்று எழுமை யாள எழுந்தருளியுள்ள பக்தி வல்லிறைம்பம் முகக்டகருயலபயும் இயமப்பிடியையும் தரிசித்துக்கொண்டு ஒரு விசாலமான மண்டபத்தில் உட்கார்ந்தோம்.

(தொடரும்.)

---

விகடம்.

பிராமணனொருவன் செட்டியிடம் அணைத்துக்கொண்டுவந்து 'பிரபு இதை உமது தலைமேல் போட்டால் சகல சம்பத்தும் பெருகும்' எனச் சொல்லித் தானம் கேட்டான்.

செட்டி, 'நீ தரித்திரனாயிருப்பதனால் உன் தலைமேல் போட்டுக்கொண்டனை யானால் பணக்காரனாயிருப்பாய்' என்றான்.

* * * *

காப்பிக்கடைக்காரனொருவன் எங்கே வைத்தால் நன்றாக வியாபாரம் நடக்கும் என யோசித்து எல்லோரும் இளைப்புடன் வரும் இடம் சுடுகாட்டுக்குப் போய் வரும்போது என எண்ணி மயானத்தின் சமீபம் வைக்கலாம் எனத் தீர்மானித்தான்.

* * * *



# செங்குந்தர் கிளர்ச்சி

## செங்கற்பட்டு ஜில்லா கிளர்ச்சி

### சென்னைச் செங்குந்த வாலிபர் சங்கம்

16-8-29 மாலை 5-30 மணிக்கு 177, தர்பு செட்டித்தெருவில் திருவாளர் கா. பா. சக்கரபாணி முதலியார் பி.ஏ., பி.டி., அவர்கள் தலைமையின்கீழ் நடந்த சங்கத்தின் ஆசம்ப உபந்யாசக் கூட்டத்தில் திருவாளர் வி. இரத்தின முதலியார் பி.ஏ., பி.எல்., அவர்கள் சங்கத்தின் சார்பாக இவ்வாண்டுத் தேர்ந்த பட்டதாரிகளுக்கு ஒரு நல் விருந்தளித்தார். தலைவர் முடிவுரையாக, காரியதரிசியும் விருந்தளிப்போரும் பட்டதாரிகளை வரவேற்றபின் சங்கத் தலைவர் திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., அவர்கள் பட்டதாரிகளுக்கும் வாலிபர்களுக்கும் அவர்கள் வாழ்க்கையில் அநுசரிக்க வேண்டிய முறைகளையும் தங்கள் குல மேன்மைக்காக எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சிகளையும் பற்றி ஒரு நல்லுபதேசம் செய்தார்கள். பட்டதாரிகள் பதிலுரைத்த பின்னர், உபந்யாசகர் திருவாளர் ஸி. பி. ராமன் முதலியார் பி.ஏ., பி.எல்., அவர்கள் நம் குலத்திலுள்ள குறைகளைக் குறித்தும் அவற்றை யொழிக்கற்கு வாலிபர் செய்யவேண்டிய வேலைகளைக் குறித்தும் பேசினார்கள். பிறகு, திருவாளர்கள் மா. அ. கனகசபை முதலியார், பி.ஏ., மாணிக்கவாசக முதலியார், தி. அ. சண்முக முதலியார் ஆகியோர் கடைசி அரிய சொற்பொழிவுகளால் அனைவரது செவிகளுக்கும் விருந்தளித்தனர்.

தலைவர் முடிவுரை முடிந்ததும், வந்தனோபசாரத்துடன் கூட்டம் சுமார் 9-30 மணிக்கு இனிது கலைந்தது.

இவ்வருடம் சர்வ கலாசாலைப் பட்டப்பரீக்ஷையில் தேறிய செங்குந்தர்கள் :—

சை. பா. சந்திரசேகர முதலியார் எம்.ஏ., (ஆனர்ஸ்) பி.எல்., (ஆரணி சைதாப்பேட்டை).

க. கு. விநாயக முதலியார், பி.ஏ., பி.எல்., (திருமயிலை).

தி. ரா. சுந்தர முதலியார், பி.ஏ., (திருச்செங்கோடு.)

க. சக்கிரவேல் முதலியார், பி.ஏ., காஞ்சிபுரம்.

வ. நடேச முதலியார், பி.ஏ., (குடியேற்றம்).

### திருமயிலைச் செங்குந்த வாலிபர் சங்கம்.

திருமயிலைச் செங்குந்தர் வாலிப சங்கத்தின் ஆதரவின்கீழ் 4-8-29 மாலை $4\frac{1}{2}$-மணிக்கு மேற்படி சங்க வாசகசாலையில் திருவாளர் V. இரத்தின முதலியார் B.A., B.L., அட்வகேட் அவர்கள் அவைத் தலைமையில் சென்னை புலால் மறுத்தல்சங்கப்பிரசாரகரான திருவாளர் K. C. வெங்கட முதலியார் அவர்கள் "தேவதை முன் பலியிடலாமா?" என்னும் அரிய விஷயத்தைப்பற்றிச் சுமார் $1\frac{1}{2}$-மணி நேரம் சொற்பொழிவு நிகழ்த்தினார். அவர் செய்த உபந்யாசத்தின் சாராம்சமாவது :—பொங்கலும் பலியிடப்படுவதற்குக் காரணமாய தேவதைகளை ஞானவான்கள் யாடக்கூடாதென்றும், அவற்றுக்குப் பலியிட வேண்டுமென்னும் வன்மை பெற்றிருக்கிறார்களென்றும், அந்தகைய தேவதைகளும் உண்மையாக உயிர்ப்பலி விரும்புவதில்லை என்றும், இது பூசாரிகளின் கொடிய வஞ்சகங்களேயென்றும், அவ்வாறு வதைக் கொன்று அதன் மாமிசத்தை உண்ணக் கொள்வோமானால் அது காது தேக அமைப்பை நோக்குங்கால் ஒவ்வாததாயிருப்பதோடு பிணைவை நோய்கள் வருவதற்குக் காரணமாயிருப்பதற்குரிய சில ரசாயன சாஸ்திர சம்பந்தமான பிரமாணங்களை எடுத்துக் காட்டியும் சர்வ வியாபகனாகிய இறைவன் இத்தகைய உயிர்ப் பலியிடுதலாகிய செய்கையை விழைவானென்பது நமது அறியாமையேயாகும் என்றும் இவ்விதமாக விளக்கினார்.

பின்பு புராணிகர் கோவிந்தசாமி பிள்ளையவர்கள் செங்குந்த மரபினருக்கும் இத்திருமயிலைக்கும் உள்ள சம்பந்தமுற்ற தன்மையைச் சுருக்கமாக எடுத்துப் பஞ்சாமிர்தம்போல் எல்லோருள்ளத்திலும் பதிய வைத்தார்.

தலைவர் முடிவுரை கூறியபின் வழக்கப்படி வந்தனோபசாரம் மாலை மரியாதைகளுடன் வழங்கப்பட்டு இரவு 7-மணிக்குக் கூட்டமினிது கலைவுற்றது.

24-8-29 மாலை 5-மணிக்கு மேற்படி சங்க வாசகசாலையில் திருவாளர் S. குழந்தைவேலு முதலியார் Manager, F.P.R. அவர்கள் அவைத் தலைமையில் திருவாளர் ஸி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் "திருமுறை கண்ட வரலாறு" என்னும் அரிய விஷயத்தைப்பற்றிச் சுமார் 1 மணி நேரம் சொற்பொழிவு நிகழ்த்தினார். இறுதியில் தலைவர் பின்னுரை கூறப்பட்ட பின்பு மாலை மரியாதைகளுடன் வந்தனோபசாரம் வழங்கப்பட்டு மாலை $7\frac{1}{2}$-மணிக்குக் கூட்டமினிது முடிவு பெற்றது.

31-8-29 மாலை 5-மணிக்கு மேற்படி சங்க வாசகசாலையில் திருவாளர் S. தருமலிங்க நாயகர் Member, D.E.C. அவர்கள் அவைத் தலைமையில் திருவாளர் M. சுந்தரவடிவேலு அவர்கள் "பெண் கல்வி" என்னும் விஷயத்தைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்திய பின்பு திருவாளர்கள் புராணிகர் கா. கோவிந்தசாமி பிள்ளையவர்களும், A. இராமசாமி முதலியார் அவர்களும் தழுவிப் பேசியதும் தலைவரால் பின்னுரை கூறப்பட்டன. இறுதியில் மாலை மரியாதைகளுடன் வந்தனோபசாரம் வழங்கப்பட்டு சுமார் 8-மணிக்குக் கூட்டமினிது கலைவுற்றதெனத் தெரியப்படுத்துகிறோம்.

## செங்குந்த வாலிபர் சங்கம், காஞ்சீபுரம்.

7-7-29 ஞாயிற்றுக்கிழமை காலை கூடிய நிர்வாகக் கூட்டத்திற்குத் திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றம் செய்யப்பெற்றன.

1. திருவாரூர் உயர் திருவாளர் தி. கா. சபாபதி முதலியார் சமீபத்தில் நாகப்பட்டினம் தாலுகா போர்டு எலெக்ஷனில் வெற்றி பெற்றமைக்காக இக்கூட்டம் தனது சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. திருச்செங்கோடு T. R. சுந்தரம் B.A. அவர்கள் உயர்தரப் படிப்பை உத்தேசித்து சீமைக்குச் செல்வதைக் கேட்டு இக்கூட்டம் மிக சந்தோஷப்படுவதோடு நமது மரபினிலேயே முதல் மாணவராகச் சீமைக்குச் செல்லும் அவர்கள் வெற்றியுடன் திரும்புமாறு இக்கூட்டம் இறைவனை வாழ்த்துகிறது.

3. சென்னை அரசாங்கத்தில் கலால் மந்திரி கனம் S. முத்தையா முதலியார் B.A., B.L., அவர்கள் மதுவிலக்குப் பிரசாரம் புரிவதற்காக நான்கு லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்திருப்பதற்காக அவர்களை இக்கூட்டம் பாராட்டுவதோடு ஆறு லட்சம் ஜனத்தொகையுள்ள செங்குந்தர்களுக்குத் தலைச்சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினர் தமது பிரசாரத்தில் மதுவிலக்குப் பிரசாரத்தையும் ஒரு முக்கிய பாகமாகக் கொண்டு உழைத்து வருவதால் அரசாங்க மதுவிலக்குப் பணத்திலிருந்து மை சங்கத்திற்கு ஒரு பாகம் உதவிபுரியுமாறு இக்கூட்டம் மிக வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது.

4. காஞ்சிபுரம் முனிசிபல் சேர்மென் திருவாளர் C. சாம்பசிவ செட்டியார் அவர்களுக்குக் காருண்ய கவர்ன்மெண்டார் ராவ்சாகிப் என்னும் பட்டத்தை அளித்தமைக்காக இக்கூட்டம் தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றது.

4-8-29-ல் திருவேகம்பன் தெரு விநாயகராலயத்தில் மாலை 6-மணிக்குஒரு பொதுக்கூட்டம்கூடிற்று, அவ்வமயம் சென்னை திரு. மா. அ. கனகசபைமுதலியார் அவர்கள் வந்திருந்தனர். முக்கியமானவர்களுக்கு புஷ்பமாலை போடப்பட்டதும் இன்னிசைக் கருவிகளுடன் தேவார பாராயணம் செய்யப்பெற்றது. திரு. இராஜவேலு முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர் திரு. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் கல்வி என்பதைப்பற்றியும், சோ. குமாரசாமி முதலியார் நல்லொழுக்கம் என்பது பற்றிப் பேசத் தொடங்கி மதுமாம்சவிலக்கு, ஒழுக்கத்தினால் வரும் உயர்வு முதலியவற்றையும் தெளிவுபடக் கூறினார்கள். திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் நம்முடைய பண்டைய நிலைமையும், தற்கால நிலைமையும், அவை திருந்த வேண்டிய முறைகளும், கல்வியினால் அடையும் நலனும், செங்குந்தர் கல்வி நிதிச் சீட்டு என்பது பற்றியும் கேட்போர் மனதில் பதியும்படி உதாரணங்களுடன் நீண்டதோர் சொற்பெருக்கிட்டனர். திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள் செங்குந்த வாலிபர் சங்கத்தில் ஒவ்வொரு செங்குந்தரும் அங்கத்தினராகச் சேரவேண்டுமென்றும் செங்குந்தர் இரவு பாடசாலையைப் பற்றியும் விரிவாக எடுத்துச் சொன்னார்கள். பிறகு காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டுச் சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டு இரவு 10-மணிக்குக் கூட்டம்இனிது நிறைவேறியது.

## அமாவாசை உபந்நியாசம்.

3-9-28-ல் பிள்ளையார் பாளையம் மாதனம் பாளையத்தெரு விநாயகர் ஆலயத்தில் மாலை 6-மணிக்குத் திருவாளர் கோவிந்தராஜ முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. அது சமயம் திருவாளர்கள் வீ. திருஞானசம்பந்த முதலியார், சி. அருணாசல முதலியார், து. செ. கந்தசாமி முதலியார் ஆகியோர் முறையே பண்டைய நிலைமையும் தற்கால நிலைமையும் செங்குந்தர் கல்வி நிதிச்சீட்டு செங்குந்தர் மகாநாடு நமது முன்னேற்றம் முதலிய விஷயங்களைக்குறித்து நீண்ட சொற்பொழிவுகள் செய்தார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரங் கூறப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது.

அன்று காலை கூடிய நிர்வாகக் கூட்டத்தில் பாடசாலையின் சப் கமிட்டியார் ஐந்து ரூபாய் சம்பளத்தில் ஒரு லோயர் கிரேட் ஆசிரியர் நியமித்திருப்பதை அங்கீகாரம் செய்யப்பெற்றது. இன்னும் சில முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றம் செய்யப்பெற்றன. சென்ற 15-8-29-ல் நமது இரவு பாடசாலைக்கு இரண்டு பெட்ரோமாக்ஸ் விளக்கு, இரண்டு நாற்காலி, இரண்டு போர்டு B டைம்பீசு கெடியாரம் ஒன்று மணி ஒன்று மேஜை ஒன்று முதலிய சாமான்கள் புதியதாக வாங்கினதைக் காஞ்சிபுரம் சேஞ்ச டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்கள் பார்வையிட்டனர்

## வடதிருநாகேஸ்வரம் செங்குந்த வாலிபர் சங்கம்.

1. சுக்கில௵ ஆனி௴ 20௳ மாலை 6-30 மணிக்குச் சங்க ஆபீசில் கூடிய கூட்டத்தில் இராப்பாடசாலை ஏற்படுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பெற்றது.

2. ஆடி௴ 17௳ மாலை 6-மணிக்குத் திரளான ஜனங்கள் சங்க ஆபீசில் குழுமினார்கள். கூட்டத் தலைவர் திரு. ஆ. தக்ஷிணாமூர்த்தி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் நடந்த கூட்டத்தில் பல உபந்யாசங்கள் நடந்தன. பிறகு மறுகூட்டத்திற்குத் தலைச் சங்கத்து உத்தியோகஸ்தர்களை வரவழைத்து உபந்யாசங்கள் நடத்தவேண்டுமெனத் தீர்மானிக்கப்பெற்றது. வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

3. ஆடி௴ 20௳ மாலை 4-மணிக்குத் திரு. வெ. அருணகிரி முதலியார் அவர்கள் தலைமையில் மேற்படி சங்கக் கூட்டம் நடைபெற்றது. காரியதரிசி திரு. முருகேச முதலியார் அவர்களால் ஆனி, ஆடி மாதக் கூட்டங்களின் நடவடிக்கைகள் வாசித்துக் காட்டப்பட்ட பிறகு தலைச் சங்கப் பிரசாரகர் திரு. தி. அ. சண்முக முதலியார் 'செங்குந்தர் கடமை' என்பது பற்றியும் கல்லூரி மாணவர் திரு ஜெ. சங்கவேல் முதலியார் 'கல்வியும் கைத்தொழிலும்' என்பது பற்றியும் அரிய சொற்பெருக்குகள் நிகழ்த்தினார்கள். தலைவர் பின்னுரையின் பின் வந்தனோபசாரத்துடன் சபை இனிது கலைந்தது என காரியதரிசி எழுதுகிறார்.

21-8-29 வடதிருநாகேஸ்வரம் செங்குந்த வாலிப சங்க இராப்பாடசாலைத் திறப்புவிழா நடந்தது. பிள்ளைகள் ஊர்வலம் வந்து பாடசாலையில் கூட்டம் கூடினார்கள். அங்கு ஸ்ரீமான் ஆ. தியாகப்ப முதலியார் அக்கிராசனம் வகித்தார். ஸ்ரீமான் தி. மு முருகேச முதலியார் (காரியதரிசி) இராப்பாடசாலையில் சேர்ந்த பிள்ளைகளின் பெயரை சபையோருக்கு வாசித்த பின் ஸ்ரீமான்கள் தாமோதர பட்டாச்சாரி கல்வியைப் பற்றியும், அருணகிரி முதலியார் பெற்றோர்கள் கடமையைப்பற்றியும் ஆ. தக்ஷிணாமூர்த்தி முதலியார் (தலைவர்) பாடசாலை நடத்தும் விதத்தைப்பற்றியும் பேசினார்கள் என்று காரியதரிசி எழுதுகிறார்.

## மாறும்பதி செங்குந்தர் சங்கம்.

4-8-29 இரவு 7-மணிக்கு லைப்ரூர் போர்டு பெண் பாடசாலையில் திரு. ச. அருணாசல முதலியார் தலைமையில் சங்கக் கூட்டம் கூடியது. தலைவர் முன்னுரைக்குப்பின் சங்கப் பிரசாரகர் திரு. அ. பசுபதி முதலியார் 'செங்குந்தமித்திரனும் லாட்டரிச் சீட்டும்' என்பது பற்றியும் திருமுக்கூடல் திரு. T. M. சண்முக முதலியார் 'கல்வி'யைப் பற்றியும் உபந்நியசித்த பின் அடியிற் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. நம் குல திலகரும் திருவாரூர் முனிசிபல் வைஸ் சேர்மனுமாகிய திரு. தி. கா. சபாபதி வள்ளலார் சென்ற மாதத்தில் தாலுக்கா போர்டு எலக்ஷனில் வெற்றியடைந்ததற்கு இச்சங்கம் சந்தோஷிக்கிறதுடன் அவர் திடகாத்திரமும் தீர்க்காயுளும் பெற்று விளங்குமாறு குகப்பெருமானை வழுத்துகிறது.

2. நம் சமூகத்து ஏழை மாணவர்களுக்கென ஏற்பட்டிருக்கும் லாட்டரிச் சீட்டை எல்லா செங்குந்தர்களும் ஆதரிக்க வேண்டுமென்று இச்சங்கம் வேண்டுகிறது.

3. காஞ்சிபுரத்தில் அடுத்த மகாநாடு கூடுவதாக தீர்மானித்திருப்பதற்கு இச்சங்கம் நன்றி பாராட்டுவதுடன் அதற்குப் பன்முகத்தாலும் ஒத்துழைக்க இச்சங்கம் தீர்மானிக்கிறது.

4. தலைச்சங்கத்துக்குச் சேரவேண்டிய சந்தா பாக்கிகளை வசூல் செய்தனுப்ப திரு. அ. பசுபதி முதலியார், திரு. கு. முருகப்ப முதலியார், திரு. இ. சம்பந்தமூர்த்தி முதலியார், திரு. ச. அப்புசாமி முதலியார் அடங்கிய ஒரு கமிட்டியை ஏற்படுத்துகிறது.

5. இவ்வூர் போர்டு ஆண் பாடசாலையை சென்டிரல் பாடசாலையாக்கி இருப்பதாலும், இவ்வூரில் சுமார் 150 பிள்ளைகட்கு மேல் வாசிப்பதோடு அவர்களில் பெரும்பாலோர் இன்னும் உயர்தரப் படிப்பை நாடி வெளியூருக்குச் செல்வதாலும் இப்பாடசாலையில் 8-வது வகுப்பு வரையில் அமைத்து ஓர் சகண்டரி கிரேட் ஆசிரியரை தலைமை ஆசிரியராக நியமிக்குமாறு தாலுக்கா போர்டாரவர்கட்குச் சிபார்சு செய்யுமாறு இச்சங்கம் தலைச்சங்கத்தாரை வேண்டிக் கொள்ளுகிறது.

6. தற்போதுள்ள தலைமை ஆசிரியர் பாடசாலைக்குக் குறித்த காலத்தில் வராமலும், பாடசாலையின் விருத்தியை நாடி உழைக்காமலும் இருப்பதால் பல பிள்ளைகள் வேறு கிராமங்கட்குச் சென்று வாசித்து வருகிறார்கள். ஆகையால் வேறு தலைமையாசிரியரை உடனே நியமிக்குமாறுஇக்கூட்டம் தாலுக்கா போர்டாரவர்களை மிக மன்றாடி வேண்டிக்கொள்கிறது எனக் காரியதரிசி எழுதுகிறார்.

குறிப்பு :—இப்பாடசாலையின் ஊழல்களைப் பற்றியும், தலைமை ஆசிரியரின் நடக்கையைக் கண்டித்தும் பல கடிதங்கள் நமக்கு வந்துள்ளன இவ்விதழில் இடமின்மையால் அவற்றின் உண்மையினை உணர்ந்து அவசியமானபோது ஒன்று விடாமல் வெளியிடத் தயாராயிருக்கிறோம்.—(பத்திரிகாசிரியர்.)

## ஐயங்கார்குளம் செங்குந்தர் சங்கம்.

சுக்கில௵ வைகாசி௴ 25௳ அமாவாசை தினம் இரவு 7-மணிக்குக் கூடிய கூட்டத்தில் முயற்சி, வியாபாரம், ஒழுக்கம், மக்களும் சமயமும் என்பவற்றை முறையே மு. ஏகாம்பர முதலியார், பா. கணேசன், தா. இராமசாமி, சொ. துரைசாமி, காஞ்சிபுரம் திருவாளர் க. வச்சிரவேலு முதலியார் பி.ஏ., ஆகியோர் தெளிவாக எடுத்துரைத்தார்கள். பின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் 10-மணிக்கு இனிது முடிந்தது.

ஆனி௴ 23௳ சனிவாரம் அமாவாசை இரவு 7-மணிக்கு கடவுள் வணக்கம், அன்பு, முயற்சி, கல்வி என்பதைப்பற்றி முறையே மு. ஏகாம்பர முதலியார், பா. கணேசன், அ. சண்முகம், போர்டு பாடசாலை உபாத்தியாயர் க. புனித முதலியார் செவ்வனே விளக்கிய பின் 10-மணிக்குத் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

ஆடி௴ 20௳ ஆதிவாரம் அமாவாசை இரவு 7-மணிக்குக் கடவுள் வணக்கம், முயற்சி, நளாயனி சரித்திரம், தருமம், செங்குந்தர் முன்னேற்றம், பெண் கல்வி என்பவற்றை முறையே பி. கைலாச முதலியார், கணேசன், ஜெயராமையர், விஸ்வநாத சாஸ்திரி, கா. நல்லகம்பன் ஆகியோர் பேசினார்கள். இரவு 10-மணிக்கு தலைவர் முடிவுரையுடன் சங்கம் இனிது நிறைவேறியது.

## சேலம் ஜில்லா கிளர்ச்சி.

### வேலநத்தம் செங்குந்த மகாஜன சங்கம்.

31-7-29 மாலை 7 மணிக்கு ஆட்டயாம்பட்டி போர்டு ஆண் பாடசாலையில் உயர் திரு. ப. அ. சித்த முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் சங்கக்

கூடிற்று. கடவுள் வாழ்த்தின் பின் திரு. S. ஆறுமுக முதலியார் 'கோவிலா கொலைக்களமா?' என்ற விஷயத்தைப்பற்றிப் பேசுங்கால் கம்மெனிக் மூத்தக் குமாரசாமி பண்டிகையில் ஆடு கோழிகளைப் பலியிடக்கூடாது என்று வற்புறுத்தினார்கள். திரு. கு. வை. ஆ. செங்கோட முதலியாரும் முறையே 'ஒழுக்கம்,' 'கல்வி' என்றவற்றைப்பற்றிப் பேசினார்கள். திரு. செங்கோட முதலியார் தமது பேருரையில் ஆண் பாடசாலைக்காக ஊர்ப் பொதுக் கட்டடத்தை ஊர்ப்பொதுவில் ரிபேர் செய்து கொடுக்கும்படி வேண்டிக்கொண்டனர். அடுத்த கூட்டம் வேலந்தம் பாவடித் தோப்பில் கூடவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. தலைவர் முடிவுரை கூறியதும் வந்தனோபசாரத்துடன் இரவு 10-மணிக்குக் கூட்டம் கலைந்தது.

7-8-29 பகல் 3 மணிக்கு இவ்வூர்ப் பாவடித் தோப்பில் மை. சங்கத்தின் ஆதரவில் ஒரு பொதுக் கூட்டம் அம்மாப்பேட்டை திரு. S. பழனியாண்டி முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. தலைவர் வாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பெற்றனர். 1000 பேர்களுக்குமேல் விஜயஞ் செய்திருந்தார்கள். திரு. கு. ரா. கந்தப்ப முதலியார் கடவுள் வாழ்த்து பாடியதும் தலைவர் அவர்கள் முகவுரையாகக் கல்வியின்மையால் உண்டாகும் தீமைகளைப்பற்றியும் கல்வியினால் உண்டாகும் நன்மைகளைப்பற்றியும் அருமையாகப் பேசினார்கள் பின்னர் திரு. S. ஆறுமுக முதலியார் அன்பைப்பற்றியும், திரு. கு. ரா. கந்தப்ப முதலியார் கல்வி, ஒற்றுமை, கோபம் முதலியவற்றைப்பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். மறுநாள் காலை 8-மணிக்குக் கூட்டம் கூடுவதாகத் தீர்மானிக்கப்பட்டுத் தலைவர் முடிவுரையின் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைவுற்றது.

8-8-29 காலை 8-மணிக்குப் பாவடித் தோப்பில் மை சங்கத்தின் ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. சுமார் 1000 ஜனங்கள் குழுமியிருந்தார்கள். கூட்டத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட அம்மாப்பேட்டை திரு. S. பழனியாண்டி முதலியார் அவர்கள் மேள வாத்தியங்களுடன் ஊர்வலமாக கூட்டம் கூடுமிடத்திற்கு அழைத்துவரப் பெற்றனர். பாடசாலைச் சிறுமிகள் கடவுள் வாழ்த்துப் பாடினார்கள். தலைவர் அவர்கள் 'மனிதர் கடமை' என்பதைப்பற்றி தமது முன்னுரையில் பேசினார்கள். பின்னர் திருவாளர்கள் கு. க. வையாபுரி முதலியார் கு. ஆ. அர்த்தனாரி முதலியார், வி. சின்னையா முதலியார், வி. மாரியப்ப முதலியார், காரியதரிசி திரு. S. ஆறுமுகமுதலியார், ப. மா. பெருமாள்முதலியார் சொ. வேலாயுத முதலியார் முதலிய அறிஞர்கள் தனித்தனியே 'கல்வி', 'கற்பு' முதலிய பல அரிய விஷயங்களைக் குறித்து தெளிவாகப் பேசினார்கள். திரு S. ஆறுமுக முதலியார் அவர்கள் தமது உபந்யாசத்தில் தாம் ஒரு இலவச இரவு பாடசாலை ஏற்படுத்தியிருப்பதாயும் அதில் பெரியோர் சிறியோர் யாவரும் சேர்ந்து வாசிக்கலாமென்' வற்புறுத்தியது குறிப்பிடத்தக்கது.

சங்கத் தலைவர் திரு. கு. வை. ஆ. செங்கோட முதலியார் அவர்களால் ஆண்பாடசாலைக் கட்டடத்தை ஊர் ஜனங்கள் பொருளுதவியில் ரிபேர் செய்து கொடுக்கவேண்டுமெனக் கொண்டுவரப்பட்ட பிரேரேபனை திரு. கு. க. வையாபுரி முதலியார் அவர்களால் ஆமோதிக்கப்பெற்று ஏகமனதாய் நிறைவேறிற்று. தலைவர் முடிவுரையின் பின் வந்தனோபசார வாழ்த்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

14-8-29 மாலை 6-மணிக்கு ஆட்டையாம்பட்டி போர்டு ஆண் பாடசாலையில் திருவாளர் கு. வை. ஆ. செங்கோட முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்ச் சங்கம் கூடியது.

1. கடவுள் வாழ்த்துக் கூறப்பட்ட பிறகு. 2. "சோர்பித் திரியேல்" என்ற விஷயமாய் திரு. கு. ரா. கந்தப்ப முதலியாரும், 3 "பொது விஷயம்" என்பதைப்பற்றி திரு. கு. வே. ஆறுமுக முதலியாரும், 4. "புத்திமான் பலவானாவான்" என்னும் விஷயமாக திருவாளர் பு. சொ. சோமசுந்தர முதலியாரும் வெகு திறமையாகவும் தெளிவாகவும் பேசினார்கள்.

அடுத்த சங்கம் மறுவாரம் புதன்கிழமை இதே இடத்தில் கூடுவதாக தீர்மானிக்கப்பட்டுத் தலைவர் முடிவுரையுடனும் வந்தனோபசார வாழ்த்துடனும் சங்கம் இனிது கலைந்தது. சுபம்! சுபம்!! சுபம்!!!

28-8-29 மாலை 6-மணிக்கு ஆண் பாடசாலையில் பிரசிடெண்டு திரு. கு. வை. ஆ. செங்கோட முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் சங்கம் கூடிற்று. திரு. கு ரா. கந்தப்ப முதலியார் கடவுள் வாழ்த்து கூறி கம்பராமாயணத்தில் வாலி வதைப் படலத்தில் சில கவிகளைச் சொல்லிச் சிறப்பாக விரிவுரை செய்தார்.

## நிறைவேறிய தீர்மானங்கள்.

1. நமது தலைச்சங்க கௌரவப் பிரசாரகர்களும் அம்மாப்பேட்டை திருமிகு S. பழனியாண்டி முதலியார் அவர்களும் இங்கு விஜயஞ்செய்தபோது மை. முதலியார் அவர்கள் மைத்துனரும், இச்சங்கத்தை ஸ்தாபிக்க அரும்பாடுபட்டவரும், சங்கத்தின் உபதலைவருமாகிய, உயர் திரு. V. சின்னைய முதலியார் அவர்கள் திருமிகு பழனியாண்டி முதலியார் வந்திருந்த இரண்டு கூட்டங்கள் தவிர மற்ற கூட்டங்களுக்கு வாராதிருந்ததன்றி இக்கூட்டத்தின் அழைப்புப் பத்திரிகையில் தாம் 'வேலையை ராஜீனாமா கொடுத்துவிட்டேன்' என்று காரணம் யாதொன்றும் காட்டாது எழுதியனுப்பியுள்ளது வியப்பையும் விசனத்தையும் உண்டாக்குகிறது. ஆகையால் இதுவிஷயத்தில் திருமிகு. S. பழனியாண்டி முதலியார், பன்னீருசைப் பெருமாள் முதலியார், சங்கர சுப்பிரமணிய முதலியார், செங்குந்தமித்திரன் ஆசிரியர், தலைச்சங்கத்தார் முதலியவர்கள் கவனஞ் செலுத்தி மை. திரு. V. சின்னையா முதலியார் அவர்களை இச்சங்கத்தில் கலந்து நீடித்து நிலைபெறச் செய்யுமாறு தாண்டவேண்டுமாய் இச்சங்கம் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறது.

## சேலம் ஜில்லா.

### வேலநத்தம் செங்குந்த மகாஜன சங்கம்.

(1) 1929-ம் வருஷம் ஜுன் ௴ 5௨ வேலநத்தம் ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி ஆலயத்தில் உயர் திரு கு. வை. ஆ. செங்கோட முதலியார் அவர்கள் தலைமையின் கீழும்

(2) 11—6—1929 தேதி ஷை இடத்தில் சென்னை வியாசர்பாடி ஸ்ரீமத் குருஸ்வாமிகள் தலைமையின் கீழும்

(3) 20-6-29 தேதி ஷை இடத்தில் காஸ்மீரம் ஸ்ரீமத் சத்குருஞானானந்த ஸ்வாமிகள் தலைமையின் கீழும்

(4) 26-6-29 தேதியில் ஷை இடத்தில் ஸ்ரீமான் கு. வை. ஆ. செங்கோட முதலியார் அவர்கள் தலைமையின் கீழும் கூட்டம் நடைபெற்றது.

(5) 10-7-29 தேதி புதன்கிழமை மாலை 5½-மணிக்கு ஆட்டியாம்பட்டி போர்டு பாடசாலையில் திருவாளர் பு. சொ. வேலாயுத முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்ச் சங்கம் கூடியது.

#### சங்க நடவடிக்கைகள்.

கடவுள் ஸ்தோத்திரம் திரு. கு. ரா. கந்தப்ப முதலியார் அவர்கள் செய்தபின் "கல்வி" என்பதைப் பற்றி திரு. கு. வை. ஆ. செங்கோடமுதலியார் அவர்களும், "வர்த்தகம்" என்பதைப்பற்றி திரு. சி. ல. வைத்தியலிங்க முதலியார் அவர்களும், "ஊக்கம்" என்பதுபற்றி திரு. கு. ரா. கந்தப்ப முதலியார் அவர்களும், "கற்பு" என்ற விஷயமாய் திரு. S. ஆறுமுக முதலியார் அவர்களும், "லேவாதேவி" என்ற விஷயமாய் திரு. தை. விநாயக முதலியார் அவர்களும், "நம்முன்னேற்றம்" என்ற விஷயமாய் திருவாளர் ஐ. சித்த முதலியார் அவர்களும் வெகு திறமையுடனும் இனிமையகாவும் பேசினார்கள்.

அடுத்த கூட்டம் 17-7-29தேதி மாலை 5½-மணிக்கு இதே இடத்தில் கூடுவதாகவும் அன்று திரு. S. ஆறுமுக முதலியார் "ஒழுக்கம்" என்பது பற்றியும், திரு. தை. விநாயக முதலியார் லேவாதேவி விஷயமாயும், திரு. ப. ம. பெருமாள் முதலியார் "பெண்கல்வி" விஷயமாயும், கு. ரா. கந்தப்ப முதலியார் முன்னேற்றம் என்ற விஷயமாயும், திரு. பு. சொ. வேலாயுத முதலியார் 'கற்பு நிலைமை' என்ற விஷயமாயும் பேசுவதாக தீர்மானிக்கப்பெற்றுத் தலைவர் முடிவுரை, கடவுள் வாழ்த்து, வந்தனோபசாரம் முதலியவற்றுடன் இரவு 9-மணிக்குச் கூட்டம் இனிது கலைந்தது

### ஆட்டியாம்பட்டி

17-7-29 அன்று மாலை 6-மணிக்கு ஆட்டியாம்பட்டி போர்டு ஆண்பாடசாலையில் திரு. ப. ஐ. சித்த முதலியார் அவர்கள் தலைமையில் சங்கம் கூடிற்று. அப்போது ஸ்ரீமான் கு. ரா. கந்தப்ப முதலியார் அவர்களால் கடவுள் வாழ்த்துப் பாடப்பெற்றபின் 'கற்பு நிலைமை', 'பெண்கல்வி', 'நம்குல முன்னேற்றம் அடையும் வழி', 'முயற்சி,' 'கல்வியின்பெருமை' 'குல முன்னேற்றம்,' என்னும் விஷயங்களைக்குறித்து முறையே ஸ்ரீமான்கள் பு. சொ. வேலாயுத முதலியார், ப. மா. பெருமாள் முதலியார், கு. க. வையாபுரி முதலியார், S. ஆறுமுக முதலியார், கு. வை. ஆ. செங்கோட முதலியார், கு. ரா. கந்தப்ப முதலியார் ஆகிய அறிஞர்கள் வெகு அழகாகவும் தெளிவாகவும் பேசினார்கள். கடைசியாக அடுத்த சங்கம் 24-7-29 அன்றுமாலை 5½-மணிக்கு இதே இடத்தில் கூடுவதாயும், அன்று இவ்வூர்ப் பாடசாலையை ஹையர் எலிமெண்டரி பாடசாலையாக்க வேண்டிய விஷயமாய் விண்ணப்பங்கள் அச்சிடவேண்டுமாயும் தீர்மானிக்கப்பெற்றுத் தலைவர் முடிவுரையுடனும் கடவுள் வாழ்த்து வந்தனோபசாரத்துடனும் இரவு 9-மணிக்குச் சங்கம் இனிது கலைந்தது.

24-7-29௨ மாலை 5½-மணிக்கு ஆட்டியாம்பட்டி போர்டு ஆண்பாடசாலையில் திரு. ப. ஐ. சித்த முதலியார் அவர்கள் தலைமையில் சங்கம் கூடிற்று. அச்சமயம் திரு. ரா. கந்தப்ப முதலியார் அவர்களால் வெகு பக்தி விநயத்துடன் கடவுள் வாழ்த்துப் பாடப்பெற்ற பிறகு திருவாளர்கள் S. ஆறுமுக முதலியார், ப. மா. பெருமாள் முதலியார், கு. வே. காவேரி முதலியார், கு. ஆ. அர்த்தநாரி முதலியார், ப. ஆ. சிதம்பர முதலியார், கு. க. வையாபுரி முதலியார் கு. ரா. கந்தப்ப முதலியார், ஆ. வைத்தியலிங்க முதலியார், கு. ரா. வே. ஆறுமுகமுதலியார் ஆகிய பிரமுகர்கள் முறையே, 'ஒற்றுமை', 'புறங்கூறுமை', 'ஒதுவதொழியேல்', 'கல்வி', 'குடும்ப ஒழுக்கம்', 'பொது விஷயமும், ஒழுக்கமும்', 'நம்குலச்சிறப்பு', 'ஜீவகாருண்யம்', என்னும் விஷயங்கள் பற்றி யாவரும் எளிதில் உணருமாறு அழகாகப் பேசினார்கள்.

அடுத்தபடி திரு. S. ஆறுமுக முதலியார் அவர்கள் 'செங்குந்த மித்திரன்' என்னும் விஷயமாய்ப் பேசுகையில் நமது 'மித்திரன்' நமது குலமுன்னேற்றத்திற்கு இன்றியமையாத சாதகமாயிருப்பதால் நம்மூரில் ஒவ்வொருவரும் தவறாமல் சந்தாதாரர்களாகச் சேர்ந்தும் சந்தாபாக்கி யுள்ளவர்கள் அடுத்த சங்கக் கூட்டத்திற்குள் அவசியம் ஒன்று சேர்த்து இச்சங்கத்தின்மூலமாக அனுப்பியும் கனம் பத்திராதிபர் அவர்களுக்கு அதிக ஊக்கத்தை உண்டாக்க வேண்டுமென்றும்,மித்திரனைத் தருவிப்போர் அதை அடுத்த சஞ்சிகை வருவதற்குள்ளாகவாவது முதலிலிருந்து கடைசிவரையில் கவனமாக வாசித்து உணரவேண்டுமென்றும் செங்குந்தர் பிரபந்தத்திரட்டு ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருந்தே தீரவேண்டிய புத்தகமென்றும் நன்கு விளக்கி உரைத்தார்கள்.

#### அன்று நிறைவேறிய தீர்மானங்கள்.

இப்பாடசாலையை ஹையர் எலிமெண்டரி பாடசாலையாக மாற்றிக் கொடுக்கவேணுமாய் எழுதி அச்சடித்திருக்கும்விண்ணப்பங்களை 1, 2, 3, 4 லக்கமிட்டவர்களுக்கு தபாலில் அனுப்ப வேணுமாயும் 5, 6 லக்கமிட்டவர்களுக்கு நேரில் கொடுக்கவேணுமாயும் தீர்மானிக்கப்பட்டது.

1. ம-ா-ா-ஸ்ரீ சேலம் தாலுக்கா போர்டு பிரசிடெண்டு அவர்கள்.

2. ம-ா-ா-ஸ்ரீ சேலம் ஜில்லா போர்டு பிரசிடெண்டு அவர்கள்.



3. ம-ா-ா-ஸ்ரீ சேலம் ஜில்லா எஜுகேஷனல் ஆபீசர் அவர்கள்.

4. ம-ா-ா-ஸ்ரீ மதராஸ் கல்வியிலாகா டைரக்டர் அவர்கள்.

5. ம-ா-ா-ஸ்ரீ சேலம் ரேஞ்சு ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்கள்.

6. ஆட்டியாம்பட்டியிலிருக்கும் சேலம் தாலுக்கா போர்டு மெம்பர் அவர்கள்.

அடுத்த சங்கம் மறுவாரம் புதன்கிழமை மாலை 6-மணிக்கு இதேஇடத்தில் கூடுவதாய்த தீர்மானிக்கப்பட்டுத் தலைவர் முடிவுரையுடனும் கடவுள்வாழ்த்து வந்தனோபசாரத்துடனும் இரவு 10-மணிக்குச் சங்கம் இனிது கலைந்தது.

S. ஆறுமுக முதலியார்,
செக்ரடெரி.

### செங்குந்தர் சங்கம், மோகனூர்.

சுக்கில ௵ ஆவணி ௴ 1௨ (14-6-29)ல் இவ்வூர் ஸ்ரீ மாசடசியம்மன் ஆலயத்தில் 10-வது கூட்டம் கூடிற்று. கூட்டத்திற்குத் தலைவரவர்கள் வாராமையால உபதலைவர் ஸ்ரீமான் மு. கொளந்தசாமி முதலியார் அவாகள் தலைமை வகித்தார்கள். மாணவர்கள் கடவுள் வாழ்த்துக் கூறியபின் காரியதரிசியால் முன்கூட்டத்தின நடவடிக்கைகளும் வரவு செலவு கணக்குகளும வாசிக்கபபெற்றுச் சந்தாததொகை வசூலித்துத் தலைவர் முடிவுரைக்குப்பின கூட்டம இனிது கலைநதது.

சுக்கில ௵ ஆடி ௴ 6௨ (21-7-29)ல் இவ்வூர் ஸ்ரீ மாசடசியம்மன ஆலயத்தில் 11-வது கூட்டம கூடிற்று. ஸ்ரீமான் R. சபாபதி முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். மாணவர்கள் கடவுள் வாழ்த்துக் கூறியபின காரியதரிசியால முன் கூட்டத்தின் நடவடிக்கைகளும் வரவு செலவு கணக்குகளும் வாசிக்கப்பட்டதும தலைச்சங்கத்தார் அவர்கள் அனுப்பியிருக்கும் கல்வி நிதிச்சீட்டு புஸ்தகங்களைக் கூடிய சீக்கிரம விற்பனை செய்து பணம அனுபபுவதென்று தீர்மானிககப்பட்டுச சந்தாத்தொகை வசூலிககப்பெற்றதும தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது கலைவுற்றது.

த. ல. சடையப்பன்,
காரியதரிசி, மோகனூர்.

## வட ஆற்காடு ஜில்லா

### ஆம்பூர்கஸ்பா.

விரிஞ்சிபுர நாட்டின மேற்கெல்லையாகிய பாலைமாநதி சூழ்ந்த திருவாண்மையூர் எனவழங்கும ஆம்பூர் கஸ்பா செங்குந்தர் சுந்தர விநாயகர் ஆலயத்தில் நமது தென்னிந்திய செஙகுந்த மகாஜன சங்கத்திற்கு மகமை ஏற்படுத்தவேண்டி ஆம்பூர்நாட்டு நாட்டாண்மை உயர் சைவத்திருவாளர் மைல. வையாபுரி முதலியார் அவர்களும், கிராமணி திரு. ஆ. மை. ஆறுமுக முதலியார், காரியதரிசிகள் திரு. கட்டாரி ரா. மார்க்கசகாய முதலியார், திரு. பூ. ச. பு. ஆறுமுக முதலியார், திருவாளர்கள் ஆ. ஆ. சாமிநாத முதலியார், வி. மு. பொன்னுசாமி முதலியார், தி. க. விடோபாமுதலியார் முதலிய பிரமுகர்களும் உபகாரியதரிசியாகிய ஏனைய செங்குந்தர்களும் நிகழும் சுக்கிலவாண்டு ஆனித்திங்கள் 25௨ ஆகிய சுபயோக நன்னாளில் சபைகூடி ஏகமனதுடன் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு விவாக முகூர்த்தம் ஒன்றுக்கு ஒரு ரூபாயும் சீமந்தம் ருதுசாந்தி முதலிய இதர முகூர்த்தங்களுக்கு அரை ரூபாய் வீதமும் கொடுக்க வேண்டுமெனத் தீர்மானித்தார்கள். பின்னர் ஷை ஆலயத்தில் நிறுவியுள்ள திருநாவுக்கரசுசுவாமிகள் சமரச சன்மார்க்க செங்குந்த வாலிபர் சங்கத்தை யாவரும் அங்கீகரிப்பதாயும் தீர்மானிக்கப்பெற்றது. மூன்றாவதாக ஷை நாட்டைச்சார்ந்த பேரூர் குமாரமங்கலம், சிற்றூர், மேல்கிருஷ்ணபுரம், ஆலாங்குபபம், பெரியாங்குப்பம் முதலிய கிராமங்களுக்கும் மேற்கண்ட தீர்மானங்களின்படி நடத்திக்கொள்ள வேண்டுமென்று திருமுகம் எழுதியனுப்ப வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பெற்றது.

### ஸ்ரீமத் திருநாவுக்கரசு சுவாமிகள் சமரச சன்மார்க்க செங்குந்த வாலிபர் சங்கத்து முதலாண்டு விழா.

செங்குந்தர் சுந்தர விநாயகர் ஆலயத்தில் சுக்கிலவாண்டு ஆனித்திங்கள் 29-ம் நாளாகிய சுபதினத்தில் கொண்டாடப்பெற்ற இச்சங்கத்தின் முதலாண்டு விழாவிற்கு திரு. நாட்டாண்மை மைல. வையாபுரி முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். 12-7-29 காலை 7-மணி தொடங்கி ஷை சுந்தரவிநாயகருக்கும் சுப்பிரமணியகடவுளுக்கும் விமரிசையாக அபிஷேகாதிகள் நடத்தி ஊர்வலம வந்து தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கததுக்கு ஜே! என்ற ஆரவாரத்துடன் தலைவரவர்களுக்குப பூமாலை சூட்டி அனைவரும் ஷை ஆலயத்தில அமர்ந்தார்கள். தமிழ்மறையோதிய பிறகு தலைவர் அவாகளுக்கு வரவேற்புப் பத்திரம வாசித்தளிக்கப்பெற்றது. வருஷ ரிபோர்ட்டு வாசிக்கப்பட்டது. தலைவர் உரையுடன் 11½-மணிக்குச் சபை இனிது கலைந்தது. அன்று மாலை 3-மணிக்கு மறுபடியும் சபை கூடிற்று. சுமார் 200 ஜனங்களுக்குமேல் குழுமியிருந்தார்கள். கடவுள்வாழ்த்தின பின்னர் திருவாளர்கள் சங்கத்தலைவர் பூச. ஆ. கோபால்சாமி முதலியார், உபதலைவர் சி. மு. நீலகண்ட முதலியார், காரியதரிசிகள் ஆ. கு. ஆறுமுக முதலியார், வி. மு. துரைசாமி முதலியார் ஆ. கு. மு. குபேந்திர முதலியார், பொ. சா. ரத்தின சபாபதி முதலியார், வா. சி. குப்புசாமி முதலியார் இவர்களால் முறையே அன்பு, பக்தி, ஒற்றுமை, கல்வியினமாண்பு, கல்லாமை,புலால்மறுதல், ஆலயவழிபாடு, சங்கத்தின் அவசியம் என்னும் விஷயங்களைகுறித்துச் சொற்பொழிவுகள்நிகழ்தப்பெற்றன. தலைவர் பின்னுரை கூறியதும், திரு. தி. க. விடோபா முதலியார் அவாகளால் வந்தனோபசாரம் கூறப்பெற்றுக் கடவுளுக்குத் தீபாராதனைநடத்திப் புஷ்பம் முதலிய வழங்கபபெற்று 7-மணிக்குச் சபை இனிது முடிவுபெற்றது.

பூச. ஆ. கோபால்சாமி முதலியார், தலைவர்.

பதால் நம்மூரில் ஒவ்வொருவரும் தவறாமல் சந்தாதாரர்களாகச் சேர்ந்தும் சந்தா பாக்கியுள்ளவர்கள் அடுத்த சபைக் கூட்டத்திற்குள் அவசியம் ஒன்று சேர்த்து இச்சங்கத்தின் மூலமாக அனுப்பியும் கனம் பத்திராதிபர் அவர்களுக்கு அதிக ஊக்கத்தை உண்டாக்க வேண்டுமென்றும் மித்திரனைத் தருவிப்போர் அதை அடுத்த சஞ்சிகை வருவதற்குள்ளாகவாவது முதலிலிருந்து கடைசி வரையில் கவனமாக வாசித்து உணர வேண்டுமென்றும், செங்குந்த பிரபந்த திரட்டு ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டுமென்றும் நன்கு விளக்கி உரைத்தார்கள். பிறகு தலைவர் முடிவுரையானதும் வந்தனோபசாரத்துடன் இரவு 9½-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது என உபகாரியதரிசி எழுதுகிறார்.

## மதுரை ஜில்லா.

### "செங்குந்த இளைஞர் கழகம்" மதுரை.

நமது முதல் மகாநாட்டின் ஒரு பிரிவான செங்குந்த வாலிபர் மகாநாட்டின் தீர்மானங்களைச் செயலையில் ஆற்ற ஒரு இளைஞர் கழகம் பிரத்தியேகமாய் வேண்டியதென மதுரையிலுள்ள செங்குந்த மாணவர்களும் இளைஞர்களும் பல நாளாக அவாவுகொண்டிருந்தனர். அவ்வவா ஆவணி 10-ஆம் ஞாயிற்றுக்கிழமையன்று இரவு 7-மணிக்குத் தல்லாகுளத்தில் விநாயகர் ஆலயத்தில் நடந்த 'இளைஞர்' பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

அன்று தல்லாகுளம், கோரிப்பாளையம் திருவாப்பனூர், மஞ்சள்மேடு முதலான ஊர்களிலிருந்து செங்குந்த இளைஞர்கள் பெருந்திரளாகவும் பெரியோர்கள் சிலரும் விஜயஞ் செய்திருந்தனர். அப்பொதுக்கூட்டத்திற்கு இளைஞர் திலகம் திரு. S. V. கனகசபாபதி அவைத் தலைமை பூண்டார். இளைஞர் பலரும் பெரியோர் சிலரும், "இளைஞர் இயக்கமும் உலகப்போக்கும்", "இளைஞர்களும் ஒழுக்கமும்" என்பன பற்றி விரிவுரை நிகழ்த்தினர். கூட்டத்தில் பலர் மெய்மறந்து சொற்பொழிவுகளை ஆவலுடன் கேட்டனர். அதற்குணமே மதுரையில் 'செங்குந்தர் சங்கம்' எனப் பெயரிய ஸ்தாபனம் இருந்தபோதிலும் இளைஞர்களுக்கென்று தனித்த முறையில் வாக்குவாதம் புரியவும், உயிரினும் பெரிதாக மதிப்பதும் ஒழுக்கத்தைப்பற்றி அறியவும், விழாக் காலங்களில் உண்மைத் தொண்டாற்றவும் ஒரு தனிப்பட்ட ஸ்தாபனம் இன்றியமையாதது என யாவரும் உணர்ந்தனர். அவ்வாறே 'செங்குந்த இளைஞர் கழகம்' என்ற ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் முக்கிய நோக்கங்களுள் ஒரு சில :—இளைஞர்களைப் பேச்சாளர்களாக்குதல், இளைஞர் ஒழுக்கத்தைக் கையாளச் செய்தல், தொண்டராக்குதல், தகுதி வற படிகள் கிராமங்களுக்குப் பிரசாரகர்களாக அனுப்புதல், சுருக்கக் கூறுமிடத்து "சாரணர்கள்" போலாக்குதல் முதலியன. இக்கழகம் மதுரைச் செங்குந்தர் சங்கத்திற்குப் பாதகம் விளைக்கா வண்ணமிருப்பதுடன் கூடுமானால் தன் உதவியையும் நல்கும்.

இஃது ஒவ்வொரு கார்த்திகை நக்ஷத்திரத்திலும் கூடும். மாதச் சந்தா 1 அணாவேயாகும். இக்கழகத்தின் வருடம் செப்டம்பர் மாதமிருந்து ஆகஸ்டு மாதம் வரை நிர்ணயிக்கப்படும்.

1929—1930 வருட கழக உத்தியோகஸ்தர்கள் வருமாறு:—

தலைவர்—திரு. சி. பொன்னம்பல முதலியார். உபதலைவர்கள்—திருவாளர்கள், K. V. சேத்திரபாலர் N. P. பழனிக்குமாரு. அமைச்சர்கள்—திருவாளர்கள் S. V. கனகசபாபதி, V. வீரபத்திரர். பொருட்காப்பாளர்—கு. மயிலப்பர். இதர நிருவாக உறுப்பினர்—திருவாளர்கள் M. லோகனுதா, K. பேச்சிமுத்து, M. திருமணி, கருப்பணன், P. முத்துக்குமாரு. இலிக்தர்—திரு. M. அங்குசாமி.

பிறகு கூட்டம், சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு இரவு 11-மணிக்கு முடிவுற்றது என காரியதரிசி எழுதுகிறார்.

### முதற் கூட்டம்

ஆவணி மீ கார்த்திகை நக்ஷத்திரமன்று (ஆவணி 12) தலைவர் அக்கிராசனத்தின்கீழ் இக்கழகத்தின் முதற் கூட்டம் நடைபெற்றது. விரிவுரையாளர்கள் S. மாணிக்கமும், முத்துக்கருப்பரும், "இளைஞர்கள் தாம் இந்தியாவிற்கு புதுவழிகாட்டிகள்" "மதமும் இளைஞரும்" என்பவை பற்றி சொன்மாரி பெய்தனர். பிறகு V. வீரபத்திரரும், M. அங்குசாமியும் தயாரித்த "கழகத்தின் திட்டங்களை" சபையார் ஏற்றுக்கொண்டனர். கூட்டம் இரவு 12 மணிக்கு முடிவெய்தியது. கூட்டத்திற்கு வந்திருந்தோர் தொகை 60 என்று காரியதரிசி எழுதுகிறார்.

### வண்டியூர் செங்குந்தர் சங்கம்.

3-9-29 இச்சங்கத்தின் மாதக்கூட்டம் பத்திரகாளியம்மன் கோயிலில் திரு. M. குப்புசாமி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் கூடிற்று. மதுரைச் சங்கத்துக் காரியதரிசி திரு. P. V. முத்துக்கருப்ப முதலியார் அவர்கள் 'வாசகசாலையும், அதன் பயனும்' என்பதைப்பற்றி ஒரு அரிய உபந்யாசம் செய்தார்கள். இச்சங்கத்தின் ஆதரவில் ஒரு வாசகசாலை ஏற்படுத்தவேண்டும் என்று திரு. V. S. சௌந்தர பாண்டிய முதலியார் அவர்களால் பிரேரபிக்கப்பட்டு திரு. S. மாயாண்டி முதலியார் அவர்களால் ஆமோதிக்கப்பெற்று ஏகமனதாய் ஒத்துக்கொள்ளப் பெற்றது. திரு. V. A. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் ஐந்து ரூபாய் பெறுமான புத்தகங்களை இனாமாக அளித்தனர். திருவாளர்கள் M. குப்புசாமி முதலியார், V. S. சௌந்தரபாண்டிய முதலியார், S. மாயாண்டி முதலியார், K. M. முத்துவைர முதலியார், M. V. அருணாசல முதலியார், S. நாராயணசாமி முதலியார், இவர்கள் முறையே குடியரசு செங்குந்த மித்திரன், திராவிடன், ஆனந்த போதினி, ஆனந்த விகடன், லோகோபகாரி, லக்ஷ்மி ஆகிய



பத்திரிகைகளை தங்கள் சொந்தசெலவில் தருவித்துக் கொடுப்பதாக வாக்களித்தனர்கள். வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவு பெற்றது என V. S. சௌந்தரபாண்டிய முதலியார் எழுதுகிறார்.

## இராமநாதபுரம் ஜில்லா.

### மண்டலமாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

11-8-29-ஆம் ஞாயிற்றுக்கிழமை இரவு 9-மணிக்கு மேற்படி சங்கத்தின் 15-வது கூட்டம் சங்கத் தலைவரவர்கள் முன்னிலையில் சுந்தர முதலியார் பிள்ளையார் கோவிலில் நடைபெற்றது. அவ்வமயம், மனஞர் குடி உயர் திரு. அழகரு முதலியாரவர்களால் கடவுள் வாழ்த்து ஆரம்பிக்கப்பட்டு தலைவர் முன்னுரையானதும் சென்ற கூட்டத்தின் நடவடிக்கைகள் சங்கக் காரியதரிசியவர்களால் வாசிக்கப்பட்டன. பின் ஸ்ரீமான் அம்பலம் ஆ. மு. சிதம்பரவேலு முதலியாரவர்கள் நமது வருஷாந்தரக் கொண்டாட்ட விஷயமாய் அடுத்த மாதம் நடத்தவேண்டுமென்றும் அதற்கு அம்மாதம் இங்கு விஜயம் செய்யவிருக்கும் உயர் சைவத் திருவாளர் தி. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்களைத் தலைமையாகக் கொண்டு நடத்தவேண்டுமென்றும், நமது சங்கத்தின் மூலம் தனிச் சங்கத்தார் மிக்க அபிமானங்கொண்டிருப்பதால் அனேகருடைய சகாயமும் ஒத்துழைப்பும் வேண்டும் ஆண்டு விழாவை கூடிய சீக்கிரம் நடத்தவேண்டுமென்றும் பேசி முடித்தார்கள். பின் ஸ்ரீமான் வெ. மு. கிருஷ்ண முதலியாரவர்கள் சந்தா வசூலைப்பற்றியும், மெம்பர்களுடைய ஊக்கக் குறைவைப்பற்றியும், சங்கமானது தளர்ந்திருப்பதையும் விரிவாகப் பேசினார்கள். பின் ஸ்ரீமான் இ. முனியப்ப முதலியாரவர்கள் ஆண்டு விழா நடத்த வேண்டிய அவசியத்தைப் பற்றியும், கலவிதச சீட்டைப் பற்றியும், திருமண காலங்களில் சங்கத்திற்கு நன்கொடை கொடுக்கவேண்டியதைப் பற்றியும் பேசினார்கள்.

தலைவர் முடிவுரையானதும் இரவு 11 மணிக்கு கூட்டம் இனிதாய் நிறைவேறிற்று என காரியதரிசி எழுதுகிறார்.

### ஸ்ரீவில்லிபுத்தூர் செங்குந்த வாலிபர் சங்கம்.

9-8-29 இரவு 7-மணிக்கு ஸ்ரீ ஆனந்த விநாயகர் கோயிலில் ஸ்ரீலஸ்ரீ இராமலிங்க சுவாமிகளின் தலைமையின்கீழ் இச்சங்கத்தின் கூட்டம் கூடிற்று காரியதரிசி திரு. A. சுப்பையா முதலியார் அவர்கள் 'கைத்தொழில்' என்பது பற்றிப் பேசுகையில் நமமவர்கள் முற்கொண்டுள்ள கைத்தொழிலானது செய்யுந்தொழிலில் யாவற்றினும் சிறந்ததெனவும், "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம், தொழுதுண்டு பின்செல்பவர்" எனக்கூறிய திருவள்ளுவரும் மெய்த்தொழிலையே மேற்கொண்டதனாலே நமது தொழிலின் சிறப்பு விளங்குகிறதெனவும் இத்தொழில் புதக நடக்கவும், நாணய அறிவாற்றலும் கருவதனில் பறை எதிர்பாராத மேன்மை [illegible] ஆகையால் செங்கை பல வழிகளி

னும் விருத்தி செய்வது நமது கடமை என்றும் தெளிவாகப் பேசினார்கள். பின்னர் திரு. A. வெங்கடாசல உடையார் அவர்கள் நெசவுத்தொழில் க்ஷீணித்த காரணத்தையும், அதை இப்போது விருத்தி செய்யும் முறைகளைப்பற்றியும் பேசினார்கள். திரு. ச. பால் வண்ணம் அவர்கள் ஐக்கிய நாணய சங்கத்தால் செங்குந்தர்களுக்குண்டாகக் கூடிய நன்மைகளைப்பற்றியும் திரு. சி. கு. சிவசுப்பிரமணிய முதலியார் ஒற்றுமையைப் பற்றியும், திரு. கா. சுப்பையா முதலியார் 'நமது கடமை' என்பது பற்றியும் பேசினார்கள். திரு. சி. கு. சங்கரசப்பு முதலியார் அவர்கள் சபைமரியாதைக் கீதங்கள் பாடினார். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது என காரியதரிசி எழுதுகிறார்.

வடக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் செங்குந்தர் ஆனந்த விநாயகர் சன்னதியில் ஸ்ரீலஸ்ரீ ராமலிங்கசுவாமிகள் தலைமையின்கீழ் ஒரு கூட்டம் கூடியது. அவ்வமயம் மேற்படி சங்கக் காரியதரிசி ஜோசியர் சுப்பையா முதலியார் அவர்கள் கல்வி என்பது குறித்துப் பேசினார் அது பின்வருமாறு:—

நம் நாட்டில் கல்வி கற்பதெல்லாம் உத்தியோகத்தை நாடிச் செய்யலன்றி வேறன்று. உத்தியோகத்துடன் கல்வி கற்பவர்கள் எவ்வளவு செலவாகத்தக்கதும். உத்தியோகத்தை நாடி வாசிப்பவர்களில் பலர் தவிர எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்கள் வேலையின்றி வருந்துவதை நாம் காண்கிறோம். உத்தியோகத்தில் அமர்ந்தவர்களும் சர்க்காருக்கு உழைத்தால் வேலை செய்தால் தான் கூலி கிடைக்கும். உத்தியோகத்தின் சொற்பத்தொகையைச் சம்பளமாகப் பெறுபவர்கள் வேறு வழிகளில் பணம் சேகரித்தாலன்றி செல்வந்தராக முடியாது. ஆனால் தொழிலும் வர்த்தகமும் அவ்விதமன்று. படிப்படியாய் மேலோங்கித் தனிமுறை நல்ல முறையாக நீடித்து நடைபெறக்கூடியவை. உத்தியோகத்திற்கு கல்வி எவ்வளவு அவசியமோ அது போல வர்த்தகத்துக்கும் கல்வி தான் பல துறைகளிலும் துணையாக நின்று உதவுகின்றது எனவும் இன்னும் அநேக திருஷ்டாந்தங்களுடன் சுமார் 2 மணிநேரம் இளைஞர்கள் மனதைக் கவரும்படியாகப் பேசினார்.

திரு. கா. சுப்பையா முதலியார் நமது கடமையென்பது குறித்துப் பேசினார்.

திரு. ச. பால்வண்ணம் அவர்கள் கல்வியைப்பற்றியும் நமது கடமை என்பது குறித்தும் விரிவாகப் பேசினார்.

தலைவரவர்கள் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் 11-30 மணிக்கு அவை பெருகிறது.

சி. கு. சிவசுப்பிரமணிய முதலியார்

## மலையாளம் ஜில்லா

### கொல்லங்கோடு செங்குந்த வாலிபர் சங்கம்.

இச்சங்கத்தின் 21-வது கூட்டம் ஆனி மீ 24-ஆம் சுமார் 10-மணிக்கு செ. பா. பஜனை மடத்தில், ச. சிதம்பர முதலியார் அவர்களின் தலைமையில் கூடிற்று. அது சமயம் க. சிதம்பர முதலியார், [illegible] சுப்ப முதலியார் இவர்கள், '[illegible]' என்ற விஷயத்தைப்பற்றி பேசினார்கள்.

22-வது கூட்டம் ஆனிமீ 31உ வ. பா. ஆலயத்தில் அமாவாசையாம், வை. சின்னப்ப முதலியார் அவர்களின் தலைமையில் கூடிற்று. S. சொக்கலிங்க முதலியார் 'பெண்கல்வி' என்னும் விஷயத்தைப் பற்றி பேசினார்.

### பொதுக் கூட்டம்.

செங்குந்த வாலிபர் சங்கத்தின் 19-வது கூட்டத்தில் தீர்மானித்தபடி, நமது 'தொழிலும் வியாபாரமும்' அபிவிருத்தியடைய, போட்டியும் போராட்டமும் மிகுந்துள்ள இக்காலத்தில், நாம் என்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றியும், பாசசாபாஜையம் பிரிவாரிடையில் வழங்கி வரும் 'தாடி வளர்த்தல்' என்னும் அநாகரீகமான வழக்கத்தை ஒழிக்கவேண்டியது பற்றியும், யோசனை செய்ய தெ. பா. பஜனைமடத்தில் ஆடிமீ 1உ ஒரு பொதுக்கூட்டம் கூடி சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

23-வது கூட்டம், ஆடிமீ 6உ தெ. பா. பஜனை மடத்தில், ப. முத்து தாண்டவ முதலியார் அவர்களின் தலைமையில் கூடிற்று. பா. அருணாசல முதலியாரும் இன்னும் சில பேர்களும் 'ஒற்றுமை' என்னும் விஷயத்தைப்பற்றி பேசினார்கள்.

24-வது கூட்டம் ஆடிமீ 20உ பகல் 5-மணிக்கு பஜனை மடத்தில் பா. அருணாசல முதலியார் அவர்களின் தலைமையில் கூடிற்று. அது சமயம் S. சொக்கலிங்க முதலியார் 'தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்' என்பது பற்றி பேசினார்.

25-வது கூட்டம், ஆடிமீ 27உ வ. பா. ஆலயத்தில் சிதம்பர் அ. பழனியப்ப முதலியார் அவர்களின் தலைமையில் கூடிற்று. S. சொக்கலிங்க முதலியார் 'நமது இந்தியா தேசம்' என்பது பற்றி பேசினார்.

26-வது கூட்டம் ஆவணிமீ 10உ வ. பா. ஆலயத்தில் வாரிமடை அ. முருகப்ப முதலியார் அவர்களின் தலைமையில் கூடிற்று. அது சமயம், S. சொக்கலிங்க முதலியார், சென்னை வாலிபர் சங்கத்தில், திருவாளர் C. P. ராமன் முதலியார் அவர்கள் B.A., B.L., ஆங்கிலத்தில் செய்த பிரசங்கத்திலுள்ள 'நாம் செய்யவேண்டிய வேலை' என்னும் பாகத்தை தமிழில் மொழி பெயர்த்துச் சொன்னார்.

S. சொக்கலிங்க முதலியார்.

## தஞ்சை ஜில்லா

### சுந்தரபெருமாள் கோயில் சைவ சமாஜ சன்மார்க்க செங்குந்தர் சங்கம்.

சுக்கில வருஷம் ஆனிமீ 18உ மாலை 4-மணிக்கு தெற்கு வீதியில் திரு. சோமசுந்தர முதலியார் இல்லத்தில் திரு. M. S. ஆதிமூல முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அங்கே பிரமுகர்கள் விஜயஞ்செய்திருந்தார்கள். அப்போது கீழ்க்கண்ட தீர்மானங்கள் செய்யப்பெற்றன.

(1) செங்குந்தர் முன்னேற்றம் கருதி இவ்வூரில் சுந்தரபெருமாள் கோவில் சைவ சமாஜ சன்மார்க்க செங்குந்தர் சங்கம்' என ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பெறல் வேண்டும்.

(2) இச்சங்கத்தை நமது சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்குக் கிளைச் சங்கமாக்கி தலைச் சங்கத்திற்கு வருஷா வருஷம் ரூபாய் ஐந்து கட்டணமாகச் செலுத்தவேண்டும்.

(3) தலைச் சங்கத்திலிருந்து கிளைச் சங்க பாரமும் மற்றைய விவரங்களும் கிடைத்தவுடனே கட்டணத்தைச் செலுத்தி விட வேண்டும்.

(4) சங்கக்கூட்டம் ஒவ்வொரு மாதமும் பவுர்ணமி அமாவாசை தினங்களில் கூடவேண்டும் அப்போது ஒவ்வொரு அங்கத்தினரும் தவறாது ஆஜராக வேண்டும்.

(5) ஒவ்வொரு அங்கத்தினரும் மாதம் ஒன்றுக்கு 2 அணா வீதம் அமாவாசையன்று சந்தா செலுத்த வேண்டும்.

(6) ஜீவகாருண்ய ஒழுக்கம் (உயிர்க்கொலை செய்தலையும் நீக்கிய நன்னெறி) உள்ளவர்களை மாத்திரமே இச்சங்கத்தின் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

(7) இரண்டாவது கூட்டம் மறு ஞாயிற்றுக்கிழமை கூடவேண்டும்.

(8) கீழ்க்கண்ட கனவான்கள் உத்தியோகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

1. M. S. ஆதிமூல முதலியார், தலைவர்.
2. S. முருகையா முதலியார், உபதலைவர்.
3. S. சோமசுந்தர முதலியார், Organiser.
4. N. தங்கவேலு முதலியார், காரியதரிசி.
5. M. S. நடராஜ முதலியார், பொக்கிஷதார்.

அநேகர் அங்கத்தினராகச் சேர்ந்தார்கள். தலைவர் முடிவுரையின் பின் சந்தனதாம்பூலம் வழங்கப்பெற்று 7-மணிக்கு கூட்டம் இனிது முடிவெய்திற்று.

4-8-29உ மாலை 4-மணிக்குத் திரு. M. S. ஆதிமூல முதலியார் அவர்கள் தலைமையில் இரண்டாவது கூட்டம் கூடிற்று. திரளான ஜனங்கள் விஜயஞ்செய்திருந்தார்கள். அவ்வமயம் 14 வயதுள்ள S. இராமைய முதலியார் 'புருஷார்த்தம்' என்பது பற்றிப் பேசுகையில் அறம், பொருள், இன்பம், வீடெனப்படும் புருஷார்த்தத்திற்கு அடிப்படையாயுள்ளது ஜீவகாருண்யமென்றும் அஃதிலலாதார் ஒன்றையும் அடைய முடியாதென்றும், ஞானவாசிட்டம் பசுபதிபாச விளக்கம் முதலிய பல நூல்களிலுள்ள ஆதாரங்களை எடுத்துக்காட்டி விளக்கினார். பின் திருவாளர்கள் P. முருகைய முதலியாரும், M. முருகைய முதலியாரும் முறையே 'பக்தி' 'அறிவு' என்பவற்றைப்பற்றி சாத்திர ஆதாரங்களோடு பேசினார்கள். இவற்றின் பயனாக 36 பேர்கள் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை மேற்கொள்வதாக உறுதிமொழி கூறி சங்கத்தின் அங்கத்தினரானார்கள். ஜீவகாருண்ய விஷயமாய் எல்லாரிடத்திலும் ஒரு உடன்படிக்கையும் செய்யப்பெற்றது. வந்தனோபசாரத்தின்பின் தலைவரும் உபந்யாசகர்களும் பூமாலை சூட்டப்பெற்று கூட்டம் இனிது கலைந்தது என காரியதரிசி எழுதுகிறார்.



### செங்குந்தர் சங்கம், உள்ளிக்கடை.

1929ளு ஜூலைமீ 29உ திங்கட்கிழமை இரவு 8-மணிக்கு இவ்வூர்க் கீழ்க்கோடி திரு. மு. சாமிநாத முதலியார் இல்லத்தில் மேற்படி சங்கம் திரு. ம. சோமசுந்தர முதலியார் தலைமையின்கீழ் கூடிற்று. திரு. வா. சி. முருகய்ய முதலியார் அவர்களால் ஆராய்ச்சி என்பதைப்பற்றியும் திரு. V. S. குமாரசாமி முதலியார் அவர்களால் அறம் என்பதைப்பற்றியும் திரு. M. S. சிவகுருநாத முதலியார் அவர்களால் மதுமாம்ச விலக்கு என்பது பற்றியும் உபந்யாசம் செய்யப்பெற்றன. தலைவருக்கு வந்தனோபசாரம் கூறி கூட்டம் முடிவுற்றது.

(2) 1929ளு ஆகஸ்டுமீ 5உ இரவு 8-மணிக்கு மேற்படி சங்கம் கூட்டப்பெற்றது. திரு. கா. வையாபுரி முதலியார், அக்கிராசனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு திரு. வா. சி. முருகைய முதலியார் அவர்களால் ஈரோட்டில் கொடி யுயர்த்திய மகிமையைப் பற்றியும், திரு. V. S. குமாரசாமி முதலியார் அவர்களால் ம. சண்முகசுந்தர முதலியார், எம். எ., எல். டி. அவர்கள் ஆங்கிலத்தில் கனம் கிருஷ்ணன் நாயர் அவர்கள் பேசிய விஷயத்தைப்பற்றி தமிழில் மொழிபெயர்த்திருக்கின்ற விமரிசையைப்பற்றியும், திரு. M. S. சிவகுருநாத முதலியார் அவர்கள் வரவேற்பைப்பற்றியும் சென்னை சங்கத்தின் பிரசாரர் சொ. ச. கந்தசாமி முதலியாரவர்கள் நமது சமூக முன்னேற்றத்தைப்பற்றியும் தெளிவாக உபந்யசித்தனர். அக்கிராசனாதிபதி அவர்களுக்கு வந்தனோபசாரம் சொல்லப்பட்டு சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்றது.

(3) 1929ளு ஆகஸ்டுமீ 13-ம் தேதி மேற்படி சங்கம் இரவு 8-மணிக்குக் கூட்டப்பட்டது. திரு. க. கோபாலசாமி முதலியாரவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. M. S. சிவகுருநாத முதலியாரவர்களால் ஒற்றுமை என்பதைப்பற்றியும், திரு. க. ஆறுமுக முதலியாரவர்களால் பொதுவிஷயங்கள் என்பதைப் பற்றியும், க. பழனியாண்டி முதலியார் அவர்களால் கல்வி என்பதைப்பற்றியும், N. G. சாமிநாத முதலியார் அவர்களால் ஈரோட்டில் மகாநாடு நிறந்ததைப் பற்றியும், வே. முருகைய்ய முதலியார் அவர்களால் நம் தொழில் விருத்தியைப்பற்றியும் திரு. சி. க. சாமிநாத முதலியாரவர்களால் தெய்வமும் ஜீவனையும் என்பதைப்பற்றியும் தெளிவாக சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றன. அக்கிராசனாதிபதி அவர்களுக்கு வந்தனோபசாரம் சொல்லப்பட்டு சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்றது.

(4) 18-8-29 இரவு 8-மணிக்கு மேற்படி சங்கம் திரு. கா. வையாபுரி முதலியாரவர்கள் இல்லத்தில் கூட்டப்பட்டது. திரு. கா. வையாபுரி முதலியாரவர்கள் தலைமை வகித்தார். காரியதரிசி அவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பெற்றது. N. G. சாமிநாத முதலியார் அவர்களால் சென்ற மீட்டிங்கில் நடந்த விஷயங்களையும் வாலிப மகாநாட்டின் விஷயங்களைப் பற்றியும் திரு. M. S. சிவகுருநாத முதலியாரவர்களால் புலால் மறுத்தலைப்பற்றியும் உபந்யசிக்கப் பெற்றன. திரு. ம. ராமச்சந்திர முதலியாரவர்களால் தலைவருக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டு சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்றது.

(5) 25-8-29 இரவு 8-மணிக்கு நாட்டாண்மை திரு ம. கந்தசாமி முதலியாரவர்கள் இல்லத்தில் மேற்படி சங்கம் கூட்டப்பட்டது. கடவுள் வணக்கம் பாடப்பட்டது. திரு. பெ. சாமிநாத முதலியார் அவர்கள் தலைமை வகித்தார். திரு. M. S. சிவகுருநாத முதலியாரவர்களால் செங்குந்தர்களின் பூர்வ சோத்திரத்தைப்பற்றியும் திரு. V. S. குமாரசாமி முதலியாரவர்களால் 'தெய்வமும் ஜீவனையும் என்பதுபற்றியும் திரு. N. G. சாமிநாத முதலியாரவர்களால் பொதுவான உண்மையைப்பற்றியும் திரு. வா. சி. முருகைய்ய முதலியாரவர்களும் திரு. ம. ராமச்சந்திர முதலியாரவர்களும் ஊக்கத்தைப்பற்றியும் தெளிவாக சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றன. தலைவருக்கும் சமூகத்தவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்று மேற்படி சங்கம் இனிது நிறைவேறியது.

## திருச்சி ஜில்லா

### உன்னியூர் செங்குந்தர் சங்கம்.

18-8-29-ல் செங்குந்தர் பொதுச்சாவடியில் மாலை $3\frac{1}{2}$-மணிக்கு திரு R. மாணிக்க முதலியாரவர்களது தலைமையில் சங்கம் நடைபெற்றது அவ்வமயம் பல அன்பர்கள் சங்கத்தின் வளர்ச்சியைக் குறித்து உபந்யாசம் புரிந்த பின்னர் இவ்வருஷத்திற்கு சங்க புதிய உத்தியோகஸ்தர்களாக கீழ்க்கண்டவர்கள் ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

தலைவர், திரு. R. மாணிக்க முதலியார். உப தலைவர், திரு. கு. ஆ. ஆனந்த முதலியார். காரியதரிசி, திரு. P. மாரியப்ப முதலியார். உப காரியதரிசி, திரு. P. K. வீரப்ப முதலியார். பொக்கிஷதார், திரு. P. K. பழனியப்ப முதலியார். நிர்வாக அங்கத்தினர்கள், திருவாளர்கள் A. K. S. சின்னசாமி முதலியார், K. A. A. பாலசுப்பிரமணிய முதலியார், ஜோ. கா. மு. முருக முதலியார், செ. காசி முதலியார், மொ. மு. சடையப்ப முதலியார், அ. மு. முருக முதலியார், கோ. தெ வை. வேலாயுத முதலியார், து. வே. சென்னியப்ப முதலியார், கொ. மு. மாணிக்க முதலியார், கூ. பெ. முத்துசாமி முதலியார், வெ. முருக முதலியார்.

மேற்கண்டபடி சங்கத்திற்கு புதிய உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்த பின் இரவு 7-மணிக்கு கடவுள் வாழ்த்துப்பாடிய பின்னர் கூட்டம் இனிது கலைவுற்றது என காரியதரிசி எழுதுகிறார்.

### ஸ்ரீரங்கம் செங்குந்த வாலிபர் சங்கம்.

ஆடிமீ 23உ மாலை 6-மணிக்குக் கீழவாசல் திரு. பெரியண்ண முதலியார் அவர்கள் ஹாலில் செங்குந்தர் பொதுக் கூட்டம் ஒன்று திரு. ப. பெ. அருணாசலனார் தலைமையின் கீழ்க்கூடிற்று. அநேக செங்குந்த பிரமுகர்கள் விஜயஞ் செய்திருந்தார்கள். அது சமயம் திரு. அ. மருதை முதலியார் '[illegible]

ஒன்று ஏற்படுத்துவதற்காக அவ்வூர் முனிசிபல் பாடசாலையில் ஒரு பெருங்கூட்டம் கூடிற்று. பாடசாலை முழுவதும் ஜனங்கள் நிறைந்திருந்தனர். திரு. C. பன்னிருகைப்பெருமாள் முதலியார் அவர்கள் அந்தச் சங்கத்தைத் திறந்து வைக்கும்பொழுது தற்போது உலகத்தில் தோன்றி இருக்கும் இளைஞர் இயக்கத்தைக் குறித்துச் சற்று விரிவாகப் பேசினர். திரு. V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்கள் அக்கூட்டத்தின் தலைவராக இருந்து இளைஞர் இயக்கத்தைக் குறித்தும் சமுதாய முன்னேற்றமான பல விஷயங்களைக் குறித்தும் அழகாகப் பேசினார்கள். திருவாளர்கள் மாரிமுத்து முதலியார் அவர்கள், S. P. பொன்னுசாமி முதலியார் அவர்கள், S. பழனியாண்டி முதலியார் அவர்கள் முதலான அம்மாபேட்டை செங்குந்தர் தலைவர்களும் பேசினார்கள். அம்மாபேட்டை இரண்டாவது இளைஞர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுச் சங்கத்திற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

## வேலன் நத்தம்.

மே௴ 24௳ காலையில் நமது பிரதிநிதிகள் திரு. S. பழனியாண்டி முதலியார் அவர்களோடு ஆகியவர்கள் அட்டியாம்பட்டிக்குச் சமீபத்திலுள்ள வேலன் நத்தம் என்னும் ஊருக்குச் சென்றனர். இங்குக் கூடிய கூட்டத்தின் விபரம் ஆடி மித்திரனிற் காண்க. அந்தக் கூட்டத்துக்கு அவ்வூரிலுள்ள முக்கிய தனவந்தரான திருவாளர் இராஜப்ப முதலியார் அவர்கள் வராதிருந்தது வருந்தத் தக்கது. செங்குந்தர் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுச் சங்க உத்தியோகஸ்தர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு 2 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

## சேலம் டவுன்.

மே௴ 25௳ காலை பிரதிநிதிகள் அம்மாபேட்டையை விட்டுப் புறப்பட்டார்கள். சேலம் டவுன் Extension-ல் வாழும் திருச்செங்கோடு T. R. முருகேச முதலியார் அவர்களையும், திரு. M. இராமசாமி முதலியார் அவர்களையும் கண்டு பேசிவிட்டு அன்று சாயங்காலம் 5-மணிக்குப் பிரதிநிதிகள் திருச்செங்கோடு போய்ச் சேர்ந்தார்கள்.

## திருச்செங்கோடு.

அவர்கள் போன சமயத்தில் திருச்செங்கோடு முருகக் கடவுள் கோவிலில் திருவிழாக் காலமானதால் அங்குள்ள ஜனங்களைக் கூட்டிவைக்க சௌகரியமில்லாது போயிற்று.

## ஈரோடு.

மேமாதம் 26 தேதி சாயங்காலம் பிரதிநிதிகள் ஈரோடு வந்து சேர்ந்தார்கள். அவ்வூரிலுள்ள செங்குந்தர் தலைவர்களெல்லாம் திருச்செங்கோட்டுக்குச் சென்றிருந்ததனால் ஈரோட்டிலிருந்து அவ்விரவே புறப்பட்டனர்.

## கோயமுத்தூர்

மே மாதம் 28 தேதி சாயங்காலம் பிரதிநிதிகள் இருவரும் கோயமுத்தூர் வந்து சேர்ந்தார்கள். அவ்வூர்ச் செங்குந்தர்களின் முக்கிய தலைவரான திருவாளர் V. S. செங்கோட்டையா முதலியார் அவர்கள் நமது ஆதல் மகாநாட்டின் வரவு செலவு கணக்கை வெளியிட்டதின் பிறகே கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள நம்மவர் ஊர்களுக்கு நாம் சென்று பிரசார வேலை செய்வது சரியாகுமென்று சொன்னதினால் வேறு ஊர்களுக்கும் போகாமல் பிரதிநிதிகள் கொல்லங்கோட்டுக்குப் புறப்பட்டனர்.

## கொல்லங்கோடு.

மேமாதம் 29 தேதி சாயங்காலம் பிரதிநிதிகள் இருவரும் கொல்லங்கோடு வந்து சேர்ந்தனர். அன்று சாயங்காலம் 5 மணிக்கு அவ்வூர் செங்குந்த சமாஜத்தின் ஆதரவில் ஒரு விசேஷக் கூட்டம் கூடிற்று. இக்கூட்டத்திற் கண்ட ஒரு விசேஷம் என்னவென்றால்: கூட்டத்திற்கு வந்தவருள் சில மாதர்களும் இருந்தனர். திருவாளர் கொல்லங்கோடு முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். நமது பிரதிநிதிகள் இருவரும் முதலில் பொதுவாகச் செங்குந்த சமுதாய முன்னேற்றத்திற்கு வேண்டிய விஷயங்களைக் குறித்துப் பேசினர். பின்னர் மலையாள ஜில்லா செங்குந்தர்களுக்கிடையில் வழங்கிவரும் ஒரு நாகரீகமற்ற வழக்கத்தைக் குறித்து விரிவாய்ப் பேசினர். அவ்வழக்கம் என்னவென்றால்: செங்குந்த ஆடவர்கள் கல்யாணமாகிறவரையிலும் தாடி மீசை வளர்த்தல் (இது விஷயமாக ஒரு நீண்ட வியாசம் ஒன்று இப்பத்திரிகையில் வெளிவரும்.) கூட்டம் இராத்திரி 9-மணிக்குக் கலைந்தது.

மேமாதம் 30தேதி பகலில் கொல்லங்கோட்டிலுள்ள மேட்டுப்பாளையம், பாறைக்களம், மடக்குப்பாவடி முதலான இடங்களுக்குச் சென்று அங்குள்ள ஜனங்களை ஒரு பொது இடத்தில் அழைத்து வைத்துச் சமுதாய முன்னேற்ற விஷயமான காரியங்கள் அவர்களுக்குச் சொல்லப்பட்டன.

அன்று சாயங்காலம் 6 மணிக்கு திருவாளர் சித்தூர் C. P. இராமன் முதலியார் அவர்கள், B. A., B.L., தலைமையின் கீழ்க் கொல்லங்கோட்டில் இரண்டாவது விசேஷக் கூட்டம் ஒன்று கூடிற்று. தலைவர் அவர்கள் கல்யாணமாகாதவர்கள் தாடி மீசை வளர்ப்பதான கெட்ட வழக்கத்தைக் குறித்து மிகுந்த ஆத்திரத்துடன் பேசி, "என் உயிர் இருக்குமானால் இந்தக் கெட்ட வழக்கத்தை அடியோடு மலபாரினின்றும் தொலைக்க நான் முயல்வேன்" என்று முடித்தனர்.

## கொச்சி சித்தூர்.

மே மாதம் 31 தேதி திருவாளர்களான முத்துக்குமாரசாமி முதலியார், C. P. இராமசாமி முதலியார், கொல்லங்கோடு சொக்கலிங்க முதலியார், பிரதிநிதிகள் ஆகிய இவர்கள் கொச்சியிலுள்ள சித்தூர் வந்து சேர்ந்தனர். அப்பொழுது அந்த ஊரில் மாரியம்மன் கோவிலில் விசேஷத் திருவிழா நடந்த காலம். அந்தக் கோவிலிலேயே அவ்வூரிலுள்ள ஜனங்களை வரவழைத்து சமுதாய முன்னேற்றச் சம்பந்த



மான விஷயங்களைப்பற்றிச் சொன்னதின் பின்னர் செங்குந்தர் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.

## குழல் மன்னம்.

ஜுன் மாதம் 1தேதி காலை குழல் மன்னம், என்னும் ஊருக்கு மலையாளத்துத் தலைவர்கள் மூவரும், பிரதிநிதிகள் இருவரும் போனார்கள். அவ்வூரிலுள்ள ஜனங்களைத் திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வீட்டில் அழைத்து வைத்துச் செங்குந்தர் பல துறைகளில் அபிவிருத்தி அடைவதற்குரிய நற்போதனைகள் சொல்லப்பட்டன.

## புதூர்.

ஜுன் மாதம் 1 தேதி சாயங்காலம் 3-மணிக்கு எல்லோரும் புதூர் போய்ச் சேர்ந்தனர். அங்குள்ள செங்குந்தர்கள் கோயிலில் கூடினர். அப்பொழுது கூடி, தாடி மீசை வளர்த்தல், பெண்கல்வி முதலான விஷயங்களைக் குறித்து அவர்களுக்குச் சொல்ல, அப்பொழுது அங்கிருந்தவருள் சிலர் தாடி மீசை வளர்த்தல் அவசியம் வேண்டிய ஒரு காரியம் என்பதைக் குறித்து உக்கிரமாக வாதாடத் தொடங்கினர். அவர்களுக்கு இனிய வார்த்தைகளினால் சமாதானம் சொல்லப்பட்டது.

## பள்ளன் சாத்தனூர்

ஜுன் மாதம் 2 தேதி காலையில் பள்ளன் சாத்தனூருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்குள்ள சனங்களையும் கோயிலில் வரவழைத்துக் கட்குடி என்னும் கெட்ட வழக்கத்தை அறவே நீக்கவேண்டுமென்றும் தாடி மீசை வளர்த்தலை நீக்கவேண்டு மென்றும் சொல்லப்பட்டது. இங்குத் தாடி மீசை வளர்த்தலைப் பற்றி அபிப்பிராயபேதம் உண்டாயிற்று. ஆனால் அங்கிருந்த பெரியவர்கள் பக்கத்திலுள்ள எல்லா ஊராரும் இந்த நாகரீகமில்லாத வழக்கத்தை நிறுத்த உடன்படுவோர்களானால் தங்களுக்கு ஆக்ஷேபம் இல்லை என்று முடிவு செய்தனர்.

## பழம் பாலக்கோடு.

சாயங்காலம் எல்லோரும் பழம் பாலக்கோடு போய்ச் சேர்ந்தார்கள். அன்று பகல் 2மணிக்கு அவ்வூர் பள்ளிக்கூடத்தில் ஒரு கூட்டம்கூடிற்று. 250 சனங்கள் வரையிலும் வந்திருந்தனர். திருவாளர் முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் தலைமை வகித்து நீண்டநேரம் பல விஷயங்களைக் குறித்துச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மற்றவர்களும் பேசினார்கள். இறுதியில் அவ்வூரில் செங்குந்தர் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

## கூட்டாலை.

ஜுன் மாதம் 3 தேதி கொச்சி சமஸ்தானத்திலுள்ள கூட்டாலை என்னும் ஊருக்கு ஐவரும் போய்ச்சேர்ந்தனர். அவ்வூர் மலையாளம் பள்ளிக்கூடத்தில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. இந்த ஊரில் தாடி மீசை வளர்ப்பதான கெட்ட வழக்கமில்லாதிருப்பது கவனிக்கத்தக்கது.

## பாலப்புரம்.

ஜுன் மாதம் 4 தேதி காலையில் செங்குந்தர்களுக்குள் ஒரு ஒப்பற்ற திலகமாய் வாழ்ந்து சமீபத்தில் இம் மண்ணுலகினின்று நீங்கினவரான திருவாளர் மந்திரி முதலியார் அவர்கள் ஊரான பாலப்புரத்துக்கு எல்லோரும் போனார்கள். அங்கு மந்திரி முதலியார் அவர்கள் வீட்டிலேயே தங்கியிருந்து அவ்வூரிலுள்ள சிலரை அங்கு அழைத்துச் சமுதாய அபிவிருத்திக்கான பல காரியங்களைப்பற்றி அவர்களிடம் சொல்லிவிட்டுப் பிரதிநிதிகள் தங்கள் நாட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தாரின் பிரதிநிதிகளாக மைமூன்று ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்த திருவாளர் C. பன்னிருகைப் பெருமான் முதலியார் அவர்களுக்கும் திருவாளர் V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்களுக்கும் அவர்கள் பிரயாணத்தில் பலவிதத்திலும் மிகுந்த ஒத்தாசை செய்த அம்மாபேட்டை திரு. S. பழனியாண்டி முதலியார் அவர்களுக்கும், சேலம் திரு. T. R. முருகேச முதலியார் அவர்களுக்கும், வேலநத்தம் திரு. சின்னய்ய முதலியார் அவர்களுக்கும், திருச்செங்கோடு திரு. T. R சந்தப்ப முதலியார் அவர்களுக்கும், திருச்செங்கோடு திரு. V. V C. நடேச முதலியார் அவர்கள் சகோதரர் திரு பெரியசாமி முதலியார் அவர்களுக்கும், உதகமண்டலத்தில் சுகத்திற்காக வாழ்ந்து வந்த திரு T. R. வையாபுரி முதலியார் அவர்களுக்கும், கோயம்பத்தூர் திரு. V.S செங்கோட்டைய்யா முதலியார் அவர்களுக்கும், கொல்லங்கோடு திரு. K. முத்துக் குமாரசுவாமி முதலியார் அவர்கள் குடும்பத்தாருக்கும், சித்தூர் திரு. C. P. இராமன் முதலியார் B. A., B. L., அவர்களுக்கும், குழல் மன்னம் திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்களுக்கும், பழம் பாலக்கோடு திரு. வேலாயுத முதலியார் அவர்களுக்கும் கூட்டாலை திரு. அண்ணாமலை முதலியார் அவர்களுக்கும் பாலப்புரம் காலஞ்சென்ற திரு. மந்திரி முதலியார் அவர்கள் சிறிய தகப்பனார் அவர்களுக்கும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தாரும் மேற்படி இரண்டு பிரதிநிதிகளும் மிகுந்த நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். திருவாளர்கள் அம்மாபேட்டை S. பழனியாண்டி முதலியார் அவர்களுக்கும் கொல்லங்கோடு திரு. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்களுக்கும், சொக்கலிங்க முதலியார் அவர்களுக்கும், C. P. இராமன் முதலியார் அவர்களுக்கும் பிரதிநிதிகள் கூட பல ஊர்களுக்கும் சென்று உதவி செய்ததற்காக திரு. பன்னிருகைப் பெருமான் முதலியார் திரு. V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் ஆகிய இருவரும் பிரத்தியேக நன்றி செலுத்திக் கொள்கிறார்கள்.

## வடஆர்க்காடு ஜில்லாவில் பிரசாரம்

18-5-29-ல் திரு. மா. அ. கனகசபை முதலியார், திருப்பத்தூர் திரு. பி. ந. கந்தசாமி முதலியார் ஆகிய இருவரும் சென்னையிலிருந்து புறப்பட்டு உத்திரன்மேரூர், மானம்பதி, பெருநகர் முதலிய ஊர்களுக்குச் சென்று கல்விநிதிச் சீட்டு விஷயமாகப் பிரசாரம் செய்தார்கள். 21-5-29-லிலிருந்து 5-6-29-ல் வரையில் திரு. பி. ந. கந்தசாமி முதலியார், உத்திரன்மேரூர் கா. உ. பொன்னுசாமி முதலியார் ஆகிய இருவரும் அகரம் தூளி, கொடுங்காலூர், கொட்டை, வழூர், அம்மையப்பட்டு, திருவோத்தூர், அசனம்மாபேட்டை, வடமணப்பாக்கம், கலவை, விளாப்பாக்கம், ஆரணி, வாழைப்பந்தல் முதலிய இடங்களுக்குச் சென்று சில விடங்களில் கூட்டங்கள் கூட்டி உபந்யாசங்கள் செய்தும் இதரவிடங்களில் கல்விநிதிச் சீட்டிற்காகப் பிரசாரஞ் செய்தும், மித்திரனுக்கு அநேக சந்தாதேயர்களைச் சேர்த்துக் கொண்டும் வந்தார்கள்.

## தஞ்சை ஜில்லாவில் பிரசாரம்

நமது தலைச்சங்கத்தின் ஆதரவில் தஞ்சை ஜில்லாவுக்கு அனுப்பப்பட்ட பிரசாரகர்களான திருவாளர்கள் A. S. முத்தைய முதலியார், S. S. கந்தசாமி முதலியார் ஆகிய இருவரும் திருவாரூர், சிக்கில், பொருள்வைத்தசேரி, சங்கமங்கலம் முதலிய இடங்களுக்குச் சென்று 15-5-29-ல் கவிச்சக்ரவர்த்தி ஒட்டக்கூத்தர் ஜென்ம க்ஷேத்திரமாகச் சொல்லப்படும் மணக்குடிக்குப் போயினர். இங்குத் திருவாளர்கள் காளிமுத்து முதலியார், சீனிவாச முதலியார் இவர்கள் பெருமுயற்சியால் ஒரு பொதுக்கூட்டம் திரு. எஸ். கந்தசாமி முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. அச்சமயம் விசேஷ உபந்யாசங்கள் நடந்தன. அவ்வூர் பாடசாலைத் தலைமை உபாத்தியாயர் திரு. சுந்தரதேவர் அவர்கள் கல்வியின் அவசியத்தைப்பற்றியும் இவ்வூர்ப் பள்ளிக்கூடத்தை 7-வது வகுப்பு வரையிலுள்ள செகண்டரி ஸ்கூலாக்க வேண்டுமென்பதைப் பற்றியும் வற்புறுத்திப் பேசியது குறிப்பிடத் தக்கது. தலைவர் அவர்களது நீண்ட முடிவுரையின் பிறகு இரவு 12 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது. வலங்கைமான், கொடவாசல் முதலிய பல இடங்களிலும் பிரசாரம் செய்யப்பட்டது.

## தென்னார்க்காடு ஜில்லாவில் பிரசாரம்

6-5-29-ல் பிரதிநிதிகளாகிய திருவாளர்கள் A. S. முத்தையா முதலியார், T. A. சண்முக முதலியார் அவர்கள் சென்னையினின்றும் இரவு 9 மணிக்குப் புறப்பட்டு 7-5-29 பகல் 4 மணிக்கு வலங்கைமானை யடைந்து திரு. S. S. கந்தசாமி முதலியாருடன் 8-5-29 கொடவாசல் சென்று 9-5-29 இரவு சமூக முன்னேற்றத்தைப் பற்றி உபந்யாசம் செய்து வலங்கைமான் முதலிய இடங்களைப் பார்த்துக் திரு T. A. சண்முக முதலியார் தென்னார்க்காடு ஜில்லாவில் பிரசாரஞ் செய்ய 12-5-29 பழைய வண்டிபாளையம் அடைந்து காஞ்சிபுரம் திரு. து. செ. கந்தசாமி முதலியார் அவர்களுடன் புது வண்டிபாளையம், திருப்பாதிரிப்புலியூர், முதலிய இடங்களில் பிரசாரம் செய்துவிட்டு 14-5-29 குறிஞ்சிபாடியை யடைந்து மாஜி யூனியன் சேர்மென் திரு. நாராயணசாமி முதலியார், ஜவுளி வியாபாரிகள் திருவாளர்கள் பொ. சிங்கார முதலியார், ப. கு. அருணாசல முதலியார் நாட்டாண்மைக்கார் திரு. பழனிவேல் முதலியார், வி. ஆறுமுக முதலியார், யூனியன் சேர்மென் வேலாயுத முதலியார், ல. க. ஆறுமுக முதலியார், இவர்கள் உதவியால் மீனாக்ஷிபேட்டை, கஞ்சநாதப்பேட்டை முதலிய இடங்களில் பிரசாரம் செய்து 15-5-29 இரவு 8 மணிக்கு அவ்வூர் மாரியம்மன் கோயிலில் திரு. அரி. சிங்காரவேல் முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு செங்குந்தர் பொதுக்கூட்டம் கூட்டினர். அவ்வமயம் பிரதிநிதிகள் முறையே செங்குந்தர் முன்னேற்றமும், கல்விநிதிச் சீட்டும் என்பவைகளைப்பற்றி உபந்யசித்துக் குறிஞ்சிபாடி விழப்பளம், விநாயகர் ஆலயத்தில் 17-5-29-ல் முறையே ஒட்டக்கூத்தர், வீரநாராயண விஜயம் வல்லாள சரிதை முதலிய சரித்திரங்களை உபந்யசித்துவிட்டு 18-5-29-ல் கடலூரையடைந்து திரு. தி. நா. மாணிக்க முதலியாரைக் கண்டு கல்வி நிதிச் சீட்டு விற்பனைக்காக வேண்டிய ஏற்பாடுகளை செய்துவிட்டு 22-5-29 காலை கண்டாச்சிபுரத்தில் திரு. வை. ச. இராமலிங்க முதலியார் அவர்களைக் கண்டு உபசரிக்கப்பெற்று 2[illegible]-5-29-ல் செங்கமேடு (சித்தாத்தூர்) ஆலம்பாடி முதலிய இடங்களில் பிரசாரம் செய்யத் திரு. வை. ச. இராமலிங்க முதலியாருடன் சென்று பிரசாரஞ் செய்துவிட்டு 25-ல் திருக்கோயிலூர், திருப்பாலைப்பந்தல் சென்று சித்தாத்தூரையடைந்து 26-ல் இரவு 9 மணிக்கு திரு. [illegible]. மாணிக்க முதலியார் வீட்டில் திரு. வை. ச. இராமலிங்க முதலியார் தலைமையில் செங்குந்தர் பொதுக்கூட்டம் கூட்டினர். அவ்வமயம் நமது பிரதிநிதிகள் முறையே செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு, ஒழுக்கம் என்பதைப் பற்றி உபந்யசித்து மறுநாள் சென்னகுணம், சென்று, அன்றிரவு 9 மணிக்குத் திரு. வை. அருணாசல முதலியார் அவர்கள் வீட்டில் கூடிய பொதுக்கூட்டத்தில் திரு. வை. ச. இராமலிங்க முதலியார் நமது பிரதிநிதிகளை அறிமுகப்படுத்தித் திரு. தி. அ. சண்முக முதலியாரும் திரு. து. செ. கந்தசாமி முதலியாரும் முறையே கொல்லாமை, கல்வி என்னும் விஷயத்தை உபந்யசித்து. மறுநாள் இடாரை யடைந்து திரு. ஆ. மு. நடராஜ முதலியாரது பெரு முயற்சியால் இரவு 9-மணிக்குச் செங்குந்த கூட்டத்தைக் கூட்டினார்கள். திரு. வை. ச. இராமலிங்க முதலியாரும், நமது பிரதிநிதிகளும் நம்மவர் சீரடையும்படி வேண்டிய கருத்தமைந்த உபந்யாசங்களைச் செய்து மறுநாள் கண்டாச்சிபுரத்தை யடைந்தார்கள்.



(18)

30-6-29-ல் நமது தலைச்சங்கப் பிரதிநிதிகளும் திரு. வை. ச. இராமலிங்க முதலியாரும் ஒட்டம்பட்டு என்னும் கிராமத்தை யடைந்து பிரபல செல்வந்தர் திரு. சிங்கார முதலியார், கிராம முனிசீப்பு திரு. வி. கதிர்வேல முதலியார் இவர்களால் உபசரிக்கப்பெற்றனர். அன்றிரவு திரு. சிங்கார முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய செங்குந்த பொதுக்கூட்டத்தில் நமது பிரதிநிதிகள் முறையே செங்குந்தர் ஒத்துழைப்பு, தலைச்சங்கம், நமது பத்திரிகை என்னும் விஷயங்களை உபந்யசித்துவிட்டு மறுநாள் 1-6-29-ல் வலங்கைமான் திரு. S. S. கந்தசாமி முதலியாரும், திரு. து. செ. கந்தசாமி முதலியாரும், திரு. தி. அ. சண்முக முதலியாரும், புவனகிரியை யடைந்து பெரியாத்தூர் திருவாளர்கள் பா. ந. பொன்னையபல முதலியார், தி. வ. க. மாரிமுத்து முதலியார் முதலிய பிரமுகர்களால் வரவேற்று உபசரிக்கப்பெற்று ஸ்ரீமத் சிங்காரவேலு சுவாமிகள் அவர்களைக் கண்டு நமது சமூகச் சம்பந்தமான சில விஷயங்களைப் பேசி, மறுநாள் ஸ்ரீவெற்றி வேலாயுதசாமி கோயிலில் மாலை 6-மணிக்கு ஸ்ரீமத் சிங்காரவேலு சுவாமிகள் தலைமையில் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டினர். அதுகாலை திரு. து. செ. கந்தசாமி முதலியார், தலைச்சங்கம் என்னும் விஷயத்தையும், திரு. தி. அ. சண்முக முதலியார், சீர்திருத்தம் என்னும் விஷயத்தையும், திரு. S. S. கந்தசாமி முதலியார், பத்திரிகை என்னும் விஷயத்தையும் முறையே பேசி இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது. ஷை சுவாமிகள் நமது சமூக சம்பந்தமாக இனி வேலைசெய்ய முற்படுகிறேன் என்று உறுதியாகக் கூறியது இங்கே குறிக்கற்பாலதொன்று.

மறுநாள் 4-6-29-ல் திரு. தி. அ. சண்முக முதலியாரும், திரு. S. S. கந்தசாமி முதலியாரும், ஸ்ரீமுஷ்ணம் அடைந்து அவ்வூர் போஸ்டு மாஸ்டர் திரு. வேல்முருக முதலியார் அவர்களால் உபசரிக்கப்பெற்று அன்று மாலை ஆண்டிமடம் சென்று, தாலுக் போர்டு மெம்பரும், கோவாப்ரேடிவ் பாங்கு சேர்மெனும் ஜவுளி வியாபாரியுமாகிய திரு. சிவசிதம்பரம் முதலியார் அவர்கள் ஊரில் இல்லாமையால் நமது பிரதிநிதிகள் வேலைசெய்ய முடியாமல் ஒருநாள் இருந்தும் பயன்படாது போய்விட்டது.

5-6-29-ல் காட்டுமன்னார் கோயிலையடைந்து உடையார்குடி ஜவுளி வியாபாரியும் செல்வந்தரும் ஆகிய திரு. சின்னதம்பி முதலியார் அவர்களால் உபசரிக்கப்பெற்று மறுநாள் லால்பேட்டையை அடைந்து திருவாளர்கள் சிவக்கொழுந்து முதலியார், கந்தசாமி முதலியார், மலைக்கொழுந்து முதலியார், அப்பாதுரை முதலியார் முதலிய செங்குந்த பிரமுகர்களால் வரவேற்று உபசரிக்கப்பெற்று 7-6-29-ல் இரவு 8-மணிக்கு அவ்வூர் யூனியன் ஆபிசில் கூடிய செங்குந்தர் பொதுக்கூட்டத்தில் திரு. தி. அ. சண்முக முதலியார், கல்வி நிதிச் சீட்டும் கல்வியும் என்னும் விஷயத்தையும், திரு. S. S. கந்தசாமி முதலியார், "செங்குந்த மித்திரன்" என்னும் விஷயத்தையும் உபந்யசித்த பின் இரவு 1-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

மறுநாள் பகல் 11-மணிக்குத் திரு. கந்தசாமி முதலியார், ஜவுளி வியாபார தலத்தில் கூடிய கூட்டத்தில் அவ்வூரில் மிக்க பழமையாயும் ஊக்கத்தோடும் வேலை செய்து வந்த செங்குந்த ஞானப்பிரகாச சங்கம் வேறு சிறு பிளவுகளால் முயற்சி குன்றியிருந்ததால் திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் அச்சங்கத்தைப் புதுப்பித்துத் தலைவர் முதலிய உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்து, சங்கம் என்பதைப்பற்றி ஒருமணி நேரம் உபந்யசித்து செங்குந்த ஞானப்பிரகாச சங்கம் எனப் புதுப்பித்து முறையே நடத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு மாலை 4-மணிக்கு உடையார்குடியை யடைந்து அவ்வூர் பஜனை மடத்தில் இரவு 9-மணிக்கு வைத்தியர் திரு. சி. கணபதி முதலியார்

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

சுக்கில௵ புரட்டாசி௴ (1929௵ செப்டம்பர்௴—அக்டோபர்௴) தக்ஷிணாயனம், வருஷருது

| இங்கிலீஷ். | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | நேத்திரம். | ஜீவன். | சிராத்த திதி. | யோகினி. | விசேட நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செப்டம்பர் 16 | சுக்கில புரட்டாசி 1 | திங் | திர 54-8 | அ 53-35 | ஸி 60 | 2 | 1 | சூன் | தென்கி | பிரதோஷம் |
| 17 | 2 | செவ் | சது 56-0 | ச 57-5 | ம 60 | 2 | 1 | சது | தெமே | ஆனந்தவிரதம் |
| 18 | 3 | புத | பௌ○ 56-53 | பூ 59-20 | அ 59-30 ஸி | 2 | 1 | பௌ | தெற்கு | பௌர்ணமி |
| 19 | 4 | வியா | பிர 56-15 | உ 60 | ஸி 60 | 2 | 1 | பிர | மேற்கு | |
| 20 | 5 | வெ | துதி 54-50 | உ 0-28 | ஸி 0-28 அ | 2 | 1 | துதி | வடமே | |
| 21 | 6 | சனி | திரி 52-33 | ரே 0-38<br>அ 59-58 | ம 0-38 ஸி | 2 | 1 | திரி | வடகிழ | |
| 22 | 7 | ஞா | சது 49-25 | பர 58-35 | ஸி 60 | 2 | 1 | சது | ஆகாசம் | |
| 23 | 8 | திங் | பஞ் 45-40 | கி* 56-38 | ம 56-38 அ | 2 | 0 | பஞ் | பூமி | கிருத்திகை |
| 24 | 9 | செவ் | சஷ் 41-23 | ரோ 53-58 | அ 53-8 ஸி | 2 | 0 | சஷ் | கிழக்கு | |
| 25 | 10 | புத | சப் 36-33 | மி 50-48 | ஸி 60 | 1 | ½ | சப் | வடக்கு | மகாலக்ஷ்மிவிரதம் |
| 26 | 11 | வியா | அஷ் 31-15 | தி 47-18 | ம 47-18 அ | 1 | ½ | அஷ் | தென்கி | |
| 27 | 12 | வெ | நவ 25-33 | பு 43-13 | ஸி 48-16 ம | 1 | ½ | நவ | தெமே | |
| 28 | 13 | சனி | தச 18-58 | பூ 39-13 | ஸி 39-13 ம | 1 | ½ | தச | தெற்கு | |
| 29 | 14 | ஞா | ஏகா 13-43 | ஆ 35-15 | ஸி 35-15 ம | 1 | ½ | ஏகா<br>துவா | மேற்கு | |
| 30 | 15 | திங் | துவா 8-0 | ம 31-30 | ம 31-30 ஸி | 0 | ½ | திர | வடமே | பிரதோஷம் |
| அக்டோபர் 1929 1 | 16 | செவ் | திர 2-43<br>சது 58-13 | பூர 28-20 | ஸி 28-20 அ | 0 | ½ | சது | வடகிழ | |
| 2 | 17 | புத | அ● 54-28 | உ 26-3 | அ 26-3 ம | 0 | 0 | அமா | பூமி | மாளய அமாவா (சை |
| 3 | 18 | வியா | பிர 52-28 | அ 24-53 | ஸி 60 | 0 | 0 | பிர | கிழக்கு | |
| 4 | 19 | வெ | துதி 51-43 | சி 25-5 | ஸி 60 | 0 | 0 | துதி | வடக்கு | |
| 5 | 20 | சனி | திரி 52-40 | சு 26-58 | அ 26-58 ஸி | 0 | 0 | திரி | தென்கி | |
| 6 | 21 | ஞா | சது 55-18 | வி 30-28 | ம 60 | 0 | 0 | சது | தெமே | |
| 7 | 22 | திங் | பஞ் 59-25 | அ 35-25 | ஸி 60 | 1 | ½ | பஞ் | தெற்கு | |
| 8 | 23 | செவ் | சஷ் 60 | கே 41-43 | ம 41-43 அ | 1 | ½ | சஷ் | மேற்கு | |
| 9 | 24 | புத | சஷ் 4-50 | மூ 48-53 | ம 48-53 அ | 1 | ½ | சப் | மேற்கு | |
| 10 | 25 | வியா | சப் 10-45 | பூ 56-10 | ஸி 60 | 1 | ½ | அஷ் | வடமே | |
| 11 | 26 | வெ | அஷ் 16-35 | உ 60 | ஸி 60 | 1 | ½ | நவ | வடகிழ | |
| 12 | 27 | சனி | நவ 22-38 | உ 3-25 | ஸி 60 | 1 | ½ | ... | ஆகாசம் | ஆயுதபூஜை |
| 13 | 28 | ஞா | தச 27-22 | தி 9-43 | அ 9-43 ம | 2 | ½ | தச | பூமி | விஜயதசமி |
| 14 | 29 | திங் | ஏகா 30-42 | அ 14-50 | ஸி 60 | 2 | 0 | ஏகா | கிழக்கு | |
| 15 | 30 | செவ் | துவா 32-35 | ச 18-35 | ம 60 | 2 | 1 | துவா | வடக்கு | |
| 16 | 31 | புத | திர 32-48 | [illegible] 20-38 | [illegible] 20-38 ஸி | 2 | 1 | திர | தென்கி | |

44427

# செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு

## சீட்டுப் போடவேண்டிய அவசியமும் நோக்கமும்

சமூக முன்னேற்றத்திற்கும் தேச முன்னேற்றத்திற்கும் கல்வி இன்றியமையாததென்பது யாவருமறிந்ததே. இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்கள் மற்றெல்லாத் தேசங்களினும் சிறந்து திகழ்வதற்குக் காரணம் அத்தேச மக்களின் கல்வியறிவுத் தேர்ச்சியே. நம் நாட்டில் நூற்றுக்குப் பத்துப் பேரும் எழுதப் படிக்கத் தெரிந்தவரல்லர். அதிலும் நம்குல மக்களில் படித்தவர் தொகை பிறர் எள்ளி நகையாடுதற் கிடமானசொற்ப எண்ணிக்கையே. இவ்விழுக்கை நீக்குதற்கு ஆரம்பப் படிப்பு, கலாசாலை உயர்தரப் படிப்பு, கல்லூரிப் படிப்பு, மற்றும் வியாபாரம், வைத்தியம், போதனு முறை, சட்டம், கைத்தொழில் (நெசவு), என்ஜினீரிங் முதலிய துறைகளில் நம் குல மாணுக்கர்கள் தேர்ச்சிபெற லவசியம்.

அங்ஙனம் தேர்ச்சி பெறுதற்குப் பண ஒத்தாசை இன்றியமையாதது. சாசுவதமான உபகாரநிதியொன்று ஏற்படுத்தி அதன் வருவாயிலிருந்து நம் இனத்து மாணுக்கர்களுள் தக்கவர்களெல்லோருக்கும் உதவி செய்தல் வேண்டும். இந்நிதியிலிருந்து வெளிநாட்டுச் சர்வகலாசாலைப் பயிற்சிக்கும், 'கைத்தொழிற் கல்விக்கும் புத்திகூர்மையும் ஊக்கமுமுள்ள மாணுக்கர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதற்கு வேண்டிய அளவு வருவாய் ஏற்படுதல் அவசியம். பரம ஏழைகளாகிய சில புத்திகூர்மையான செங்குந்த மாணுக்கர்களுக்கு உபகாரச் சம்பளமேயன்றி உண்டி, உடை, இருப்பிடங்களையும் இலவசமாகத் தந்துதவலுநும் அவசியமே. இதற்கொரு விடுதியினை இராஜதானி நகராகிய' சென்னையில் ஏற்படுத்த நம் சங்கம் முயன்றுவருகிறது. இதற்கும் ஒரு பெருநிதி அவசியமென்பது அன்பர்கள் அறிந்ததே.

### நிருவாக சபை.

இதனைக் கருதியே சென்ற விபவவூ தைமீ 7, 8 தேதிகளில் ஈரோட்டில் கூடிய தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டில் செங்குந்தர் கல்விநிதிக்குப் பொருள் திரட்டுதற்குக் கூறிய மார்க்கங்களில் "சீட்டு" ஒன்று ஆரம்பித்து அதில் பெருந்தொகை மிச்சப்படுத்துதல் வேண்டுமெனத் தீர்மானமானது. இதை முன்னிட்டுத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிருவாக சபையார் 1-5-29-ல் கூடிய தமது கூட்டத்தில் நமது சங்கத்தின் மேல்பார்வையில் 'செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு' ஒன்று நடத்தத் தீர்மானித்திருக்கிறார்கள்.

## செங்குந்தர் கல்விநிதிச் சீட்டின் விபரம்.

டிக்கட் ஒன்றுக்கு எட்டணு (0-8-0) வீதம் 1 லக்ஷம் ரூபாய் வசூல் செய்து, அச்சுக்கூலி, சிப்பந்திச் சம்பளம், பிரயாணச் செலவு முதலியவற்றிற்காக ரூ. 15,000 போக, மீதி ரூ. 85,000-த்தில் ரூ. 60,000 செங்குந்தர் கல்விநிதிக்காக வைத்துக்கொண்டு, மிகுதியுள்ள ரூ. 25,000-த்தைச் சீட்டுக்கள் வாங்கிய நண்பர்களுக்குச் சீட்டுக் குலுக்கிக் கீழ்க்கண்டபடி பிரைசுகளாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | 1-வது பிரைஸ் 1-க்கு | ரூ. 5000 | ஆக | ரூ. 5000 |
| (2) | 2-வது ,, ,, | ,, 2500 | | ,, 2500 |
| (3) | 3-வது ,, ,, | ,, 1000 | | ,, 1000 |
| (4) | 4-வது ,, ,, | ,, 500 | | ,, 500 |
| (5) | 5-க்கு | ,, 200 | | ,, 1000 |
| (6) | 10 ,, | ,, 100 | | ,, 1000 |
| (7) | 20 ,, | ,, 50 | | ,, 1000 |
| (8) | 40 ,, | ,, 25 | | ,, 1000 |
| (9) | 100 ,, | ,, 15 | | ,, 1500 |
| (10) | 300 ,, | ,, 10 | | ,, 3000 |
| (11) | 600 ,, | ,, 5 | | ,, 3000 |
| (12) | 1500 ,, | ,, 3 | | ,, 4500 |

மொத்தத் தொகை ரூ. 25,000

ஒரு டிக்கட்டின் விலை எட்டணுவாக 21 டிக்கட்டுகளடங்கிய ஒரு புத்தகத்தை விற்கும் நபர் ரூ. 10 அனுப்பிவிட்டு 1 டிக்கட்டைக் கமிஷனுக்காக எடுத்துக்கொள்ளலாம். 20 டிக்கட்டுக்குக் குறைந்து விற்கிறவர்களுக்குக் கமிஷன் கிடையாது.

### கல்விநிதிச் சீட்டுக்கள் வாங்குவோர் கவனிக்க வேண்டிய விஷயங்கள்.

ஷை கல்விநிதிக் கமிட்டியார் ஏற்பாட்டின்படிச் சீட்டுச் சம்பந்தமான கணக்கு, ரிக்கார்டு முதலியவை ஜாக்கிரதையாய் வைக்கப்பட்டுவருகின்றன. டிக்கட் வாங்கியவர் எவரேனும்கணக்குப்பார்க்க விரும்பினல் ஆபீஸ் நேரத்தில் தேவையானபோது பார்த்துக் கொள்ளலாம்.

டிக்கட்டிலுள்ள ஒவ்வொரு ஜடத்தையும் பூர்த்தியாக எழுதி அதன் ஒருபாகத்தைப் பணம் கொடுத்தவர் பெற்றுக்கொள்ள வேண்டும். மற்றொரு பாகத்தையும் பணத்தையும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பிவிடவேண்டும். டிக்கட் புத்தகங்கள் தேவையானவர்கள் ஷைகமிட்டிக் காரியதரிசிக்கு அல்லது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கக் காரியதரிசிக்கு எழுதியாவது, அல்லது ஆங்காங்குப் பிரசாரம் செய்துவரும் நமது தலைச்சங்கப் பிரசாரகர்கள் மூலமாவது பெற்றுக் கொள்ளலாம். ஷை கல்விநிதிக் கமிட்டிக்குப் பணம் சேராத டிக்கட்டுக்கள் குலுக்கப் பெறும் சீட்டுக்களோடு எவ்விதத்திலும் சேர்க்கப்படமாட்டா. டிக்கட்டுப் பெற்றவர்கள் தங்கள் நெம்பர் கல்விநிதிச் சீட்டில் சேர்ந்திருக்கிற விபரம் தெரிய வேண்டுமானுல் ரிப்ளை கார்டில் தங்கள் டிக்கட்டு நெம்பரையும் புத்தக நெம்பரையும் குறித்தனுப்பித் தெரிந்துகொள்ள வேண்டும்.

## செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு

### கல்விநிதிச் சீட்டு எடுத்தல்.

1930ஞ ஜனவரிமாதக் கடைசியில் நமது இரண்டாவது மகாநாட்டுப் பந்தலில் சீட்டுக் குலுக்கிப் பிரைஸ் எடுக்கப்படும். சீட்டுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பூராத்தொகை ஒரு லக்ஷரூபாயும் வசூலாகாதது குறையுமானல் விகிதாசாரப்படிப் பிரைஸ்கள் குறைந்தே கொடுக்கப்படும். எல்லாத் தொகைகளும், டிக்கட்டுகளும் 1929ஞ டிசம்பர்மீ 31உக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு வந்து சேர்ந்துவிடவேண்டும்.

### பிரைஸ் வந்தவர்களுக்கு அறிவிக்கும் விதம்.

சீட்டு எடுத்தானவுடன் முடிவு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். பிரைஸ் வந்த முதல் 20 நபர்களுக்கு அவர்கள் செலவில் தந்தி கொடுக்கப்படும். மற்றவர்களுக்குத் தபால் மூலம் அவர்கள் செலவில் தெரிவிக்கப்படும். பிரைஸ் பெற்றவர்கள் சீட்டுப் போட்ட ஒரு மாதத்திற்குள் தங்களிடமுள்ள நம்பரில் கையெழுத்திட்டு அனுப்பிப் பணத்தை நேராகவோ அல்லது மணியார்டர்மூலமாகவோ பெற்றுக்கொள்ள வேண்டியது.

ஒவ்வொருவரும் நம்மவருள் கல்வியினை வளர்ப்பதினையே தங்கள் முக்கியக் கடமைகளுள் ஒன்றாகக் கருதிப் பொது நன்மைக்கான இந்நிதியினைத் தவறாது ஆதரிக்க வேண்டுகிறோம்.

ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி.,
பீ. சே. மாணிக்கவாசக முதலியார்,
அமைச்சர்கள்,

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,
சென்னை. 8—5—29.

---


## கற்பகத் தைலம்

குழந்தை வியாதிகட்கு அமிர்தம்போன்றது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதது.

ஒரு புட்டியின் விலை ரூபா ஒன்றே.

உபயோகிக்கும் முறை புட்டியுடன் அனுப்பப்படும்.

முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டா.

எல்லா வியாதிகட்கும் ஏற்ற மருந்துகள் கிடைக்கும்.

ப. அங்கமுத்து முதலியார்,
சிகிச்சாஞான பண்டிதர்,
கற்பக மெடிகல் ஹால், சத்தியமங்கலம் கோயம்புத்தூர்.


---

## செங்குந்தமித்திரன் ஆபீசு

சென்னை பவழக்காரத் தெரு 1/19 நெ.

வீட்டிற்கு மாற்றப்பட்டிருக்கிறது.

இனி கடிதம், மணியார்டர், முதலியவை அனுப்புவோர்

செங்குந்தமித்திரன் ஆபீசு, சென்னை

என்ற விலாசத்திற்கே எழுதுமாறு கேட்டுக்கொள்ளுகிறோர்கள்.

---


This journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam Madras, at 31 Armenian Street, Madras, and is printed by T. C. Nataraja Mudaliar at the Cambridge Press 3/19-A, Armenian Street, Madras.